விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail : valampurii@sltnet.lk
valampurii@yahoo.com

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-3289)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 18 ஞாயிற்றுக்கிழமை (03.01.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 015

# 617 ஏக்கர் காணியில் கடற்படையினருக்கு முகாம்!

## முள்ளிவாய்க்கால் கிழக்கில் சுவீகரிக்க முயற்சி

(பனிக்கன்குளம்)

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கருதி முல்லைத்தீவு வட்டுவாகல், முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதிகளில் கடற்படையினர் நிலைகொண்டுள்ள பொதுமக்களின் 617 ஏக்கர் காணியில் கடற்படை முகாம் அமைக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி வசந்த பெரேரா அறிவித்துள்ளார். இதற்காக காணிகளை இழப்பவர்களுக்கு சிறந்த நஷ்டஈடு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்திருந்தார். எனினும் காணி உரிமையாளர்கள் இந் நடவடிக்கைக்கு பலத்த எதிர்ப்பை தெரிவித்ததுடன் நட்டஈட்டைப் பெற்றுக்கொண்டு கடற்படைக்கு காணியை விட்டுக் கொடுக்க முடியாது என இறுக்கமாகத் தெரிவித்துள்ளனர். (15ஆம் பக்கம் பார்க்க)

## உடுவிலில் அதிகளவு டெங்குத் தாக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் உடுவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் கடந்த ஆண்டு 2015-ல் 90 பேர் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளார்கள் என சுகாதார வைத்தியதிகாரியின் புள்ளி விபரங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

2015-ம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் தொடர்ந்து பெய்த மழை காரணமாக அதிகரித்த மழை வெள்ளத்தினால் இந்த மாதத்தில் மட்டும் 36 16 ஆம் பக்கம் பார்க்க....

## புலனாய்வு பிரிவு ஜனாதிபதிக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தேசிய அரசைக் கவிழ்ப்பதற்கு கூட்டு எதிர்க்கட்சியினர் பல்வேறு சதிகளை முன்னெடுத்து வருவதாக புலனாய்வுப் பிரிவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எசசரிக்கை அறிக்கை சமர்ப்பித்ததை அடுத்து, சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் ஜனாதிபதி விசேட கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளார்.

மகிந்த ஆதரவாளர்களான கூட்டு எதிர்க்கட்சியினர் தெற்கில் பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தி மைத்திரி - ரணில் தலைமையிலான தேசிய அரசைக் கவிழ்ப்பதற்கு சதித்திட்டங்களை மேற்கொண்டு வருவதாகவும், அதற்கமையவே வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக பல்வேறு ஆர்ப்பாட்டங்களைத் தூண்டி 15 ஆம் பக்கம் பார்க்க....



கம்பவாரிதியின் மடலுக்கு புருசோத்தமனின் விளக்கம் நாளை வலம்புரியில்...

## உ/த பரீட்சை பெறுபேறு இன்று

(கொழும்பு)

2015ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இன்றையதினம் வெளியிடப்படவுள்ளது.

இந்த நிலையில் பரீட்சை பெறுபேறுகளை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளமான www.doenets.lk முகவரியில் பார்வையிட முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். இன்றையதினம் வெளியாக 15 ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் மக்களின் கருத்துக்களை அறிந்து

# அரசியல் தீர்வை வரையும் நிபுணர்களின் பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக தமிழ் மக்கள் பேரவையால் அமைக்கப்பட்ட அரசியல் தீர்வு திட்டத்தை தயாரிப்பதற்கான உபகுழு நேற்றையதினம் உத்தியோக பூர்வமாக தமது பணிகளை ஆரம்பித்துள்ளது.

தமிழ் மக்கள் பேரவை கடந்த வருடம் டிசம்பர் 27-ம் திகதி 2-ம் அமர்வினை நடத்தியிருந்தது.

இதில் தமிழ் மக்களுடைய தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வினைக் காண்பதற்கான 15 பேர் அடங்கிய உபகுழு உருவாக்கப்பட்டிருந்தது.

இதில் ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட கட்சிகளினதும், வடமாகாண முதலமைச்சரினரும் 2 பிரதிநிதிகள் சிவில் சமூகத்தினர் உள்ளடங்கிய 15 நிபுணர்கள் நியமிக்கப்பட்டி 15 ஆம் பக்கம் பார்க்க....

## பாகிஸ்தான் பிரதமர் நாளை வருகிறார்

(கொழும்பு)

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் மூன்று நாள் பயணமாக நாளை திங்கட்கிழமை பிற்பகல் இலங்கைக்கு வரவுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் அழைப்பின் பேரில், பாகிஸ்தான் பிரதமர், இந்த அதிகார பூர்வ பயணத்தை மேற்கொள்கிறார்.

திங்கட்கிழமை மாலை கொழும்பு வரும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ ஷெரீப்புக்கும், ஜனாதிபதிக்கும் இடை 15 ஆம் பக்கம் பார்க்க....

அன்பு வாசகர்களே!

ஜோதிட கலாமணி
சிவல்புரிசிங்காரம்
எழுதும் 2016
புதுவருட பலன்கள்
உங்கள்
வலம்புரியில் வாசிக்கத்
தவறாதீர்கள்.

## 12 இலக்கங்களைக் கொண்ட புதிய அடையாள அட்டை

### ஆட்பதிவு திணைக்களம் அறிமுகம்

(கொழும்பு)

12 இலக்கங்களைக் கொண்ட புதிய தேசிய அடையாள அட்டை நேற்று முன்தினம் முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளத்தாக ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

16 வயதை பூர்த்தி செய்துள்ள இலங்கை பிரஜைகள் அனைவரும் ஆட்பதிவு திணைக்களத்தில் தம்மை பதிவு செய்து, அடையாள அட்டையை பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதுவரையில் 9 இலக்கங்களும், ஆங்கில எழுத்தும் கொண்ட அடையாள அட்டைகள் விநியோகிகப்பட்டு வந்தன.

இந்த அடையாள அட்டைகளில் உள்ள 9 இலக்கங்கள், நான்கு பாகங்களாக பிரிக்கப்படும். இதனபடி முதல் பாகத்தில் உள்ள இரண்டு எண்கள், 16 ஆம் பக்கம் பார்க்க....

## தோட்டக் கிணற்றில் சடலம்

(யாழ்ப்பாணம்)

தோட்டக் கிணற்றிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் கொக்குவில் நந்தாவில் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

வெளிநாடொன்றிலிருந்து வந்து கொக்குவிலில் உள்ள தனது வீட்டில் தங்கியிருந்த பாலசுப்பிரமணியம் (வயது-80) என்பவரே மர்மமாக உயிரிழந்த நிலையில் தோட்டக் கிணற்றில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 15 ஆம் பக்கம் பார்க்க....



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இறால் பிடியில் ஈடுபடுவதற்கு கடற்படை, இராணுவம் தடைவிதிப்பு

## முல்லை.கடற்தொழிலாளர்கள் முறைப்பாடு

(புனிக்கன்குளம்)

முல்லைத்தீவு வட்டுவாகலில் இறால் பிடியில் ஈடுபடுவதற்கு கடற்படையினரும் இராணுவத்தினரும் தடை விதித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் வசந்த பெரேராவிடம் முல்லைத்தீவு கடற்றொழிலர்ளர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

வட்டுவாகல் பாலத்திலிருந்து பெருங்கடலுக்குச் செல்லும் இருபுறங்களிலும் கடற்படையினரும் இராணுவத்தினரும் நிலைகொண்டுள்ளதாகவும் குறித்த இப்பகுதியிலேயே இறால்பிடியில் ஈடுபடுவதற்குதடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் கடற்றொழிலாளர்களினால் சுட்டிக்காட்டப்பட்டது.

மேற்படி நிலைமை தொடர்பாக கடந்த ஒருவாரத்துக்கு முன்னரும் முல்லைத்தீவு மாவட்டச்செயலரிடமும் கடற்றொழிலாளர்களினால் மனுவொன்று கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-281)


### தேவை

யாழ்ப்பாணத்தில் பயிர் செய்யக்கூடிய தோட்டக்காணி 10-20 ஏக்கர் 5 வருட குத்தகைக்கு தேவை.

தொடர்பு:- 0752034139 (3050)

### காணி விற்பனைக்கு

A9 வீதி நுணாவில் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் பருத்தித்துறை வீதியில் துர்க்கை அம்மன் கோவில் பாதை ஆரம்பத்தில் 27 பரப்பு காணியும், உடைந்த வீடு கிணற்றுடனும் 7 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்களுக்கு:-0778730129 (3053)


# வாகன விபத்தில் குடும்பஸ்தர் பலி

(குருமன்காடு)

மன்னார் உயிலங்குளம்- அடம்பன் பிரதான வீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையத்தின் வீதி போக்குவரத்துப்பிரிவு பொறுப்பதிகாரி ஆர்.ஆர்.சுமனசேகர தெரிவித்தார்.

அடம்பன் உயிலங்குளம் பிரதான வீதியூடாக துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்தவர் மீது, எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்த நிலையில், மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர் பரப்புக்கடந்தான் கிராமத்தைச் சேர்ந்த 51 வயதுடைய ஜோசப்பு சந்தியோகு என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை மன்னார் வீதி போக்குவரத்துப்பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(செ-250)

# தங்கத்தின் விலை குறைவடையும்!



(கொழும்பு)

தங்கம் இறக்குமதிக்கான வரியை 7.5 வீதத்தினால் குறைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதால், இவ்வருடம் தங்கத்தின் விலை குறைவடையும் என தேசிய ஆபரணங்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இத்தகவலை தேசிய ஆபரணங்கள் அதிகார சபையின் முகாமையாளர் சிறிசந்திர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய ஒரு பவுண் தங்கத்தின் விலை 4 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரம் ரூபா வரை குறைவடையும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-12)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603



## மரண அறிவித்தல்



### திருமதி பத்மாவதி குமாரவேலு

குரும்பசிட்டி தெல்லிப்பழையை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பத்மாவதி -குமாரவேலு (வயது-82) அவர்கள் கடந்த (27.12. 2015) ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் அன்றைய தினமே மாலை 5 மணிக்கு கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

77/5 மானிப்பாய் றோட், தாவடி
தொ.பே இல : 0779738802 (3044)
தகவல் :குமாரவேலு- கிருபாகரன் (மகன்)

## 6-ம் ஆண்டு நினைவலைகள்

### திருமதி விஜயகுமார் சர்வேஸ்வரி



பிறப்பு 1969-02-27
இறப்பு 2009-12-25

கண்ணின் மணிபோல் எம்மை காத்த அன்னையே
நீர் கால் பதித்த இடமெல்லாம்
எம் கண்ணீர்ப் பூக்கள் பூக்குதம்மா
யார் நினைத்தோம் உம்மை இழப்போம் என்று
உம் நினைவு எம் மனதில் அழியாத கோலமம்மா

(C-3288)

மகள் - ஜர்திகா ராஜராஜன்
மகன் - விஜயகுமார் ஜபேன்
தாய் - சிதம்பரம்
பேர்த்திமார் - அக்ஷிரா
அஷ்மிரா

அக்ஷிரா பவன்
ஆவரங்கால்.

## புத்திஜீவியைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



2015-12-15 ம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு, மகரகம இளைஞர் மன்றத்தில் ஜனாதிபதி விருதான அகில இலங்கை கலாபூசணம் இலக்கியம், வைத்தியம் விருது பெற்று பாராட்டிக் கௌரவிக்கப்பட்ட எமது குடும்ப குருகுல தெய்வமான, கலாபூசணம், சாமசிறிதேசமான்ய வைத்திய கலாநிதி

**பொன்னையா மயில்வாகனம் (பொன்மயில் இராசதுரை) அவர்கள்**

பருத்தித்துறை இம்பர்சிட்டியில் செட்டியார் எனும் பட்டப் பெயரில் பிறந்து வன்னி புதுக்குடியிருப்பில் தேவிபுரம் 'அ' (அ பகுதி) கிராமத்தில் வசித்துவரும் பேரறிஞர்; எம் குலவிளக்கு நீடூழி வாழ்ந்து மேலும் மேலும் பெரும் புகழ் பெற்று நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டுமென 'ஒன்றேகுலம், ஒன்றே தெய்வம், ஒன்றே உலகம்' எனும் பரம்பொருளை வேண்டி வாழ்த்தி வழுத்தும் பாசமிகு குடும்பத்தினர்

கைத்தொலைபேசி இல: 0776191128/ 0766385887
வீட்டுத் தொலைபேசி இல: 0212264103

வாழ்த்துவோர் :-
01. திருமதி இராசதுரை அழகம்மா - (மனைவி) இலங்கை
02. திருவாளர் இ.இராசவேல் (மகன்) -லண்டன்
03. இ.நிர்மலா (மகள்) - லண்டன்
04. யோ.வான்மதி (மகள்) - கனடா
05. இ.உதயராஜா (மகன்) - இலங்கை

(C-3291)

## மரண அறிவித்தல்



### திருமதி கெங்கேஸ்வரன் தீபா

முள்ளியவளை 4-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி கெங்கேஸ்வரன் தீபா நேற்று (02.01.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கிருஷ்ணமூர்த்தி - நகுலேஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வியும், கெங்கேஸ்வரனின் அன்புத் துணைவியும், உஷாலினியின் அன்புத் தாயாரும், அகல்யா (பிரான்ஸ்), சரண்ஜா, சிந்துஜன் (துளசி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் வடிவேல் மற்றும் சிவகங்கை ஆகியோரின் அன்பு மருமகளும், சுதர்சன் (பிரான்ஸ்) அவர்களின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2016) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு 4-ம் வட்டாரம் முள்ளியவளையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கற்பூரப்புல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
தொ.பே இல : 0775959483 (சி-3292)

# ஜனாதிபதியை நேரடியாக சந்தித்து பிரச்சினைகளைக் கூற சந்தர்ப்பம்

எதிர்வரும் 9 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேரடியாக தங்களது பிரச்சினைகளை கூறுவதற்கு, மக்களுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

பொது விடயங்கள் தொடர்பில் மக்களுக்கு காணப்படும் பிரச்சினைகள், முறைப்பாடுகளை தனிப்பட்ட ரீதியில் நேரடியாக ஜனாதிபதியிடம் தெரிவிக்கவே இந்த விசேட திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

அதி நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதியுடன் பொது மக்கள் தொடர்பு கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் மூலம் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்புகள் வலுப்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உத்தேச திட்டம் புத்தாண்டின் முதல் அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட உள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# புதிய கூட்டணி ஒன்றின் அவசியம் எழுந்துள்ளது

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

**புதிய கூட்டணி ஒன்றின் அவசியம் எழுந்துள்ளதாக முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நாட்டுக்காக செயற்படக்கூடிய வலுவான ஓர் அரசியல் கூட்டணியின் தேவை வெளிப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஜே.வி.பி.ஆகிய கட்சிகளின் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் புதிய அரசியல் கூட்டணி ஒன்றை விரும்புகின்றனர்.

எனவே புதிய அரசியல் கூட்டணியொன்று விரைவில் உருவாக்கக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன.

மீளவும் செயற்பாட்டு அரசியலில் ஈடுபடுவதா? இல்லையா? என்பது குறித்து இன்னமும் நான் தீர்மானிக்கவில்லை என பசில் ராஜபக்ஷ சிங்கள பத்திரிகையொன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார்.

இதேவேளை, புதிய அரசியல் கட்சி ஒன்று உருவாகியுள்ளதாகவும், ஆனால் அதில் மகிந்த ராஜபக்ஷ நடுநிலை வகிப்பார் என்றும் முன்னதாக செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மகிந்தவின் சீன விஜயம் குறித்து அமெரிக்கா அதிகளவு கவனம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சீன விஜயம் குறித்து அமெரிக்கா அதிகளவு கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விரைவில் சீனாவிற்கு விஜயம் செய்யவுள்ளார். மகிந்தவின் சீன விஜயம் குறித்து ஏற்கனவே அமெரிக்காவின் முக்கிய ஊடகங்கள் தகவல்களையும் அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளன.

மகிந்தவின் விஜயத்தின் சீன அரச தலைவர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் உள்ளிட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது. கடந்த காலங்களில் சீனா, இலங்கைக்கு வழங்கிய பல்வேறு உதவிகளுக்கு நன்றி பாராட்டும் நோக்கில் மகிந்த இந்த விஜயத்தை மேற்கொள்ள உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீனா விஜயம் செய்யும் மகிந்தவின் பாதுகாப்பு குறித்து அந்நாட்டு அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீன அரசாங்கத்தின் அழைப்பிற்கு அமையவே மகிந்த இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயம் குறித்து அமெரிக்கா மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாக இராஜதந்திர வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# வீதி விபத்துக்களில் சிக்கி 2015இல் 2763பேர் பலி

கடந்த வருடத்தில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 2763 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்புக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அமரசிறி சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை வரலாற்றில் ஒரு ஆண்டில் வீதி விபத்தில் அதிகமானோர் உயிரிழந்துள்ளமை இதுவே முதற் தடவையாகும்.

கடந்த வருடம் மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் 1007 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த 24 மணித்தியாலங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். (இ-7)

# ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு சாட்சியமளிப்போருக்கு அழுத்தம் கொடுத்ததால் சிறைத்தண்டனை

(கொழும்பு)

ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு சாட்சியமளிப்போருக்கு அழுத்தம் கொடுத்தால் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என பாரிய நிதி மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் லெசில் டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் எதிரில் சாட்சியமளிக்கும் சாட்சியாளர்களை அச்சுறுத்தி அழுத்தம் கொடுப்போரை சட்ட ரீதியாக தண்டிக்க ஆணைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

இவ்வாறு அழுத்தம் பிரயோகிப்போருக்கு சிறைத்தண்டனை பெற்றுக்கொடுக்க ஆணைக் குழுவிற்கு எந்த அதிகாரம் காணப்படுகின்றது.

தமக்கு பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாக ஆணைக்குழுவில் சாட்சியமளித்த சிலர் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு ஆணைக்குழு விசாரணை செய்யும் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

இதேவேளை, தெங்கு ஆய்வு அபிவிருத்திச் சபையில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பான விசாரணைகளில் சாட்சியமளித்தவர்கள், சாட்சியமளிக்க முன்னதாக முன்னாள் அமைச்சர் ஜகத் புஸ்பகுமார, முன்னாள் அரச உயர் அதிகாரி அஜித் வேரகொட ஆகியோர் அழுத்தம் பிரயோகித்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி சட்ட நடவடிக்கை எடுக்க ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# புதிய கட்சி உதயம் மகிந்த நடுநிலை?

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு கூட்டு எதிர்க்கட்சி சார்பில் புதிய கட்சி உருவாக்கம் குறித்த தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து கூட்டு எதிர்க்கட்சியின் பேச்சாளர் ஒருவர் சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு கூட்டு எதிர்க்கட்சி சார்பில் புதிய கட்சியொன்றை உருவாக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தியாகியுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகள் இணைந்து இந்தப் புதிய கட்சியை உருவாக்கவுள்ளனர்.

மேலும், எங்களுக்கு ஆதரவான அணியொன்றை இக்கட்சியின் ஊடாக தேர்தலில் போட்டியிட களமிறக்கும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம்.

எனினும் இக்கட்சியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தற்போதைக்கு இணைந்து கொள்ள மாட்டார். அதேநேரம் உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரத்தின் போது அவர் சுதந்திரக்கட்சிக்கு ஆதரவாகவும் நடந்து கொள்ள மாட்டார்.

நடுநிலையாக தனது செயற்பாடுகளைத் தொடர்வதற்கு அவர் தீர்மானித்துள்ளார் என்றும் கூட்டு எதிர்க்கட்சியின் பேச்சாளர் மேலும் அறிவித்துள்ளார். (இ-7)

# இலங்கையர்கள் எவருக்கும் ஐ.எஸ்ஸுடம் தொடர்பில்லை

(கொழும்பு)

இலங்கையிலுள்ள எந்தவொரு முஸ்லிம் பிரஜையும் ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்பு வைத்தவர்கள் அல்லர் என தபால் சேவை மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் அப்துல் ஹலீம் தெரிவித்துள்ளார்.

அரசியல் இலாபம் பெறும் நோக்கில் சிலர் வெளியிடும் அறிவிப்புக்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.எஸ். அமைப்புடன் தொடர்பு வைத்திருந்ததாக கூறப்பட்ட இலங்கையர்கள் குறித்து கடந்த காலங்களில் தகவல்கள் வெளியிடப்பட்டன. இருப்பினும், அந்த அமைப்பிற்கு இலங்கைக்குள் செயற்படுவதற்கு எந்த அவகாசமும் இல்லையெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

இதேவேளை, இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் ஐ.எஸ். அமைப்புடன் இணைந்து கொள்ள முஸ்லிம் அரசியல் வாதிகள் காரணம் என மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரச ஊழியர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவை நிறுத்துவதற்கான தருணம்

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் மேலதிக நேரக் கொடுப்பனவை நிறுத்துவதற்கான தருணம் வந்துள்ளதாக துறைமுகம் மற்றும் கப்பல்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அரச சேவையின் நோக்கம், அதன் இலக்கு என்பவற்றை சரியாக அடைந்துகொள்ள சகல அரச ஊழியர்களும் தமது சேவையினை எடுக்கும் சம்பளத்துக்கு நியாயமாக வழங்க வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

புதுவருடத்துக்கான செயற்றிட்டங்களை வெளியிடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# மக்கள் வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது

## சோமவன்ச கவலை



ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து, நாளுக்கு நாள் பொருட்களின் விலை அதிகரித்து மக்கள் வாழ முடியாத ஒரு நிலைமை நாட்டில் ஏற்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டை சகல இலங்கை வாழ் மக்களும் வயிற்றில் நெருப்பை கட்டிக்கொண்டே கழிக்க வேண்டியுள்ளது. நல்லாட்சி என்பது தற்பொழுது வசனங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஜனவரி 8 ஆம் திகதி இந்த நாட்டு மக்கள் கொண்டுவந்த அமைதிப் புரட்சி, தற்பொழுது வெறும் வெற்றுப் பட்டாசாக மாறியுள்ளது. மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத அரசாங்கம், மீண்டும் உள்ளூராட்சி தேர்தலை தள்ளிப் போட்டுள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். (இ-7)

## அந்திரான் ஜனசக்தி தோற்பொருள் உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## வட்டு கிழக்கு, சித்தன்கேணி

01-01-2016

### விலை மனு கோரல்

எமது சங்கத்தால் உற்பத்தி செய்யப்படும் இறப்பர் பாதணிகளை விற்பனை செய்வதற்குரிய விற்பனை முகவர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

**எமது உற்பத்திகள்**

| இல | விபரம் | அளவு |
|---|---|---|
| 01 | ஆண்களுக்கான இறப்பர் பாதணி | 24-29 |
| 02 | பெண்களுக்கான இறப்பர் பாதணி | 22-26 |
| 03 | சிறுவர்களுக்கான இறப்பர் பாதணி | 16-21 |

விற்பனை முகவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவன :

- → வியாபார பதிவு செய்திருத்தல்
- → சந்தைப்படுத்துவதில் முன் அனுபவம்.
- → சந்தைப்படுத்துவதற்கான ஆளணியை கொண்டிருத்தல்.
- → சந்தைப்படுத்துவதற்கான வாகன வசதியை கொண்டிருத்தல்.
- → குறித்த தொகையை பிணைப் பணமாக வைப்பிலிடக் கூடியவாறு இருத்தல் வேண்டும்.
- → கூட்டுறவுச் சங்கங்களுடனான வேலை பார்த்த முன் அனுபவம் விரும்பத்தக்கது.

மேற்படி தகைமை உடையவர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

- → கேள்விகள் யாவும் 07.01.2016 முன்னர் கிடைக்கப்பெற வேண்டும்.
- → விற்பனை முகவர்கள் தெரிவில் தெரிவுக்குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.
- → தெரிவு செய்யப்படும் வழங்குனர்கள் ஒப்பந்த அடிப்படையில் இணைத்து கொள்ளப்படுவர்.
- → இது பெண்களின் வலுப்படுத்தலுக்காக நடாத்தப்படும் கூட்டுறவு சார்ந்த வியாபார நடவடிக்கையாகும்.

மேலதிக தகவல்களுக்கு:-0213003345
தொடர்பு கொள்ளவும்.

(3055)

**தலைவர்.**

## அந்திரான் ஜனசக்தி தோற்பொருள் உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச்சங்கம் (வ-து)

### பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தின் இறப்பர் பாதணிகள் உற்பத்தி நிலையத்திற்கான **பொது முகாமையாளர்** பதவிக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பொது முகாமையாளர்**

● முன்னிலைப்படுத்தப்படும் கடமைப்பட்டியல்

- → சங்கம் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல்.
- → சங்க உற்பத்தி சார்ந்த அனைத்து கணக்கறிக்கைகளையும் உறுதி செய்தல்.
- → நிர்வாக ஒழுங்கமைப்பு மற்றும் வியாபார திட்டமிடலுக்கு ஏற்றவாறான புதிய உத்திகளை முன்னெடுத்தல்.
- → பணிப்பாளர் சபையினால் பணிக்கப்படும் அனைத்து கடமைகளையும் மேற்கொள்ளல்.
- → சங்கத்தின் நிதி, தொழில்நுட்ப, சேவை, வியாபாரம் தொடர்பான தந்திரோபாயங்களை வகுத்தலும் நடைமுறைப்படுத்தலும்.
- → சந்தைப்படுத்தலுக்கு தேவையான உத்திகளை வகுத்தலும் உரிய முறையில் சந்தைப்படுத்தலும்.

● தகைமைகள்

- → க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தியுடன் முகாமைத்துவ துறையில் அல்லது இதனுடன் தொடர்புடைய துறையில் முன்னனுபவத்தை கொண்டிருத்தல்.
- → நிர்வாக ஒழுங்கமைப்பு மற்றும் வியாபார திட்டமிடலுக்கு ஏற்றவாறான புதிய உற்பத்திகளை முன்னெடுக்கும் திறன்களை கொண்டிருத்தல்.
- → வேலைகளை முன்னெடுக்க கூடியளவில் கணணி மற்றும் ஆங்கில அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
- → வயதெல்லை 18-45 வருடங்கள்

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான வெற்றிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் உள்ளடக்கப்படுவதுடன் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 09-01-2016 இற்கு முன் கீழே உள்ள முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடவும். (3055)

**தலைவர்,**
**அந்திரான் ஜனசக்தி தோற்பொருள் உற்பத்தியாளர்**
**விற்பனை கூட்டுறவுச்சங்கம் (வ.து),**
**வட்டு கிழக்கு, சித்தன்கேணி.**

# மரண அறிவித்தல்



## திருமதி
# யேசுரட்ணம் மாக்கிறேட்

4-ம் கட்டை ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யேசுரட்ணம் மாக்கிறேட் அவர்கள் கடந்த (31.12.2015) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குருசுமுத்து - மரியம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், யேசுரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மனுவல்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சவரிமுத்து மற்றும் குணம் (யேசுதாசன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், லூர்த்துஜெயமலர் (றதி) (ஓய்வுபெற்ற கிராமிய வங்கி முகாமையாளர்), பிரான்சிஸ்குமார் (சுவிஸ்), உதயகுணசீலன் (சுவிஸ்), றஞ்சித் ஜெயமலர் (றட்ணி-சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மரியதாஸ் (இலங்கை வங்கி மானிப்பாய்), மேரி மெக்டலின் (பேபி-சுவிஸ்), ஆஷா (சுவிஸ்), மத்தியூஸ் (சுவிஸ்), றஜனி (டென்மார்க்), றமணி (கனடா), றொபின்சன் (போதனா வைத்தியசாலை ஊழியர்), றொக்ஷினி (சென்.ஆன்ஸ் றோமன் கத்தோலிக்கம் - ஆசிரியர்), ஜோன்சன் (லண்டன்), அசம்ரா (லண்டன்), றொசிற்ரா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ் சென்ற றெஜீனா மற்றும் செபமாலையம்மா ஆகியோரின் மைத்துனியும், சூசைப்பிள்ளை (டென்மார்க்), டெனிஸ் (கனடா), அருள்ஞானரட்ணம் (தாதிய போதனாசிரியர்), சுகிர்தா (தாதிய உத்தியோகத்தர் ஆதார வைத்தியசாலை தெல்லிப்பளை), அலன், சுவேந்தினி ஆகியோரின் பெரியதாயாரும், ஜோன்சன்மரீன் (ஆசிரியர் -மாங்குளம்), பிரான்சிஸ்கா (இலங்கை வங்கி - திருநெல்வேலி), ஜெனோல்ரன் (சுவிஸ்), பிரான்சிஸ்கா (சுவிஸ்), சுஜீவன் (சுவிஸ்), சுயந்தன் (சுவிஸ்), ஜெனிக்சன் (சுவிஸ்), மௌலிகா (சுவிஸ்), கலோ ஜெறோ (கனடா), டெனி (டென்மார்க்), ஆன்லிசா, அனனி, ஆன்சிக்கா, அஸ்ரன், அரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (04.01.2016) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து காக்கைதீவு புனித அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
தொ.பே : 077153 2463
021 320 0518, 077 384 5059

4-ம் கட்டை,
ஆனைக்கோட்டை.

(3056)

# அரசியல் தீர்வு விடயத்தில் மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றி விடக்கூடாது

## திஸ்ஸ விதாரண வலியுறுத்து

(கொழும்பு)

அரசியல் தீர்வு விடயத்தில் இனவாதத்திற்கு சந்தர்ப்பம் அளித்து தமிழ் மக்களை மீண்டும் அரசாங்கம் ஏமாற்றி விடக்கூடாது. பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை வெற்றிகொள்வதும் காலத்தின் தேவையாகவுள்ளது என்று முன்னாள் அமைச்சரும் லங்கா சமசமாஜ கட்சியின் பொது செயலாளருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் புதிய அரசியலமைப்பு திருத்தத்திற்கான முன்னெடுப்புகள் நாட்டின் எதிர்காலத்திற்கு பங்களிப்பு செய்யும் என நம்பிக்கை வைக்க முடியவில்லை. பொருளாதார அபிவிருத்திகள் படுபாதாளத்தில் விழுந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தேசிய தீர்வுத் திட்டம் ஒன்றே தற்போது நாட்டிற்கு தேவைப்படுகின்றது. அதனை நோக்கி கடந்தகால நகர்வுகள் காணப்பட்டன. ஆனால் இன்று அவ்வாறு இல்லை. நிலைமை பின்தங்கியதாகவே உள்ளது. இதனால் தமிழ் மக்கள் மீண்டும் ஏமாற்றமடையும் நிலையே உருவெடுத்துள்ளது. தற்போதைய அரசாங்கம் அபிவிருத்தி மற்றும் அரசியலமைப்பு திருத்தம் எனக் கூறி உண்மையான விடயங்களை காலம் கடத்தி வருகின்றது .

கடந்த அரசாங்கம் அரசியல் தீர்வு விடயத்தில் குறிப்பிட்டளவு இலக்குகளை அடைந்திருந்தது. ஆனால் தற்போது அந்த முன்னேற்றங்கள் மழுங்கடிக்கப்பட்டுள்ளன. மக்களை ஏமாற்றும் நோக்கமே தற்போதைய அரசாங்கத்தின் உள்ளடக்கமாகவும் காணப்படுகின்றது. ஆகவே அந்த நிலை மாற்றமடைய வேண்டும். சர்வ கட்சி குழு அன்று பல்வேறு பரிந்துரைகளை தேசிய பிரச்சினையை மையப்படுத்தி முன் வைத்தது.

எனவே இந்த விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இனவாதம் மற்றும் இன்னோரன்ன காரணங்களுக்கு முக்கியத்துவம் அளித்து தமிழ் மக்கள் ஏமாற்றப்படுவார்களேயானால் மீண்டும் யுத்த சூழலுக்கே வித்திடுவதாக அது அமைந்து விடும்.

தற்போதைய அரசாங்கத்தின் புதிய அரசியலமைப்பிற்கான முன்னெடுப்புகள் கூட நாட்டின் எதிர்காலத்திற்கு உதவுமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. வெளிப்படைத்தன்மை இந்த விடயத்தில் மிகவும் அவசியமானதொன்றாகும்.

பொருளாதார அபிவிருத்திப்பணிகள் இன்று ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. நல்லாட்சி அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் கூட திருத்தங்களுக்கு உள்ளாக்கும் நிலை ஏற்பட்டது. ஆகவே நாட்டில் தற்போது காணப்படும் நிலை ஏற்புடையதல்ல. இந்த 2016 புதிய ஆண்டிலாவது அரசியல் தீர்வு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள வீட்டுக்கும் மற்றும் கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள வீட்டுக்கும் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை

சம்பளம்:-15,000 இலிருந்து 25,000 வரை வழங்கப்படும்.

தொடர்பு:- 076 928 3179 (3045)

## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42 ஆவது வீதியில் 3 ஆம் இலக்க தொடர்மாடி இணைந்த குளியலறையுடன் கூடிய 2 அறை வீடு நாள்/ கிழமை/ மாத வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 837 8597 (2989)

## கடை விற்பனைக்கு

யாழ் நகரில் ஸ்ரான்லி றோட்டில் வியாபார முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் கடை விற்பனைக்கு உண்டு.

(3041)

தொடர்புகளுக்கு :-
0779107242

## Diploma in Nursing
## Holy Cross School of Health Science

விண்ணப்ப இறுதித்தினம்: 31.01.2016

க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களை திருச்சிலுவை சுகாதார விஞ்ஞான பாடசாலை, இல.767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு சுயவிலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பி வைக்கவும்.

பணிப்பாளர்

தொ.பே.இல. 021 300 1102/ 077 115 9391 (2911)

## அருள்வளர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் இலட்சார்ச்சனை பெருவிழாவில் இசை ஆராதனை செய்யும் கலைஞர்கள்

இசை ஆராதனை நிகழ்ச்சி

03.01.2016 ஞாயிற்றுக்கிழமை

பாட்டு: பாலமுருகன் சாரங்கன், தரங்கினி பாலமுருகன்

கீபோட்: இசைக்கலைமாணி செல்வச்சந்திரன்

தபேலா: பிரபாகர சர்மா

(2901)

இசை ஆராதனை முற்பகல் 11 மணிக்கு

அனுசரணை வழங்குவோர்
செல்லத்துரை பரராஜசிங்கம் U.S.A


# மரண அறிவித்தல்

தோற்றம்:-10.06.1924
மறைவு:-01.01.2016



## மழவராயர் நாகம்மா

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கண்டாவளை, விசுவமடு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் மீசாலையைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட மழவராயர் நாகம்மா அவர்கள் இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் ஆழ்வாப்பிள்ளை (அமரர்), இலட்சுமிப்பிள்ளை(அமரர்) ஆகியோரின் அன்பு மகளும் சித்தர் (அமரர்), தில்லை நாச்சன்(அமரர்) ஆகியோரின் அன்பு மருமகளும் மழவராயர் (அமரர்) அவர்களின் அன்பு மனைவியும் கந்தசாமி (அமரர்), வேலாயுதம், இலட்சுமி (அமரர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேஸ்வரன், பரமேஸ்வரி, கமலேஸ்வரி, செல்வராஜா (சுவீடன்), கணேசமூர்த்தி (அமரர்), விநாயகமூர்த்தி (சுவிஸ்), கலாதேவி (பிரான்ஸ்), புவனேஸ்வரி, சறோசாதேவி (உதவிக் ,கல்விப்பணிப்பாளர், முன்பள்ளி, தென்மராட்சி கல்வி வலயம்), விஜயராணி (அமரர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் புஸ்பராணி, யோகேஸ்வரி, செல்லையா, இராமலிங்கம், சிவகுமாரி (சுவீடன்), சிவமலர் (சுவிஸ்), கந்தசாமி (அமரர்), அரியநாயகம் (அமரர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரதீபன் (சுவிஸ்), விஜிதா(அமரர்), கவிதா, சிந்துஜா (பிரான்ஸ்), சந்திரகுமார் (சுவிஸ்), சந்திரலேகா (சுவீடன்), சந்திரவதனா (ஆசிரியர், மந்துவில் றோ.க.த.க.பாடசாலை), சந்திரகாந்தன் (லண்டன்), சந்திரலோஜி, பாஸ்கரன், சுதாகரன் (பிரான்ஸ்), ஜீவகரன், சங்கரன், குணாகரன் (லண்டன்), உமாகரன் (லண்டன்), இராமகீர்த்தி (பிரான்ஸ்), சிந்துஜன்(அமரர்), சோபனா (சுவீடன்), சர்மினி (சுவீடன்), அபிராம் (சுவிஸ்) விதுசாளினி, அதுர்சனன் (சுவீடன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சினேஜா, ஆதவன், தருண், அருண், அஜய், சரணிகா, சுஜன், சங்கீர்த்தன், பிரணவி, பரணிதன், யாதவி, சோபிதன், லிதுர்ஜா, சுவேதா, தாட்சாயினி, லக்சன், கனிக்கா, கிரிசாந்த், சாளினி, சாயினி, சுபராம் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான அறிவித்தல்கள் பின்னர் அறியத்தரப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு,
அ.சறோசாதேவி - 077 640 6374
செ.பரமேஸ்வரி - 077 205 5615
க.இராமலிங்கம் - 076 640 8649
ம.செல்வராசா - 0046761500816
க.கலாதேவி -0033782768455

தகவல்:
குடும்பத்தினர்

(சி-3285)

# இராசி பலன்

03.01.2016
(மார்கழி 18, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு,
நவமி பின்னிரவு 2.47 மணிவரை
சித்திரை பின்னிரவு 2.42 மணிவரை
சுபநேரம் 9.30-11.00 மணிவரை
இராகுகாலம் 5.00-6.30 மணிவரை

வளவன்

**மேடம்** மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், உடல்நலன் சீராகும்,போசன சுகமுண்டு.

**இடபம்** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** நன்மைகள் நாடி வரும் நாள், பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**கடகம்** தேவைகள் பூர்த்தியாகும் நாள், தொல்லை கொடுத்த சிலரே தோள்கொடுத்து உதவ முன்வருவர், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**சிம்மம்** உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, அரசியல் செல்வாக்கு மேலோங்கும், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும்.

**கன்னி** தொழில் ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்** தேகநலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், திட்டமிட்ட காரியமொன்றில் சில மாற்றங்கள் ஏற்படலாம், கனவு பலிதமுண்டு.

**விருச்சிகம்** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும்.

**தனுசு** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு.

**மகரம்** சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வருமானம் திருப்திகரமானதாக அமையும், போசன சுகமுண்டு.

**கும்பம்** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் பயணங்களால் பலனுண்டு,பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**மீனம்** திடீர்ச் செலவுகளால் சேமிப்பில் சிறிது கரையலாம், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

### கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | சந்திராஷ்டமம் பூரட்டாதி பகல் 1.08 இற்கு துலா-சந் | | |
| சூரி புத | சனி சுக் | செவ் | குரு ராகு சந் |

# ஞானிகள் வழி ஞானி இயேசுவிடம் செல்வோம்



ம.பிரான்சிஸ்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

இன்று இயேசுவின் திருக்காட்சி பெருவிழா. பெத்லகேமில், யேசு பிறந்துள்ளதை அறிந்த ஞானிகள் அவரை வணங்க இயேசு பிறந்த கொட்டிலுக்கு வந்தடைந்த நாள். இவர்கள் வீண்மீன் கண்டு வீறு நடைபோட்டு வந்து நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து இயேசு பாலனை வணங்கினர். பரிசுகளைக் கொடுத்து வந்தவழி விட்டு வேறு வழியில திரும்பினர்.

**யார் இந்த ஞானிகள்?**

கிரேக்க மொழியிலே "மாகோஸ" (magos) என்றால் "ஞானி" என்று பொருள். இது பன்மையில் (mag) என்பது பொருளாகும். இவர்களை நாம் பல கூறுகளாகப் பிரித்து நோக்கலாம். பெர்சிய நாட்டுக் குருக்களின் கூட்டத்தைச் சார்ந்தவர்கள், இரகசிய மறைபொருளை உணர்ந்து கொள்ளும் சக்தியைக் கொண்டவர்கள், மந்திரவாதிகள், நாடோடிப் போலி மருத்துவர்கள் அல்லது அறிஞர்கள், தத்துவ அறிவில் கைதேர்ந்தவர்கள், குறி சொல்லும் முன்னறிவிப்பாளர்கள், இயற்கை மருத்துவத்தில் கைதேர்ந்தவர்கள், கனவுகளுக்கு விளக்கம் அளிப்பவர்கள் வானசாஸ்திரிகள்.

**இந்த ஞானிகள் எந்த நாட்டைச சேர்ந்தவர்களாகலாம்?**

இந்த ஞானிகள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற ஆராய்ச்சியில் முரண்பாடான கருத்துக்கள் நிலவுகின்றன. பெர்சிய நட்டைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். மீதியா நாட்டைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். மெசபெத்தோமிய நாட்டிலிருந்து வந்திருக்கலாம். அரேபிய நாட்டிலிருந்து பயணித்திருக்கலாம் என்று மரபுகள் கூறுகின்றன. இருப்பினும் இந்தியாவிலிருந்து கூட யூதேயா நாட்டிற்கு சென்றிருக்கலாம் என்று கூறுபவர்களும் உளர்.

**இந்த ஞானிகள் எத்தனை பேர்?**

பைபிளில் இயேசுவைக் காண வந்த ஞானிகள் எத்தனை பேர் என்று குறிப்பிடவில்லை. மூன்று பேர் வந்தார்கள் என்கிறது கிறிஸ்தவ மரபு. பைபிளில் மூன்று வகையான பரிசுகளைக் கொண்டு வந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளதால் தான் இவர்கள் மூன்று பேர் என்கிறார்கள்.

**இந்த ஞானிகள் பெயர்கள் என்ன?**

இந்த ஞானிகளின் பெயர்கள்: கஸ்பார், மெல்கியோர், பல்தசார் என்பது மரபாகிறது.

**இயேசுவைக் காண்வந்த ஞானிகள் என்ன செய்தார்கள்?**

இயேசுவைக் காணவந்த ஞானிகள் உண்மையில் வானியல் பற்றி ஞானத்தைக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வானத்தை ஆய்வு செய்பவர்களே. மாறாக எதிர்கால விண்மன்கள் பற்றி ஆராயவுமல்லை. அது பற்றிக்கூற முனையவுமில்லை. அவற்றிலிருந்து சில நன்மைகளை பெற முற்பட்டார்கள். வாழ்க்கையின் வழியைக்காட்டும் உண்மை ஒளியை தேடும் மனிதர்களானார்கள். கடவுளின் முகவரியை கடவுளின் படைப்பில் காண முற்பட்டவர்கள். மாந்தர் வாழ்விற்கு வழிகாட்டும் பாதையைக் கண்டு கொண்டவர்கள். இறைவனின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அவரை தேடியவர்கள், அவரின் கைவண்ணத்தை படைப்பில் காண தேடியவர்கள். கடவுள் இயற்கையினூடாக தம்மை வெளிபபடுத்துவார் என்று உறுதியாக நம்பினர். இந்த உலகைப் படைத்தவரே பெத்தலேகேமில் குகையில் மனிதனாகப் பிறந்தார் என்பதை உணர்ந்தனர். இந்த ஞானிகள் வேதாகமம் கூறுவதைக் கேட்டனர். இறை வார்த்தையே தமக்கு உண்மை வழியைக் காட்டும் விண்மீனாக தோனறியது என்ற மிகப் பெரிய பரிசுத்த உண்மையை எமக்கு தெளிவுபடுத்தினர்.

**இயேசுவைக் காணவந்த ஞானிகள கொண்டுவந்த பரிசுகளுக்கு அர்த்தம் என்ன?**

கஸ்பார் என்பவர் தாடி இல்லாமல் இளைஞராக ஓவியத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளார். இவர் சாம்பராணி கொண்டுவந்தார். கிறிஸ்தவ மரபில் சாம்பிராணி குருத்துவத்தைக் குறிக்கின்றது. குருக்களை பெர்சிய நாட்டில் "போன்தி ஃபெக்ஸ்" அதாவது பாலமாக இருப்பவர்கள் - இறைவனுக்கும் மனிதருக்குமிடையே பரிந்து பேசி பாலமாக இருந்தவர்கள் மன்னர்கள் என்ற கருத்து நிலவியது. இறைத் தந்தைக்கும் நமக்குமிடையே உறவை வளர்க்கும் பாலமாக இருக்கும் இயேசுவுக்கு இது எவ்வளவு பொருத்தமாக இருக்கின்றது என்பது தெளிவு.

மெல்கியோர் வயதானவராக, நீண்ட தாடியோடு சித்திரிக்கப்பட்டுள்ளார். இவர் பொன்னைக் கொண்டு வந்தார். பொன் இயேசு அரசர் என்பதைக் குறிக்கின்றது. பெர்சியா நாட்டில் அந்நாட்டு அரசரை யாராவது சந்திக்கச் சென்றால் கட்டாயம் பொன் - தங்கத்தைக் கொண்டு செல்ல வேண்டுமென்பது ஒரு கட்டாயமான மரபு. ஆகவே இயேசுவை ஓர் அரசராகக் கருதி பொன்னைப் பரிசாகக் கொண்டு வருகிறார்கள் இந்த ஞானிகள்.

பல்தாசார் குறுந்தாடியுடைய ஓர் இளைஞன். இவர் வெள்ளைப் போளம் கொண்டு வந்ததாகக் கூறப்படுகிறது. வெள்ளைப்போளம் பொதுவாக இறந்தவர்களின் உடலைப் பதப்படுத்திப் பாதுகாப்பாக இருக்கப் பயன்படுத்தப்பட்ட ஒரு பொருள். இது இயேசு இறைவன் மட்டுமல்ல, அவர் ஒரு மனிதனாகவும் இருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. ஆம் இயேசு பிறந்ததே நாம் மீட்பு பெறுவதற்காகவே. இயேசு தமது உயிரை பயணமாக வைத்துத் தமது இறப்பினால் நம்மை மீட்டார் என்பது தெளிவு. இந்த ஞானிகளின் வருகையை ஒட்டிச் சில முன்னறிவிப்புக்கள் உள்ளன.

விண்மீன் : கிறிஸ்து பிறப்பதற்கு முன் 11 ஆம் ஆண்டில் ஹேலிஸ் நட்சத்திரம் தோன்றியது. கி.மு.7 ஆம் ஆண்டில் மூன்று கோள்கள்: சாட்டர்ன், ஜூபிட்டர், மார்ஸ் வானத்தில் ஒன்றாகக் கூடிவந்த விந்தை நடந்ததாக வரலாறு. கி.மு. 5 இலிருந்து 2ஆம்ஆண்டுக்கு இடையிலான காலத்தில் மெசோரி, சூரியன், டாக்ஸ்டார் என்பவை பிரகாசமாகத் தோன்றின என்பதும் வரலாறு.

.இயேசு பிறப்பதற்கு முன் இஸ்ரயேல் நாட்டில் ஓர் அரசர் தோன்றுவார். அவர் மெசியா- அரசராக இருப்பார். அவர் மக்களை மீட்டு விடுதலை அளிப்பார் என்று மக்கள் நம்பினர். "யூதா நாட்டுப் பெத்தலேகேமே யூதாவின் ஆட்சி மையங்களில் நீ சிறியதே இல்லை. ஏனெனில், என் மகளாகிய இஸ்ரயேலை ஆயரென ஆள்பவர் ஒருவர் உன்னிலிருந்து தோன்றுவார்" என்று பைபிளில் மீக்கா என்னும் இறைவாக்கினர் இயேசு பிறப்பதற்கு முன்பு 737-690 ஆண்டில் தெளிவாக உரைத்திருக்கிறார். இவ் வெளிப்பாட்டின் வழியாக ஒரு புதிய அரசர் தோன்றுவார் என்று மக்கள் நம்பினர். நம்பிக்கை கொண்டு அவரது வருகைக்காக காத்திருந்தனர். விண்மீன் கண்டதும் இந்த மீட்பர் பிறந்துவிட்டார் என்று வான சாஸ்திரிகள் தங்கள் ஞானத்தைப் பயன்படுத்தி பாலன் இயேசுவைக் காண வந்தனர்.

**இயேசுவின் பிறப்பைப் பற்றிய மூன்று கண்ணோட்டங்கள்:**

மெசியா - அரசராக இயேசு பிறப்பார் என்று இஸ்ரயேல் வான சாஸ்திரிகள் ஆய்ந்தறிந்து உறுதிப் படுத்தியவுடன் மூன்று வகையான நபர்கள் தங்களது கண்ணோட்டத்தை வெளிப்படுத்தியதை நாம் பைபிளில் பார்க்கிறோம்.

ஏரோது: பகைமை உணர்வு- ஏரோது முறையான வகையில் அரசனாகப் பதவி ஏற்கவில்லை. ஆகவே வேறு ஓர் அரசன் பிறந்துள்ளார் என்று கேள்வியுற்றதும் தனக்குத் தற்காப்பின்மை என்ற உணர்வு ஏற்பட்டதால் குழந்தை இயேசுவின்மீது பகையுணர்வு கொண்டான். அவரைக் கொல்லச் சதித்திட்டம் போட்டான்.

பரிசேயர்களின் பாராமுகம்: இஸ்ரயேல் நாட்டின் குருக்களும், சட்டவல்லுநர்களும் புதிய மெசியா அரசர் பிறப்பார் என்று விவிலியம் முன்னறிவித்திருந்தும் அவர்கள் இந்நிகழ்வின்மேல் எந்த அக்கறையும் கொள்ளவில்லை. மாறாக, இயேசு போதிக்கத் தொடங்கியதும் அவரை எதிர்த்துப் போராட ஆரம்பிக்கின்றனர்.

ஞானிகள்: பக்தி பரவசம்- இயேசு பிறந்த இடத்தை அடைந்ததும் ஞானிகளுக்கு வழிகாட்டி வந்த விண்மீன் நின்றது. அதை கண்ட அவர்கள் மட்டில்லா பெருமகிழ்ச்சி அடைந்தனர். குழந்தை இயேசுவைக் கண்டார்கள். நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள். தங்கள் பேழைகளைத் திறந்து பொன்னும், சாம்பிராணியும், வெள்ளைப் போளமும காணிக்கையாகக் கொடுத்தார்கள். பக்தி பரவசத்தில் மூழ்கினார்கள்.

**ஞானிகளின் வருகை நமக்குத் தரும் பாடங்கள்**

நாம் இயேசுவை ஆவலோடு தேடிச் சென்றால் இயேசுவை ஆராதித்து வணங்க நமக்கு வாய்ப்பு கிடைக்க மகிழ்ச்சியில் பொங்கும். இறைவனின் வழிநடத்துதல் என்றும்நம்மோடு இருக்கும் இறைவனே நமக்கு பரிசாக அமைவார். பல ஆயிரக்கணக்கான தூரம் பல வேதனைகளையும், துன்பங்களையும் சகித்துக் கொண்டு ஞானிகள் இயேசுவைத் தேடி வந்தனர். நாம் எமது மனங்களில் எதிர்ப்பு மனப்பான்மையை கைவிட்டு கடவுளால் வழிநடத்தப்படுவதற்கு நம்மை கையளிக்கவேண்டும். உண்மையானவரைக் காணவேண்டும் என்ற விசுவாசத்தின் கண்களினாலேயே தேடினால் தான் அவரைக் காணமுடியும். இயேசுவைக் கணடு அனுபவிப்பவர்களின் வாழ்க்கை மாற்றுப் பாதையில் தான் அமைய வேண்டும். பழைய மனிதத்தை களைந்துவிட்டுப் புத்தாடை அணிந்து புனிதனாக மாற வேண்டும். இதைத்தான் ஞானிகளும் செய்தார்கள். வாருங்கள் ஞானிகள் வழி இயேசுவிடம் செல்வோம்.

## வீதியைப் புனரமைக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

வடமராட்சி-கரவெட்டி மத்தொனியில் உள்ள வெல்லனிற் பிள்ளையார் கோவிலுக்குச் செல்லும் பிரதான வெல்லன் வீதியானது பல வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. மழை காலத்தில் மேற்படி வீதி யால் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளது கவனத்துக்கு கொண்டு செலலப்பட்டும் வீதி புனரமைப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை இடம்பெறவில்லை.

இங்குள்ள கோயிலினை கருத்தில் கொண்டாவது இவ் வீதி புனரமைக்கப்படுவதற்கான எந்தவொரு முயற்சிகளும் இதுவரை அதிகாரிகளாலும் எடுக்கப்படவில்லை. எனவே இவ்வீதியை இனியா வது புனரமைத்து தருமாறு பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-60)

## நல்லூரில் யோகா பயிற்சி

யாழ்.யோக அரங்கத்தினர் நல்லூர்த்தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் புதிய யோகா பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கின்றனர். இதற்கான அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு சுதேச மருத்துவர் கந்தையா சோதிதாசன் தலைமையில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி விவிலியன் சத்தியசீலன் ஆரோக்கியத்திற்கான யோகா வழி முறைகள் எனும் தொனிப் பொருளில் விசேட விரிவுரையை வழங்குவார்.

இவ் யோகா பயிற்சி நெறியானது காலை 6-7 மணிவரையும் மாலை 4.30-5.30 மணிவரையும் மாலை 6-7 மணிவரையும் மூன்று பிரிவுகளாக இரண்டு மாதங்கள் தினமும் நடைபெறும். (இ-7)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் பொற்பதி சன சமூக நிலையத்தினால் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இரத்ததானம் வழங்கும் நிகழ்வு கொக்குவில் பொற்பதி சன சமூக நிலைய கட்டடத்தில் இடம் பெறும். (இ-7)

## தே.அ.அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

பொற்பதி வீதி கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த அன்னலிங்கம் சங்கீர் (940171563V) என்பவரின் தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிப்பத்திரிகை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ள முடியும்.(இ

## பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவி



வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் நிதியொதுக்கீட்டில் பெண்களைத் தலைமைத்துவமாக கொண்ட 129 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் கடந்த 31 ஆம் திகதி யாழ். மாவட்டச் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருததிப் பிரிவின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டத்தின் 15 பிரதேச செயலா பிரிவுகளிலுள்ள 129 தனிப்பட்ட பயனாளிகளுக்கும், 4 குழு ரீதியான ஆடை வடிவமைப்பு, தோல் உற்பத்தி, கடற்பாசி வளர்ப்பு, மிக்சா உற்பத்தி போன்றவற்றுக்கென வடமாகாண மகளிர் விவகார அமைசசின் நிதியொதுக்கீட்டில் 6.3 மில்லியன் ரூபா செலவிலான வாழ்வாதார உதவிப்பொருட்கள் வழங்கப்பட்டன.

இதில் விருந்தினர்களாக வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சா ப.சத்தியலிங்கம், மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன், வட மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாள் சி.திருவாரகன் ஆகியோர் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிப் பொருட்களை வழங்கிவைத்தனர். (இ-9)

# இ.போ.ச. வாசகங்களுக்கு கடும்கண்டனமும் எதிர்ப்பும்

இலங்கை போக்குவரத்துச் சபையினரால் தனியார் பேருந்துகள் தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட செய்திக்கான மறுப்பினையும் இ.போ.ச. பேருந்துகளில் ஒட்டப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் காணப்பட்ட வாசகங்கள் தொடர்பாக கடும் கண்டனமும் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில்,

2016.01.01 ஆம் திகதி இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகளில் ஒட்டப்பட்டுள்ள பிரசுரத்தில்

நீதியினை நிலைநாட்ட வேண்டிய உத்தியோகத்தர்களால் நீதியை நிலை நாட்டவில்லை, மாவட்டச் செயலகத்தினால் சட்ட நீதியற்ற முறையில் வழித்தட பாதை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றோம், வட- இலங்கை போககுவரத்துச் சபைக்கு சொந்தமான 57 பேருந்துகள் சேதமாக்கப்பட்டமையினை வன்மையாகக் கண்டிக்கின்றோம ஆகிய செய்திகளை பிரசுரித்துள்ளமையானது எமக்கு மிகுந்த மன வேதனை அளிப்பதுடன் இச்செய்திகளை வடமாகாண தனியார் பேருந்து உரிமையாளர்கள் சார்பாக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

வடமாகாணத்திற்குள் சேவையில் ஈடுபடும் அனைதது பேருந்துகளும் இலங்கை தேசியப்போக்குவரத்து ஆணைக்குழுவின் சட்ட நடைமுறை விதிகளுக்கு அமைவாக ஒவ்வொரு மாவட்டச் செயலகத்தினாலும் பாதை வழியனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு பொது மக்களுக்கான சிறந்த சேவையினை ஆற்றி வருகின்றோம்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துகள் சேதமாக்கப்பட்டமைக்கும் எமக்கும் எதுவித தொடர்பும் இல்லை.

எமது தனியார் பேருந்துகள் நேர அட்டவணைக்கு அமைவாக சேவையில் ஈடுபடுகின்றன. ஆனால் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் நேர அட்டவணையில்லாது கண்டகண்ட நேரங்களில் சேவையில் ஈடுபடுகின்றன.

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் உள்ள ஒருசில அதிகாரிகளின் சுய நலங்களினால் தன்னிச்சையான முடிவுகளினாலும் அன்றாடம் தமது கடமைகளை மேற்கொள்ளும் பயணிகள் பெரிதும் பாதிக்கப்படும் நிலை காணப்படுகின்றது. இவர்களின் இச்செயற்பாடுகளை வடமாகாணத்திலுள்ள எமது அனைத்து தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களும் பேருந்து உரிமையாளர்களும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். தங்களின் சுயநல தன்மையினை விடுத்து ஒருங்கிணைந்த நேர அட்டவணையினை நடைமுறைப்படுத்துவதற்கு முன் வருமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது.

இதேவேளை இலங்கை போக்குவரத்துச் சபையின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளினால் நேர அட்டவணைக்கு அமைய சேவையினை மேற்கொள்ள முடியாத நிலையினை ஏற்படுத்தி வருகின்றனர்.

இதனால் மக்கள் பாரிய கஷ்டங்களை அனுபவித்து வருகின்றமையும் சட்ட ரீதியான எங்கள் செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றனர்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இரு தடவைகள் கூட்டததிற்கு அழைத்த போதும் கூட்டத்திற்கு வருவதாக கூறியும் சமூகம் கொடுக்காத கோண்டாவில் இலங்கை போக்குவரத்து சபையினர் தமக்கு பாதிப்பு ஏற்படுவதாக கூறுவது எந்தவிதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

தனியார் பேருந்துகள் கடந்த காலங்களில் யுத்தம் நடைபெற்ற காலத்திலும் யுத்தம் முடிந்த காலத்திலும் பாதைகள் குன்றும் குழியுமாக இருந்த காலத்திலும் தனியார்பேருந்துகளே சேவையாற்றி வருகின்றன. இதை தவிர எமது பேருந்துகள் பாதை அனுமதிபெற்று சேவையாற்றும் இடத்தில் தான் இ.போ.சபை பேருந்துகள் சேவையாற்றுகின்றன. ஏனைய இடங்களில் எத்தனையோ பாதைகள் இருந்தும் அவை அதனை செய்யவில்லை என யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையம் விடுத்துள்ள அறிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ)

## பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களை பாதுகாக்கும் பொருட்டு ஆராதனை





(யாழ்ப்பாணம்)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களை பாது காக்கும் பொருட்டும், காணாமல் போனவர்களை கண்ட றிய கோரியும், ஓம் நமசி வாய ஆராதனையும் சிவ ஆராதனையும் ஆன்மீக யாத்திரையும் குருமுதல்வரின் நல்லாசி நிகழ்வும் நேற்று காலை 9 மணியளவில் நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலில் நடைபெற்றது.

வீணாகான குரு பீடத் தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், சிறப்பு வழி பாடுகள், விசேட ஆராதனைகள், மேள வாத்தியங்கள் என்பன நடைபெற்றன.

இந் நிகழ்வுகள் அனைத் தும் சர்வதேச இந்து குருமார் ஒன் றிய தலைவர் சபா.வாசுதேவ குருக்கள் தலைமையில் நடைபெற்றிருந்தன.

யுத்தத்தால் பாதிப்படை ந்த ஆலயங்கள் மிக விரை வில் புனருத்தாரணம் செய்யப்பட வேண்டியும், தமிழ் அர சியல் கைதிகளது விடுதலை வேண் டியும், இலங்கை இந் திய மீனவர்கள் பிரச்சினை தீரவும், உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள பொது மக்களின் காணிகள் விடுவிக்கவும், போதைப்பொருள் பாவனை முற்றாக இல்லாது போகவும், இளையவர்கள், மாணவர்கள் வாழ்க்கை ஒழுக்க நெறி உள்ளதாக அமையவும்,

காணாமல் போனவர் களது உறவினர்களுக்கு ஆறுதல் கிடைக்கவும், தனி மனித அபிலாசைகளான திருமணப்பேறு, சந்தான விருத்தி, கல்வி, கலைஞானம், உத்தியோகம், அரச உயர் பதவிகள், முத லானவைகள் அனைத்தும் சித்திக்கவும் இச்சிவ ஆரா தனை நடைபெற்றது.

இதன்போது யாழின் புகழ்பூத்த தவில் வித்து வா ன்களின் கச்சேரி, யாழ். நுண்கலைப்பீட மாணவர் களின் இசைக்கச்சேரி மற்றும் ஆராதனைகள் என்பனவும் நடைபெற்றன, (இ-4)


March 19th of 2016 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்

IELTS

THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 &8.5

March 19thல் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புகள் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரை நடைபெறும்.

இப்பொழுது வகுப்புக்கள் நடைபெறுகின்றன.



IELTS பாடங்களை படிப்பிக்கும் அதே வேளை Grammar and Vacabulary போன்றவற்றை புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கப்படும்.

வகுப்புக்கள் 04.01.2016ல் ஆரம்பம்

COURSE SCHEDULE

Mon, Tues, Wed, Thur
10 Week
8.30 - 10.30 , 5.00 - 7.00

Saturday & Sunday
Duration 10 Week
Time 8.30 - 11.00

IELTS LIFE SKILLS A1

கடந்த காலங்களில் 600 இற்கு மேற்பட்ட மாணவர்கள் City and Guild பரீட்சைக்கு எமது கல்லூரியில் இருந்து தோற்றி 100% பெறுபேறுகளைப் பெற்றுள்ளார்கள். அதே போன்று இப்பொழுதும் IELTS Life Skill பரீட்சைக்கு தோற்றி பல மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இன்றே எமது வகுப்புகளில் சேர்த்து பரீட்சையில் சித்தியடையுங்கள்

"IELTS Registration Center for British Council"

BRITISH COLLEGE OF ENGLISH

No 192, Navalar Road, Jaffna. (பெருமாளி கோவிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 தொ.பே : 0778803887



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா:17செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:O/Lலண்டன் குடியுரிமை<br>தொ.இ: B/5359 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 17 செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:HNDM<br>தொ.இ: G/3915 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 99செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:AAT, CIMA சவுதி<br>தொ.இ: B/5360 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 41<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ் NOT PR<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம். அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/3916 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 31 சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/கனடா PR<br>தொ.இ: B/5361 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 48செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSC<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/3919 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 59<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்:A/L/கணக்காய்வாளர்<br>தொ.இ: B/5364 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 37சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: G/3943 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 170 | 200 | 200 | 180 |
| உருளைக்கிழங்கு | 80 | 60 | 65 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 500 | 450 | 400 | 700 | 600 | 600 |
| தக்காளி | 140 | 100 | 100 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 30 | 50 | 40 | 40 |
| கோவா | 140 | 150 | 150 | 120 | 200 | 140 |
| கரட் | 200 | 150 | 200 | 200-300 | — | 200 |
| பூசணி | 60 | 40 | 30 | 60 | 80 | 50 |
| புடோல் | 80 | 100 | 70 | 100 | 120 | 100 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 150 | 160 | 120 | 200 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 75 | 100 | 100 | 80 |
| பாகற்காய் | 180 | 200 | 120 | 200 | 300 | 200 |
| வெண்டிக்காய் | 150 | 150 | 100 | 120 | 160 | 180 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 70 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 180 | 160 | 170 | 200 | 200 | 250 |
| லீக்ஸ் | 160 | 150 | 130 | 120 | 200 | 100 |
| பீற்றூட் | 200 | — | — | — | 240 | — |
| கறிமிளகாய் | 350 | — | 250 | 300 | 500 | 300 |
| முருங்கைக்காய் | 400 | — | — | — | — | — |
| போஞ்சி | 300 | — | — | 200 | 280 | 200 |
| கத்தரிதம்புள்ள | 150 | — | 120 | — | 160 | — |
| கீரை - 1 பிடி | 30 | 50 | 30 | 50 | 60 | 40 |
| தேசிக்காய் | 150 | 100 | 70 | 150 | 80 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 20-35 | 50 | 30-45 | 50 |
| இராசவள்ளி | 160 | 160 | 100 | 150 | 160 | 180 |
| வெங்காயப்பூ | 280 | 200 | - | 220 | — | 300 |
| முள்ளங்கி | 100 | 100 | 50 | 70 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 25 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 30 | 15 | 10 | 30 | 30 |
| ஈரப்பலா | 40 | 60 | 50 | — | 100 | 50 |

# ஒரு மாதத்தில் மட்டும் 980 பேர் உயிரிழப்பு

ஈராக்கில் நடைபெற்று வரும் வன்முறைகளுக்கு கடந்த டிசெம்பர் மாதத்தில் மட்டும் 980 பேர் பலியானதாக ஐ.நா. சபை தெரிவித்துள்ளது.

இதுபற்றி ஈராக்கிற்கான ஐ.நா. உதவி அமைப்பு (யுனாமி) வெளியிட்டுள்ள அறிக்கையில், "டிசெம்பர் மாதம் நடந்த சண்டை மற்றும் வன்முறைச் சம்பவங்களில் 980 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் பொதுமக்கள் மட்டும் 506 பேர். மீதமுள்ளவர்கள் குர்து பெஷ்மெர்கா மற்றும் துணை இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்பு படையினர்.

டிசெம்பர் மாதத்தில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட மாகாணம் பாக்தாத் தான். இங்கு மட்டும் 261 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அதைத் தொடர்ந்து நைனிவா மாகாணத்தில் 68 பேர் பலியாகி உள்ளனர். உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்த தகவலின்படி, பெரும்பாலான பகுதிகள் ஐ.எஸ். வசம் உள்ள அன்பர் மாகாணத்தில் 124 பேர் இறந்துள்ளனர். கொந்தளிப்பான சூழ்நிலை காரணமாக அங்கு துல்லியமான பதிவுகளை பெற முடியவில்லை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# விமானப் படைத்தளத்தை தகர்க்க தீவிர முயற்சி

## 4 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

பஞ்சாப் மாநிலம் பதன் கோட்டில் ஷாக்கி ஆற்றுப்பகுதியில் உள்ள விமானப் படைத்தளத்திற்குள் புகுந்த தீவிரவாதிகள் திடீர் தாக்குதலில் ஈடுபட்டனர். இதனையடுத்து பாதுகாப்பு படை வீரர்கள் தீவிரவாதிகள் மீது பதில் தாக்குதல் நடத்தினர். நேற்று அதிகாலை நேரத்தில் இந்த தாக்குதல் நடைபெற்றது. சம்பவ இடத்தை சுற்றி வளைத்த பாதுகாப்பு படையினர் தீவிரவாதிகளை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

விமானப்படைத் தளத்தில் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே நடைபெற்று வந்த தாக்குதல் முடிவுக்கு வந்துள்ளது. இதில் தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகள் 4 பேரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். விமானப்படை வீரர்கள் 2 பேர் பலியாகியுள்ளனர். மேலுமம 6 பேர் படுகாயம் அடைந்துள்ளனர. இந்த சம்பவத்தில் விமானப் படைதளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள விமானம் மற்றும் ஹெலி கொப்டர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. இந்த தாக்குதலை தொடர்நது டில்லியில் விமான படை அலுவலகத்தில் அவசர கூட்டததிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# 01.2016 03 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1431 - பிரெஞ்சு வீராங்கனை 19 வயது ஜோன் ஒஃப் ஆர்க் கைது செய்யப்பட்டு பியேர் கவுச்சோன் ஆயரிடம் ஒப்படைக்கப்பட்டார்:
- 1496 - லியொனார்டோ டா வின்சி தனது பறக்கும் இயந்திரம் ஒன்றை சோதனையிட்டது வெற்றியளிக்கவில்லை.
- 1653 - இந்தியாவில் கிழக்கத்தியத் திருச்சபை குடியேற்றவாத போர்த்துக்கீசரிடமிருந்து விலகியது.
- 1815 - ஆஸ்திரியா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகியன இணைந்து புரூசியா, மற்றும் ரஷ்யாவை எதிர்த்து இரகசிய கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தின.
- 1833 - போக்லாந்து தீவுகளை பிரித்தானியா கைப்பற்றியது.
- 1859 - தமிழகத்தில் போளுார் பகுதியில் நிலநடுக்கம் பதியப்பட்டது.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்காவில் இருந்து பிரிவதில்லை என டெலவெயர் வாக்களித்தது.
- 1870 - புரூக்ளின் பாலம் கட்டுமானப் பணிகள் ஆரம்பமாயின.
- 1888 - 91 ச.மீ முறிவுத் தொலைநோக்கி முதன்முறையாக கலிபோர்னியாவில் உபயோகிக்கப்பட்டது. இதுவே அந்நேரத்தில் உலகின் மிகப்பெரும் தொலைநோக்கி ஆகும்.
- 1921 - துருக்கி ஆர்மேனியாவுடன் அமைதி உடன்பாட்டிற்கு ஒப்புக்கொண்டது.
- 1924 - பண்டைய எகிப்தின் துட்டன்காமன் மன்னன அடக்கம் செய்யப்பட்ட பெட்டியை பிரித்தானியாவின் தொல்லியலாளர் ஹவார்ட் கார்ட்டர் கண்டுபிடித்தார்.
- 1925 - இத்தாலியின் ஆட்சி அதிகாரம் முழுவதும் தன்னிடம் உள்ளதாக பெனிட்டோ முசோலினி அறிவித்தார்.
- 1932 - பிரித்தானியர் மகாத்மா காந்தி மற்றும் வல்லபாய் பட்டேல் ஆகியோரைக் கைது செய்தனர்.
- 1947 - அமெரிக்கக் காங்கிரசின் அமர்வுகள் முதற்தடவையாக தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டது.
- 1956 - ஈபெல் கோபுரத்தில் ஏற்பட்ட தீயினால் கோபுரத்தின் மேற்பகுதி சேதமடைந்தது.
- 1957 - முதலாவது மின்கடிகாரத்தை ஹமில்ட்டன் வாட்ச் கம்பனி அறிமுகப்படுத்தியது.
- 1958 - மேற்கிந்தியத் தீவுகளின் கூட்டமைப்பு அமைக்கப்பட்டது.
- 1959 - அலாஸ்கா ஐக்கிய அமெரிக்காவின் 49வது மாநிலமானது.
- 1961 - அமெரிக்க அரசு கியூபாவுடனான ராஜதந்திர உறவுகளை முறித்துக்கொண்டது.
- 1961 - இடாகோவில் அணுக்கரு உலை ஒன்றில் ஏற்பட்ட கசிவின் காரணமாக மூன்று தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.
- 1962 - இருபத்திமூன்றாம் யோவான் (திருத்தந்தை) பிடல் காஸ்ட்ரோவை மதவிலக்கு செய்து அறிவித்தார்.
- 1966 - இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரிக்கும் பாகிஸ்தான் அதிபர் அயூப்கானுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் டாஷ்கெண்டில் ஆரம்பமாயின.
- 1974 - யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஆரம்பமானது.
- 1976 - அனைத்துலக பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகள் உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தது.
- 1977 - ஆப்பிள் கணினி நிறுவனமயப்படுத்தப்பட்டது.
- 1990 - பனாமாவின் முன்னாள் அதிபர் மனுவேல் நொரியேகா அமெரிக்கப் படைகளிடம் சரணடைந்தார்.
- 1995 - விடுதலைப் புலிகள் - இலங்கை அரசு பேச்சுக்களின் இரண்டாம் கட்டம் ஆரம்பமானது.

### பிறப்புகள்

- **1740 - கட்டபொம்மன், ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துப் போரிட்ட மன்னன் (இ. 1799)**
- 1840 - தந்தை தமியான், கத்தோலிக்கத் துறவி (இ. 1889)
- 1892 - ஜே. ஆர். ஆர். டோல்கீன், ஆங்கிலேய எழுத்தாளர் (இ. 1973)
- 1925 - டி. கே. புஷ்பவல்லி, திரைப்பட நடிகை
- 1953 - முகமது வாகித் அசன், மாலைதீவு அரசுத் தலைவர்
- 1956 - மெல் கிப்சன், அவுஸ்ரேலிய நடிகர்
- 1969 - மைக்கேல் சூமாக்கர், ஜெர்மனியைச் சேர்ந்த பார்முலா 1 ஓட்டுனர்
- 1978 - லியா கெபிடே, எத்தியோப்பிய-அமெரிக்க நடிகை

### இறப்புகள்

- 1795 - சோசியா வெட்ச்வூட், ஆங்கிலேய மட்பாண்ட உற்பத்தியாளர் (பி. 1730)
- 2013 - எம். எஸ். கோபாலகிருஷ்ணன், இந்திய வயலின் கலைஞர் (பி. 1931)
- 2005 - ஜே. என். டிக்சித், இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் (பி. 1936)
- 2014 - ம. சா. அறிவுடைநம்பி, தமிழ்ப் பேராசிரியர் (பி. 1954)

# படகு கவிழ்ந்து விபத்து 18 பேர் பரிதாபமாக பலி

எகிப்து நாட்டில் நேற்றுக்காலை படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 18 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

விபத்துக்குள்ளான படகு கப்ர் எல்-ஷெர் ஷெயிக் மற்றும் பெஹிர ஆகிய இரண்டு நகரங்களுக்கு இடையே போக்குவரத்தில் ஈடுபட்டு வந்தது. தலைநகர் காய்ரோவின் வடக்கு பகுதியில் இருந்து 1470 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கப்ர் எல்-ஷெர் ஷெயிக் மாகாணத்தில் இந்த விபத்து ஏற்பட்டது. படகில் சுமார் 22 பேர் பயணம் செய்ததாக எகிப்து அரசு தெரிவித்துள்ளது.

தகவல் அறிந்ததும் மீட்புக் குழுவினர் விரைந்துசென்று விபத்தில் சிக்கிக் கொண்டவர்களை காப்பாற்றும் பணிகளில் ஈடுபட்டனர. முன்னதாக கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற படகு விபத்தில் 31 பேர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கட்டபொம்மன்



வீரபாண்டிய கட்டபொம்மன், 1760 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி பொம்மு மரபில் வந்த திக்குவிசய கட்டபொம்மு- ஆறுமுகத்தம்மாள் தம்பதியருக்கு, பாஞ்சாலங்குறிச்சியில் பிறந்தார்.

பெப்ரவரி 2, 1790 அன்று 47 ஆவது பாளையக்காரராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டார். இவரது துணைவியார் வீரசக்கம்மாள்.

அழகிய வீரபாண்டியபுரம் எனும் ஊரில் (இன்றைய ஒட்டபிடாரம்) ஆட்சிபுரிந்து வந்த ஜெகவீரபாண்டியனின் (நாயக்க வம்சம்) அவையில் அமைச்சராக பொம்மு என்கிற கெட்டி பொம்மு பதவியேற்றிருந்தார். இவரது பூர்வீகம் ஆந்திர மாநிலம், பெல்லாரி ஆகும். வீரமிகுந்தவர் என்ற பொருளை தெலுங்கில் உணர்த்தும் கெட்டி பொம்மு எனும் சொல் நாளடைவில் கட்ட பொம்மு என்று மாறி பின் தமிழில் கட்டபொம்மன் என்ற சொல்லாயிற்று

ஜெகவீரபாண்டியனின் மறைவிற்குப்பின் அரசகட்டிலில் ஏறிய கட்ட பொம்மு பின் ஆதி கட்டபொம்மன் என்று மக்களால் அழைக்கப்பட்டார். இவரே பொம்மு மரபினரின் முதல் கட்டபொம்மன்.

கம்பனியார் (கிழக்கிந்திய கம்பெனி) கி.பி. 1793 இல் கப்பம் (திறை) கேட்டனர். கி.பி. 1797 இல் முதன் முதலாக ஆங்கிலேய அலன் துரை பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்கு வந்தார். அப்போது வீரபாண்டிய கட்ட பொம்மனைக் கைது செய்ய முயன்றார். அதை முறியடித்து வீரபாண்டியக் கட்டபொம்மன் பாஞ்சாலங் குறிச்சியை வந்தடைந்தார். செப்டம்பர் 5, 1799 இல் பேனர்மென் என்ற ஆங்கிலேயத் தளபதியால் பாஞ்சாலங்குறிச்சி கோட்டை முற்றுகையிடப்பட்டது. அங்கு கடும் போர் நடைபெற்றது. போரில் பல ஆங்கிலேயர்கள் உயிரிழந்தனர். இருப்பினும் கோட்டை வீழ்ந்துவிடும் என்ற நிலையில் வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையை விட்டு வெளியேறினார். 1799 ஆம் ஆண்டு, செப்டம்பர், 9 இல் ஆங்கிலேயர்களால பாஞ்சாலங்குறிச்சி கோட்டை கைப்பற்றப்பட்டது. 1799 ஆம் ஆண்டு ஒக்ரோபர், 1 இல் புதுக்கோட்டை மன்னர் விஜயரகுநாத தொண்டமானால் வீரபாண்டிய கட்டபொம்மன் கைது செய்யப்பட்டு கம்பனியாரிடம் ஒப்படைக்கப்பட்டார். 1799 ஆம் ஆண்டு ஒக்ரோபர், 16 ஆம் திகதி ஆங்கிலேயத் தளபதி பேனர்மென் ஆணைப்படி கயத்தாற்றில் தூக்கிலிடப்பட்டார்.

## வெற்றிலைக் கூட்டணியை பலப்படுத்த

# மைத்திரி அணியினர் தீவிர நடவடிக்கை

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைப் பலப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீவிரமாக இறங்கியுள்ளது. இதன்படி சிறுகட்சிகள் பலவற்றுடன் ஆரம்பக்கட்டப் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டு அமைப்பதற்கு இதுவரையில் 9 கட்சிகள் பச்சைக்கொடி காட்டியுள்ளன.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையின் கீழேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உருவாக்கப்பட்டது.

இதில் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, தினேஷ் குணவர்தன தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி, வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி, திஸ்ஸ விதாரண தலைமையிலான சமசமாஜக் கட்சி, டியூ. குணசேகர தலைமையிலான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் அங்கம்வகித்தன.

ஜனாதிபதித் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் பங்காளிக் கட்சிகளாக இருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், ஜாதிக ஹெல உறுமய ஆகியன மகிந்த கூட்டிலிருந்து வெளியேறி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் உதயமான ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்துகொண்டன.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிடித்துக் கொண்டார். அத்துடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன்ணியைப் பலப்படுத்துவதற்குரிய நடவடிக்கையிலும் அவர் இறங்கினார்.

ஆனால், மகிந்தவுக்கு ஆதரவு வழங்கிய கட்சிகள் மைத்திரியுடன் இணைந்து கூட்டணி அமைப்பதற்கு போர்க்கொடி தூக்கின.

இந்நிலையில், பொது எதிரணி என தம்மை அடையாளப்படுத்திக்கொண்டு அந்தக் கட்சிகள் தனித்து செயற்பட்டு வருகின்றன. தனி கூட்டணி அமைக்கும் முயற்சியிலும் அவை இறங்கியுள்ளன.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைப் பலப்படுத்துவதற்குரிய நடவடிக்கையில் மைத்திரி அணியினர் இறங்கியுள்ளனர். அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தலைமையிலான உயர்மட்ட உறுப்பினர்களிடமே இதற்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உட்பட ஒன்பது கட்சிகளே ஆதரவு தெரிவித்துள்ளன. எனினும், சமசமாஜக் கட்சி,இலங்கை கம்யூனிஸ் கட்சி ஆகியன மகிந்த அணிக்கே ஆதரவு வழங்கும். நிலை காணப்படுகின்றது.

அதேவேளை, ஜாதிக ஹெல உறுமய, தமிழ் முற்போக்குக் கூட்டணி உட்பட ஐக்கிய தேசிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தின் கீழ் போட்டியிடவுள்ளன எனத் தெரிய வருகிறது. (இ-7)

## ஜனாதிபதியை விரைவில் சந்திக்கிறது பரணகமகுழு



காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்திவரும் மக்ஸ்வெல் பரண்கம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு ஜனாதபதிமைத்திரிபால சிறிசேனவை அடுத்தவாரம் சந்திக்கவுள்ளது.

ஆணைக்குழுவின் செயற்பாடு தொடர்பில் கலந்துரையாடும் நோக்கிலேயே மேற்படி குழு ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளது.

இதன்போது தமது ஆணைக்குழுவின் பதவிக் காலத்தை மேலும் ஆறுமாத காலத்துக்கு நீடிக்குமாறு ஜனாதிபதியிடம் ஆணைக்குழுவினர் கோரிக்கை விடுப்பர் என அறிய முடிகின்றது.

பரணகமகுழுவின் பதவிக் காலம எதிர்வரும் பெப்ரவரி மாதம் 16ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

அதன்பின்னர் மேற்படி ஆணைக்குழுவின் பதவிக் காலத்தை நீடிப்பதா? அல்லது கலைப்பதா? என்பது தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே இருக்கின்றது.

அநதவகையில், இந்த ஆணைக்குழுவை கலைப்பதற்குரிய முடிவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுப்பார் என அறியமுடிகின்றது.

பரணகம ஆணைக்குழு கலைக்கப்பட்ட பின்னர் அதற்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் காணாமற்போனோர் தொடர்பில் அமைக்கப்படவுள்ள பணியகத்திடம் ஒப்படைக்கப்படும் எனவும் அறிய முடிகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு வகுத்துள்ள நான்கு திட்டங்களில் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக தனி பணியகமொன்று அமைக்கப்படும் என்ற உறுதிமொழியும் இருக்கிறது.

எனினும், தமது ஆணைக்குழுவின் பணிகளை முன்னெடுப்பதற்கு மேலும் காலஅவகாசம் வழங்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கவுள்ளார் என்று மக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார்.

போர்க் காலத்தில் வடக்கு, கிழக்கில் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக தமது ஆட்சியின் போது ஓய்வுபெற்ற நீதியரசர் மக்ஸ்வெல் பரணகம தலைமையில் மூவரடங்கிய குழுவொன்றை மகிந்த ராஜபக்ஷ அமைத்திருந்தார்.

இந்த விசாரணைகள் இடம் பெற்றுக்கொண்டிருக்கையில், உள்ளக போர்க்குற்ற விசாரணையை முன்னெடுக்கும் வகையில் அதன் விடயப் பரப்பை மகிந்த விஸ்தரித்ததுடன், அனைத்துலக சட்டத் திட்டம் தொடர்பில் பரணகம குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக டெஸ்மன்ட் சில்வா தலைமையில் அறுவர் அடங்கிய ஆலோசனைக் குழுவொன்றையும் அமைத்திருந்தார்.

ஆட்சி மாற்றத்தின் பின்னரும் பரணகம குழுவுக்கு பணிகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒப்புதல் வழங்கினார்.

அந்தவகையில் விசாரணைகளை முன்னெடுத்த பரணகம ஆணைக்குழு போர்க்குற்றங்கள் தொடர்பிலான தமது இறுதி விசாரணை அறிக்கையை கடந்த ஓகஸ்ட மாதம் ஜனாதிபதியிடம் கையளித்தது.

எனினும், காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகள் இன்னும் முடிவடையவில்லை. அண்மையில்கூட யாழில் பொது அமர்வு நடத்தப்பட்டது. இந்நிலையிலேயே ஜனாதிபதியை மேற்படி குழு சந்திக்கவுள்ளது. (இ-7)

## 50மில்லியன் அமெ.டொலர்களை வழங்குவதற்கு சீனா தீர்மானம்

நாட்டின் சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்கு 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்குவதற்கு சீன அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நிதியில் பெரும்பாலான பகுதி சுதேச மருத்துவத்துறையின் மேம்பாட்டுக்குப் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் மற்றைய பகுதி அரச வைத்தியசாலைகளின் அபிவிருத்தி உட்பட ஏனைய சுகாதார துறைகளின் மேம்பாட்டுக்கு பயன்படுத்தப்படவுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

சீன நன்கொடை நிதியினைப் பயன்படுத்துவதற்கான செயற்றிட்டமொன்றை வரைந்து தருமாறு சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சின் செயலாளர் அனுர ஜயவிக்ரமவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அமைச்சு அறிவித்துள்ளது. (இ-7)

## வாரம் ஒரு தகவல்

### வாழ்க்கை

நிகழ்காலத்தில் இந்தக் கணத்தில் உங்களுக்கு என்ன கிடைத்திருக்கிறதோ, நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்களோ அதிலேயே பூரணமாக லயிக்கும் போதுதான் நீங்கள் உயிர்ப்புடன் இருப்பவர்களாகிறீர்கள்; வாழ்பவர்களாகிறீர்கள்.

நிகழ்காலத்தில் வாழ்ந்து கொண்டே, கையில் கிடைத்த இந்தக் கணத்தை அனுபவித்துக் கொண்டே எதிர்காலத்தில் நீங்கள் அடைய நினைக்கும் இலக்கை நோக்கி நடை போடுங்கள் என்பதுதான் நான் கூறவரும் செய்தி.

சைக்கிள் இருக்கிறது. அதை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி வைத்துக் கொண்டு அதன்மேல் ஏறி பெடலை மிதித்தால் வண்டி நகருமா? ஒருபோதும் நகராது. பெடலை மிதித்து மிதித்துக் கால் வலி காண்பதுதான் மிச்சமாகும். அது போன்றதுதான் கடந்த கால நினைவுகளில் வாழ்வதும். அவ்வாறு வாழ்வது உங்களை எந்த இலக்கிலும் கொண்டுபோய்ச் சேர்க்காது. வேதனைதான் மேலும் மேலும் அதிகரிக்கும்.

அதே சைக்கிளில் ஸ்டாண்டை எடுத்துவிட்டு, சீட்டில் உட்காராமல் நின்று கொண்டே பெடலை மிதிக்கலாம். இப்போது அந்தச் சைக்கிளின் மூலம் எங்காவது போய்ச்சேர முடியும்.

ஆனால் நீங்கள் உட்கார்ந்து சைக்கிள் ஓட்டவில்லையாதலால் உங்கள் பயணம் மிகவும் சிரமமாக இருக்கும். சீக்கிரத்தில் களைப்பு ஏற்படும். இப்படி நின்று கொண்டே ஓட்டிச் செல்வதால் விபத்து நேரவும் அதிகவாய்ப்பு உள்ளது. இப்படிப்பட்டதுதான் எதிர்காலத் திட்டங்களை மட்டுமே கவனத்தில் கொண்டு செயற்படுவதும். இதில், நீங்கள் நிகழ்காலத்தில் எந்தச் சுகத்தையும் பெறவில்லை.இந்தக் கணம் உங்களுக்கு ஒரு போராட்டமாகவே இருக்கிறது.

## ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் 250 பேர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

பலாங்கொடை, எல்லஹறாவ பிரதேசத்தைச் சேர்ந்த தனியார் ஆடைத் தொழிற்சாலையொன்றில் பணியாற்றும் சுமார் 250 பேர் திடீர் சுகயீனம் காரண்மாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உணவு விசமானமையே இதற்கான காரணமென தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக்காலை வேளை தொழிற்சாலையில் வழங்கப்பட்ட காலை உணவை உட்கொண்டதை அடுத்தே அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் நோய் அறிகுறியுடன் இருக்கும் பலர் தொடர்ந்து வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பலாங்கொடை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-7)

## இளைஞன் கடத்தல் விவகாரம் நாளை அடையாள அணிவகுப்பு

தெமட்டகொட பகுதியில் வைத்து இளைஞனொருவன் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில், கைதான 8 சந்தேக நபர்களும் நாளை 4 ஆம் திகதி அடையாள அணி வகுப்பில் நிறுத்தப்பட இருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

இச்சம்பவம் தொடர்பில் 11வயது சிறுமியின் வாக்குமூலமும் நேற்று முன்தினம் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும், கொழும்பு மாவட்ட ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து சட்டமா அதிபரின்ஆலோசனையை கோரியிருப்பதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

இந்த கடத்தலுக்கு அவரின் டிபென்டர் ரக ஜீப் வண்டியே பயன்படுத்தப்பட்டுள்ளதோடு கடத்தபபட்ட நபர் முதலில் ஹிருணிகா பிரேமச்சந்திரவிடமே அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. இது தொடரபான விசாரணை கோப்புகள சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கைதான 8 சந்தேக நபர்களும் நாளை 4 ஆம் திகதி அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்பட இருப்பதாகவும் பொலிஸ் ஊடகப் பேசசாளர் அலுவலகம் தெரிவித்தது.

கடந்த டிசெம்பர் 21 ஆம் திகதி தெமட்டகொட பகுதியில் வைத்து கடையொன்றிலிருந்த நபர் ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு விசாரணை நடத்தி வருகிறது.

கைது செய்யப்பட்டுள்ள 8 சந்தேக நபர்களும் அளுத்கடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் அடையாள அணிவகுப்பிற்காக 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கடத்தலுக்குப்பயன்படுத்தப்பட்ட டிபெனடர் ரக ஜீப் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்குரியது என விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது. (இ-7)

# புதுவருட பலன்கள் 2016



**சுக்ர பகவான் பார்வையினால் சுகங்கள் அதிகரிக்கும்! சாதனை நிகழ்த்துவதோடு பிறர் வேதனையையும் தீர்க்க வேண்டுமென்று விரும்பும் இடப இராசி நேயர்களே!**

## சுக்ர பகவான் பார்வையினால் சுகங்கள் அதிகரிக்கும்!

புதிய திருப்பங்களைத் தரும் புத்தாண்டு பிறக்கப் போகின்றது. ராசி நாதன் சுக்ரன் உங்கள் ராசியைப் பார்க்கும் அமைப்பில் 2016 புத்தாண்டு தொடங்குகிறது.

அதே நேரத்தில் உங்கள் ராசி நாதனுக்குப் பகைவனாக விளங்கினாலும், பார்க்கும் இடங்கள் எல்லாம் புனிதமடைய வைக்கும் கிரகமாக விளங்கும் குரு பகவான் அதிசார பலத்தோடு உங்கள் ராசியைப் பார்க்கின்றார். 'குரு பார்க்க கோடி நன்மை' என்று சொல்லலாம். சுக்ர பார்வையால் சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும்.

2016 ஆம் ஆண்டு உத்தரம் நட்சத்திரத்தில் பிறக்கிறது. இது சூரியனுக்குரிய நட்சத்திரமாகும். சூரியன் உங்கள் ராசிக்கு சுக ஸ்தானம் எனப்படும் 4 ஆம் இடத்திற்கு அதிபதியாவார். எனவே தொழிலில் தொய்வு நிலை மாறி முன்னேற்றம் ஏற்படும். வாகன யோகம் கிட்டும். கையில் பணம் புரண்டு கொண்டே இருக்கும். நகை வாங்குவதில் நாட்டம் செல்லும்.

**1.1.2016 முதல் 6.2.2016 வரை**

இக்காலத்தில் குரு வக்ரம் பெற்று கன்னி ராசியில் சஞ்சரிக்கின்றார். அதிசாரக் குருவாக இருந்து பார்ப்பதால் அதிகமான நற்பலன் உங்களுக்கு கிடைக்கும். முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மத்தளம் கொட்டும் மண விழாவும் நடைபெறும். புத்தகம் தூக்கிச் செல்லும் மாணவர்களுக்கு புதிய மேல் படிப்பு செலவில்லாமல் கிடைக்கும். அயல்நாடு பயணம் ஆதாயம் தரும் விதம் அமையும். புயல்போல் சீற வந்த எதிரிகள் புஸ்வாணமாகிப்போகலாம். ஆயினும் குரு உங்கள் ராசிக்கு அஷ்டமாதிபதியாகவும் விளங்குவதால் பணி புரியும் இடத்தில் பதட்டம் காணப்படும். பக்கத்தில் இருப்போரை அனுசரித்துக் கொள்வது நல்லது.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்!**

இதுவரை உங்கள் ராசிக்கு 5 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான் ஜனவரி 8ஆம் திகதி முதல் 4 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இதுவரை உங்கள் ராசிக்கு இலாப ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த கேது பகவான் இனி தொழில் ஸ்தானத்தில் அமரப் போகிறார்.

இந்த ராகு-கேது பெயர்ச்சிக் காலம் நல்ல மாற்றங்களைக் கொடுக்கும். சிம்மத்தில் சஞ்சரிக்கும் ராகு பெப்ரவரி 7ஆம் திகதிக்கு மேல் குருவுடன் கூடி சஞ்சரிக்கப் போகிறார்.

நல்லவன் குரு. பக்கத்தில் இருக்கும் பொழுது நமக்கென்ன கவலை. இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடக்க வழி பிறக்கும். நிலம் வாங்குவதில் இருந்த தடை அகலும். பலம் பெற்ற அரசியல் வாதிகள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து வெற்றி பெற வழிவகுத்துக் கொடுப்பர்.

தாயின் உடல் நலத்தில் கவனம் தேவை. தந்தையின் மனநிலை அறிந்து செயல்படுவது நல்லது. நோயின் பிடியில் சிக்காமல் இருக்க, வரும் முன் காப்போம் என்ற திட்டத்தை வழி வகுத்துக்கொண்டு மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. எதையும் யோசித்துச் செய்வது அவசியம்.

10இல் கேது சஞ்சரிக்கும் பொழுது முத்தான தொழில் வாய்க்கும். முந்தைய ஆண்டில் கிடைக்காத சம்பள உயர்வு இப்பொழுது கிடைக்கும். கூட்டாளிகளை மாற்றம் செய்து கொள்வீர்கள்.




புதிய இடங்களுக்கு குடிபோக நினைப்பீர்கள். அலுவலகப் பணியில் இருந்த அல்லல்கள் அகலும்.

**சிம்ம குருவின் சஞ்சாரம்!**
**7.2.2016 முதல் 1.8.2016 வரை**

உங்கள் ராசிக்கு 4 ஆம் இடமான சிம்மத்தில் குரு பகவான் சஞ்சரிக்கப் போகின்றார். இதில் 7.2.2016 முதல் 17.5.2016 வரை சிம்மத்தில் குரு வக்ரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். 18.5.2016 முதல் வக்ர நிவர்த்தியாகி 1.8.2016 வரை ராகுவோடு குரு பகவான் இணைந்து நன்மைகளை வழங்கப் போகிறார்.

**விதித்த விதிப்படி நான்கினிலே**
**வியாழன் வந்திடும் போதினிலே**
**மதித்துப் பேசும் உறவுவரும்!**
**மகத்துவம் அனைத்தும்**
**சேர்ந்துவரும்!**
**கொதிக்கும் நெஞ்சம்**
**அமைதிபெற**
**குறைகள் நீங்கி வாழ்வமைய**
**துதிப்பீர் தென்முகத்**
**தெய்வத்தை!**
**துணையாய் இருப்போர்**
**தோள்கொடுப்பார்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது வாகனம், வீடு, சுகம், கல்வி, தாய், திருப்பணிகள், வாங்கல், கொடுக்கல்கள் ஆகியவற்றை அமைத்துக் கொடுக்கும் இடத்திற்கு குரு செல்வதால் அந்த இடங்கள் புனிதமடைகின்றது. எனவே பயணங்களால் பலன் கிடைக்கும். படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் அடுத்தடுத்து நல்ல வாய்ப்புகள் வந்து அலைமோதும். பாசம் காட்டாத பெற்றோர் இனி பாசம் காட்டுவர்.

ஆசைப்பட்ட படியே குடியேற அழகான வீடு அமையும். உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் வைத்துப் பேசியவர்கள் உங்களை விட்டுவிலகுவர். பழைய வாகனங்கள் பழுதாகி விட்டதே என்று கவலைப்பட்டவர்கள் அதைச் சரிசெய்து புதுப்பிக்கும் எண்ணம் உருவாகும். வியாழன் தோறும் விரதமிருந்து தென்முகக் கடவுளை தேடிச்சென்று வழிபட்டால் நன்மைகளைப் பெற இயலும்.

**குருவின் பார்வை பலன்கள்**
**7.2.2016 முதல் 1.8.2016 வரை**

சிம்மத்தில் சஞ்சரிக்கும் குரு உங்கள ராசிக்கு 8, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே இழப்புகளை ஈடு செய்யும் வாய்ப்பு கிட்டும். எடுத்த காரியங்கள் உடனே வெற்றி பெறாவிட்டாலும், கடைசி நேரத்தில் காரியம் கை கூடிவிடும். அசையும், அசையா சொத் துக்களால் வந்த பிரச்சினை மறையும். வேலையாட்களால் வந்த வேதனை தீர புதிய முடிவெடுப்பீர்கள். சிலருக்கு இட மாற்றம், ஊர் மாற்றம் மற்றும் உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இலாகா மாற்றம் போன்றவைகள் சிறப்பாக நடைபெறும்.

**சனியின் சஞ்சார நிலை!**
**27.3.2016 முதல் 10.8.2016 வரை**

விருச்சிகத்தில் சனி வக்ரம் பெறுகின்றார். அருகில் இருக்கும் ஆலயங்களுக்கு சனிக்கிழமை சென்று சனிபகவானை வழி பட்டால் இனிக்கும் பலன் கிட்டும். புதனகிழமை வழிபட்டாலோ பொன் னான தகவல் வாய்க்கும்.

**செவ்வாய் - சனி சேர்க்கை**
**27.2.2016 முதல் 9.9.2016 வரை**

விருச்சிக ராசியில் மந்தன் எனப்படும் சனியும், மங்களகாரகன் எனப்படும் செவ்வாயும் இணைகிறார்கள். எனவே சப்தம ஸ்தானம் மேலும் வலுப்பெறுகின்றது. இது கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய காலமாகும்.

தொழிலில் உற்பத்தி செய்த பொருட்களின் விற்பனை எதிர்பார்த்தபடி இருக்காது. வீட்டிலும் பிரச்சினை, வெளியிலும் பிரச்சினை. போட்டிகளுக்கு




மத்தியில் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். ஆற்றல் மிக்கவர்களின் ஆலோசனை இப்பொழுது உங்களுக்கு கைகொடுக்கும். நாட்டம் அனைத்தும் சனியின் மேல் இருந்தால் வாட்டம் தீரும். வளர்ச்சி கூடும். ஆரோக்கியம் சீராகும்.

அதே நேரத்தில் 7, 12இறகு அதிபதியான செவ்வாய் 25.10.2016 முதல் 6.12.2016 வரை உச்சம் பெறுகிறார். இதில் இழந்த சொத்துக்களை மீண்டும் பெறுவீர்கள். இதில் வியக்கும் அளவிற்கு வீடு கட்டும் வாய்ப்பு உருவாகும். கலக்கம் தீரும். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நல்ல விதமாக முடிவடையும். இல்லத்தில் ஒற்றுமை பலப்படும். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து சேருவர்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

உங்கள் ராசிநாதன் சுக்ரன் என்பதால் வெள்ளிக்கிழமை தோறும் விரதமிருந்து. இனிப்புப் பொருளை உண்டு அம்பிகையை வழிபாடு செய்யுங்கள்.

மாற்றங்களும், ஏற்றங்களும் வந்து சேர சூலாயுதத்தோடு காட்சியளிக்கும் சுந்தரியாம் பொன்னழகி அம்மனை யோக பலம் பெற்ற நாளில் வழிபாடு செய்யுங்கள். பழகாத மனிதர்களும் கூட உங்களுக்கு உதவி செய்வார்கள். பணத் தேவைகளும் உடனுக்குடன் பூர்த்தியாகும்.

**இடப ராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்த ஆண்டு தொடக்கத்தில் வளர்ச்சி கூடுதலாக இருக்கும். அதிசார குருவின் ஆதிக்கத்தால் புதிய திருப்பங்கள் ஏற்படும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகள் நனவாக வரன்கள் வந்து சேரும். பூர்வீக சொத்துகளிலிருந்து வரும வருமானத்தை, சகோதரர்கள் சந்தோஷ மனதுடன் முன்வந்து தரலாம். கணவன்- மனைவிக்குள் நெருக்கம் கூடும்.

ஒகஸ்ட் மாதம் குருப்பெயர்ச்சிக்குப் பிறகு மருத்துவச் செலவு குறையும். மங்கல ஓசை மனையில் கேட்கும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்க உடனிருக்கும் குடும்ப உறுப்பினர்கள் ஒத்து வருவர். பொது நலத்தில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

அர்த்தாஷ்டம ராகு ஆதிக்கம் செலுத்துவதால் ஒரு சில சமயங்களில் மூன்றாம் நபரின் தலையீட்டால் குடும்ப ஒற்றுமை குறையலாம். 10 இல்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

வரும் கேது முத்தான தொழிலைக் கொடுத்தாலும், சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் சரியாகத் தேர்ந்தெடுத்துச் செய்தால் எப்பொழுதும் போல இனிய வாழ்க்கை அமையும். பெண் தெய்வ வழிபாடும் விருப்பங்களை நிறைவேற்றும்.

**ஆடி பதினெட்டில் தேடி வரும் யோகம்!**

ஆடி பதினெட்டு (2.8.2016) முதல் 5 ஆம் இடத்தில் கன்னி ராசியில் குரு சஞ்சரிக்கப் போகின்றார். அப்போது அதன் பார்வை முழுமையாக உங்கள் ராசியில் பதிகின்றது.

எப்போதும் இல்லாத அளவிற்கு முன்னேற்றம் ஏற்படும். கற்பனைக்கு எட்டாத அளவு உச்சத்தை அடையப் போகிறீர்கள். எனவே குருவின் அருள் கிடைக்க கோவிலுக்குச் சென்று வழிபடுவது நல்லது.

இந்தக்காலத்தில் திருமணம் வாய்க்கும், திடீர் முன்னேற்றம் ஏற்படும். அருமைக் குழந்தைகளின் வாழ்க்கைத் தரம் உயரும். இல்லத்தில் ஆனந்தம் குடிகொள்ளும். உரிமையோடு நண்பர்கள் உதவி செய்வர். பொறுமைக்குப் பரிசு இப்பொழுது கிடைக்கப் போகின்றது.

நாளை மிதுனம்

# இந்த ஆண்டு இறுதிக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு

## அரசாங்கம் திட்டவட்டம்

(கொழும்பு)

**கடந்த காலங்களில் நாட்டில் காணப்பட்ட அரசியல், இன ரீதியான சிக்கல்களுக்கு தீர்வு காணும் வகையில் நாம் முன்னெடுத்து வரும் செயற்பாடுகள் இந்த ஆண்டிலும் தொடரும். அதே போல், இந்த ஆண்டு இறுதிக்குள் அரசியல் பிரச் சினை தீரும் என அரசாங்கத்தின் ஊடகப்பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவத்துள்ளார்.**



அரசாங்கத்தை நம்பி எம்முடன் கைகோர்த்தமைக்கு நாம் எப்போதும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். அதே போல் எந்த சந்தர்ப்பத்திலும் நாம் அரசாங்கம் என்ற ரீதியில் தமிழ், முஸ்லிம் மக்களுடன் கைகோர்த்து செயற்பட தாயாராக உள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டுக்குள் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படுவது உறுதி என தமிழர் தரப்பு தெரிவித்துள்ள நிலையில் அரசாங்கம் எவ்வாறான வகையில் செயற்படும் என வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டு ஆரம்பம் நாட்டுக்கும் மக்களுக்கும் மிகவும் முக்கியமான ஆண்டாக அமைந்தது. யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு ஐந்து ஆண்டுகளில் நாட்டையும் மக்களையும் அடக்குமுறைக்கு உட்படுத்தி நாட்டை சர்வாதிகாரத்தின் பக்கம் கொண்டு சென்ற மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை வீழ்த்தி ஜனநாயக, மக்கள் நலன் பேணும் அரசாங்கத்தை உருவாக்கியுள்ளோம்.

அதேபோல் நாட்டுக்கு எதிரான அழுத்தங்கள், சர்வதேச படையெடுப்புகள் அனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்துள்ளோம். கடந்த காலங்களில் பொருளாதார ரீதியிலும் வாழ்வாதார முறையிலும் மக்கள் நெருக்கடிக்கு உள்ளாககப்பட்டு பாரிய கஷ்டங்களை அனுபவித்து வந்தனர்.

ஆனால் புதிய அரசாங்கத்தின் வரவு செலவு திட்டம் மக்களை பொருளாதார சுமையில் இருந்து காப்பாற்றும் வகையில் அமைந்துள்ளது. அவ்வாறான ஒரு நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் கடந்த ஆண்டு மக்களுக்கு மிகவும் சிறந்த ஆண்டாக நிறைவடைந்துள்ளது.

அதேபோல் ஆரம்பமாகியுள்ள இந்த புது வருடம் கடந்த ஆண்டைப்போல மேலும் பல நன்மைகள் ஏற்படும் வகையில் அமையும் என்ற வாக்குறுதியை எம்மால் கொடுக்க முடியும். மூவின மக்களும் தமது உரிமைகளுடன் வாழக்கூடிய வகையில் நாடு என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணையும் ஒரு ஆட்சியை எம்மால் முன்னெடுக்க முடியும்.

அதேபோல் பொருளாதார ர்தியிலும் அரசியல் ரீதியிலும வளர்ச்சி கண்ட நாடாக இலங்கையை மாற்றும் நடவடிக்கைகளை பிரதான இரணடு கட்சிகளின் தலைமைத்துவமும் மேற்கொள்ளும். குறிப்பாக கடந்த காலங்களில் நாட்டில் காணப்பட்ட அரசியல் மற்றும் இன ரீதியான சிக்கல்களுக்கு தீர்வு காணும் வகையில் நாம் முன்னெடுத்து வரும் செயற்பாடுகள் இந்த ஆண்டிலும் தொடரும்.

புதிதாக அரசியல் அமைப்பு மாற்றம் ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சித்து வருகின்றது. ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் தலைமையில் பிரதான இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து கலந்தாலோசித்து வருகின்றன. ஆகவே புதிய அரசியல் அமைப்பில் நிச்சயமாக அரசியல் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஆட்சி மாற்றத்தின் போராட்டத்தில் தமிழ் மக்கள் மிகப்பெரிய பங்காளர்களாக காணப்பட்டனர். அதில எந்த சந்தேகமும் இல்லை. எம்மை நம்பி எம்முடன் கைகோர்த்தமைக்கு நாம் எப்போதும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். அதேபோல் எந்த சந்தர்ப்பத்திலும் நாம் அரசாங்கம் என்ற ரீதியில் தமிழ், முஸ்லிம் மக்களுடன் கைகோர்த்து செயற்பட தாயாராக உள்ளோம்.

கடந்த காலத்தில் விட்ட தவறுகளை இந்த அரசாங்கம் விடப் போவதில்லை. நாம் வடக்கு, கிழக்கு மக்களை அக்கறையுடன் கவனித்து வருகின்றோம். அதேபோல் சிங்கள, தமிழ் உறவையும் பலப்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றோம்.

எனவே இந்த ஆண்டு இறுதக்குள் அரசியல் பிரச்சினை தீரும். அதேபோல் நாட்டில் மூவின மக்களும் ஒன்றாக வாழக்கூடிய சூழலை உருவாக்கியுள்ளோம். அதை தொடர்ந்தும தக்க வைப்போம என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இந்திய சிறையிலிருந்த பாகிஸ்தான் கைதிகள் 189 பேரை காணவில்லை

இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே நல்லெண்ண அடிப்படையில் நேற்று முன்தினம் சிறைக்கைதிகள் மற்றும் மீனவர்கள் பரஸ்பரம் விடுதலை செய்யப்பட்டனர.

இருநாடுகளிடையே கடந்த 2008 மே 31 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட தூதரக அளவிலான ஒப்பந்தப்படி ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி ஒன்று மற்றும் ஜுலை முதலாம் திகதி இருநாட்டு சிறைகளிலும் உள்ளவர்களை பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டும். அதன் அடிப்படையில் ஜனவரி முதலாம் திகதியான நேற்று முன்தினம இநத நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி இருதரப்பிலும் வழக்கமான முறையில் சிறையில் உள்ள மற்றநாட்டு கைதிகளின் பட்டியலை பரிமாறினர். ஆனால் இதில் இந்திய தரப்பில் முரண்பாடு உள்ளதாக பாகிஸ்தான் கூறியுள்ளது.

17 மீனவர்கள் உட்பட 271 பாகிஸ்தான் கைதிகள் சிறைகளில் உள்ளதாக இந்திய தரப்பில் கூறப்பட்டது. ஆனால், பாகிஸ்தான் தரப்பில் 460 கைதிகள் இந்திய சிறைகளில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும் 113 மீனவர்களும் இந்திய சிறைகளில் உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனால் 189 கைதிகள் காணவில்லை என்பது சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இருநாடுகளுக்கு இடையேயான வெளியுறவுச் செயலாளர்கள் மத்தியிலான பேச்சுவார்த்தை வருகிற ஜனவரி 25 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், அதற்கு முன்பாக கைதிகள் காணாமற்போன விவகாரம் தொடர்பாக இந்திய அரசிடம் பேச பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது.

மோடியின் லாகூர் பயணத்தை தொடர்ந்து இந்தியா-பாகிஸ்தான் இடையிலான பேச்சுவார்த்தையில் தற்போது புதிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் கூறிவரும் நிலையில் கைதிகள் காணவில்லை என்ற விவகாரம் புதிய சிக்கலை உருவாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# திடீர் விபத்துக்களின் எண்ணிக்கை உயர்வு

கடந்த ஆண்டினை காட்டிலும் இந்த புத்தாண்டில் திடீர் விபத்துக்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. புத்தாண்டு காலத்தில் கடந்த ஆண்டை விடவும் இந்த ஆண்டில் அதிகளவான விபத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் திடீர் விபத்து காரணமாக சிகிச்சை பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 20 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது என வைத்தியசாலையின் பணிப்பாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி கடந்த 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் திடீர் விபத்துக்கள் காரணமாக காயமடைந்த 551 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாகவும் கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 531 ஆக காணப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

31 ஆம் திகதி நள்ளிர முதல் முதலாம் திகதி காலை 7 மணி வரையிலான காலப்பகுதியில் பல்வேறு விபத்துக்கள் காரணமாக 68 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். வீதி விபத்து, வீட்டு வன்முறை மற்றும் பட்டாசு வெடித்தல் போன்ற காரணிகளினால் அதிகளவானவர்கள் விபத்துக்குள்ளாகியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# புரளியால் அச்சப்பட வேண்டாம்

10 வருடங்களுக்கும் அதிக காலம் எவ்வித கொடுக்கல்-வாங்கலும் இல்லாத வாடிக்கையாளர்களின் வங்கிக் கணக்குகள் அரச உடைமையாக்கப்படுவதாக வெளியாகியுள்ள புரளியால் அச்சப்பட வேண்டாமென மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் கேட்டுக் கொண்டார்.

மேற்படி வங்கிக்கணக்குகளை வாடிக்கையாளர் மீளப் பெறும் வரை மத்திய வங்கியினால் பாதுகாக்கப்பட்டு தேவையான சந்தர்ப்பத்தில் உரிய வட்டியுடன் திரும்ப செலுத்தப்படும் என்றும் அவர் உத்தரவாதமளித்தார்.

நிதிஅமைச்சர் இதனை திறைசேரி முறிகள் கொள்வனவுக்கு பயன்படுத்துவோம் என்ற யோசனை வரவு செலவு திட்டத்தில் முன்வைத்துள்ளதே இங்குள்ள புதிய விடயமாகும் என மத்திய வங்கிகளுக்கு பொறுப்பான பிரதி ஆணையாளர் பி.சமரசிறி விளக்கமளித்தார். (இ-7)

# தொழிற்சாலைகளுக்கு எதிராக 3ஆயிரத்து930 முறைப்பாடுகள்

தொழில் அமைச்சின் 2015 ஆம் ஆண்டு புள்ளி விபரப்படி 1192 தொழிற்சாலை பிணக்குகளும் 1691 தொழிற்சாலை விபத்துக்களும் இடம்பெற்றிருக்கின்றன. அவற்றில் 1046 தொழிற்சாலைப் பிணக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் 3930 முறைப்பாடுகள் தொழிற்சாலைக்கு எதிராகவும் அவற்றில் சில பாதுகாப்பற்ற நிலையில் உள்ள தொழிற்சாலைகளைச் சார்ந்தனவாகவும் அதில் 18 இற்கு எதிராக சட்ட நடவடிக்கை 2015இல் எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கிறது.

2015இல் தொழிற்சங்கப்பதிவிக்கு விண்ணப்பித்தவர்களில் 249இற்கு அனுமதி மறுக்கப்பட்டது என தொழில் திணைக்கள புள்ளிவிபரம் தெரிவிக்கிறது. (இ

# கறுப்புக்கொடி வாரம் நேற்று முதல் பேஸ்புக் ஊடாக ஆரம்பம்-கம்மன்பில



அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முதல் நாடு தழுவிய ரீதியில் பேஸ்புக் ஊடாக கறுப்புக்கொடி வாரம் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 8 ஆம் திகதிக்குள் ஊர் ஊராக, வீடு வீடாக இந்த விடயத்தை கொண்டு செல்லப் போவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போதைய அரசாங்கத்தினால் மக்கள் விரக்தியடைந்துள்ளதாகவும் இதனால் மக்கள் கறுப்புக் கொடிகளை ஏற்றி தமது எதிர்ப்பினை வெளிக்காட்டுவதன் மூலம் ஆட்சியாளர்கள் பொதுமக்களது எதிர்ப்பினை புரநதுக் கொள்வார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனவே பொதுமக்கள் அனைவரும் இந்த திட்டத்திற்கு ஒத்துழைக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

# தென்பகுதியிலிருந்து கொண்டு வரப்படும் போத்தல் கள்ளினால் சமூகச்சீர்கேடு அதிகம்

## கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள்

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு தென். பகுதிகளிலிருந்து கொண்டு வரப்படும் போத்தல் கள்ளினை நிறுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுபற்றி பொதுமக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

தென் பகுதிகளிலிருந்து கொண்டு வரப்படும் போத்தல் களளில் அதிகளவு போதை நிறைநதுள்ளது இப்போத்தல் கள்ளானது அதிகளவு போதையை உண்டாக்கக் கூடியதும உடல் ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கக் கூடியதுமான இரசாயனப் பொருட்களை உள்ளீடாகக் கொண்டே தயாரிக்கப்படுகின்றது.

இதனால் குறைந்த செலவில் இதனை அருந்தும் மதுப் பிரியர்கள் அதிக போதை தலைக்கு ஏறிய நிலையில் வீட்டிற்குச் சென்று குடும்பத் தலைவிகளுடனும் அருகில் வசிப்பவர்களுடனும் தேவையற்ற விதத்தில் சண்டையிடுவதாகவும் இதனால் பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்படைவதுடன் குடும்பங்களின் இயல்பு நிலை பாதிப்படைவதாகவும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அத்துடன் இந்தப் பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் உற்பத்தி செய்யப்படும் கசிப்பிலிருந்தும் இரகசியமான முறையில் பரவலாக விற்கப்பட்டுவரும் கஞ்சாவிலிருந்தும் மக்களை மீட்பது எப்படியென சிந் திக்கும் வேளையில் இவ்வாறான சட்டபூர்வ மற்ற முறையில் உற்பத்தி செய்யப்படும் போதை நிறைந்ததும் உடலிற்கு கேடு விளைவிக்கக் கூடியதுமான தென்பகுதி போத்தல் கள்ளின் விற்பனையை இங்கு எப்படிக்கட்டுப்படுத்துவது என சமூக ஆர்வலர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்வாறான போத்தல் கள்ளினை முல்லைத்தீவு மாவட்டத்தில் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-302)

# ஆதிபராசக்தி அடியார்களுக்கு முதல் முறையாக மாலை அணிவித்தலும் இருமுடி செலுத்தலும்

(பனிக்கன்குளம்)

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அடியார்களுக்கு தாயகத்தில் முதன் முதலாக சக்தி மாலை அணிவித்தலும் இருமுடி செலுத்தலும் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

சுயம்பு அருள்மிகு மேல்மருவத்தூர் ஆதிபராசக்தியின் கிளிநொச்சி வழிபாட்டு மன்றத்தின் ஒழுங்கமைப்பில் இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆதிபராசக்தியின் அருளோடும் ஆசீர்வாதத்தோடும் தாயகத்தில் முதன்முதலாக சக்தி மாலை அணிதலும் இருமுடி செலுத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.




இந்நிகழ்வில் அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அன்னையின் வழிபாட்டு நிகழ்வில் வேறுபாடின்றி அனைவரையும் கலந்துகொண்டு இருமுடி செலுத்தி அன்னையின் அருளைப் பெற்றுக்கொள்ளுமாறு மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கிளிநொச்சி வழிபாட்டு மன்றத்தினர் கோரியுள்ளனர். வழிபாடு தொடர்பான மேலதிக விபரங்களை பெறுவதற்கு 077 517 0377, 077 033 8236, 077 020 0124 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாக மேற்படி வழிபாட்டு மன்றத்தினரிடம் தொடர்பு கொண்டு அறிந்துகொள்ள முடியும் என்று கூறப்பட்டுள்ளது. (2-281)



வவுனியா, பரண்நட்டகல்லு கிராமத்தில் பிரான்ஸ் தமிழ் ஒலி வானொலியின் சமூகப்பணி பிரிவின் ஊடாக நான்கு இலட்சம் ரூபாய் நிதியில் நிர்மாணிக்கப்பட்ட "பெரிய ஐயா" முன்பள்ளி வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தனால் அண்மையில் திறந்து வைப்பதை படங்களில் காணலாம்.

# முள்ளியவளை வர்த்தக சங்கத்தை மீளவும் இயங்க வைக்க கோரிக்கை

(வற்றாப்பளை)

முள்ளியவளை பிரதேச வர்த்தக சங்கத்தை சீராக இயங்க வைக்குமாறு அப்பகுதி வர்த்தகர்கள் வர்த்தக சங்க நிர்வாகத்தினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இச் சங்கமானது கடந்த இரண்டு வருடங்களாக எந்தவிதமான செயற்பாடுகளும் இன்றி காணப்படுகின்றது.

முள்ளியவளைதபால்நிலையத்தை மையப்படுத்தி அதன் கரும எல்லைக்குட்பட்ட வர்த்தகர்கள் சுமார் 150 பேரை ஒன்றுதிரட்டி அமைக்கப்பட்டது.

மேற்படி சங்கத்தின் தலைவர், செயலாளர் ஆகியோர் உரிய முறைப்படி நிர்வாகத்தை மாற்றி அமைக்காமல் வெளிநாடுகளில் சென்று வாழ்வதால் சங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தும் முடக்கப்பட்டுள்ளன என ஏனைய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் புதிய நிர்வாகத்தை தெரிவு செய்து வர்த்தகர்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் பணிபுரிவோரின் நலன்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (2-310)

# வீதிப் புனரமைப்பு பணியை துரிதப்படுத்தி போக்குவரத்தை இலகுபடுத்துங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட அம்பாள்குளம் விவேகானந்த வித்தியாலயத்திற்கு செல்கின்ற வீதி சேதமடைந்த நிலையில் காணப்படுவதாக பொதுமக்கள், மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது அம்பாள்குளம் உதயநகர், பாரதிபுரம், மலையாளபுரம், கிருஷ்ணபுரம் போன்ற கிராமங்களை இணைக்கின்ற பிரதான வீதியாகும். இவ் வீதியின் ஊடாகவே கிளி/விவேகானந்த வித்தியாலயம், கிளி/பாரதிபுரம் மகா வித்தியாலயம், கிளி/அன்னைசாரதா தேவி வித்தியாலயம், எஸ்.கே முதியோர் இல்லம் (மலையாளபுரம்), தனியார் கல்வி நிலையங்கள் ஆகியன அமைந்துள்ளன.

இவ்வீதியினூடாகவே மக்களும் மாணவர்களும் போக்குவரத்து செய்கின்றனர்.

இவ் வீதியில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பும் இதேபோன்று சேதமடைந்து காணப்பட்ட வேளை மோட்டார் வாகனத்தில் இரவு பயணித்த போது விபத்துக்குள்ளாகி உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதுபோன்ற பல விபத்துக்கள் நடைபெற்று காயங்களும் படுகாயங்களும் வாகன சேதங்களும் பாடசாலை மாணவர்கள் இப் பள்ளங்களுக்குள் விழுந்து எழும்பி பாடசாலை செல்லாது மீண்டும் வீடுகளுக்கு திரும்பி சென்ற நிலையும் காணப்படுகின்றது.

மழை காலங்களில் வெள்ளநீர் வீதியை குறுக்கறுத்து பாய்வதனால் இவ்வாறான நிலை காலத்துக்கு காலம் ஏற்படுகின்றது.

இவ் வீதியை செப்பனிடும் வேலையை செய்கின்றவர்கள் கிரவல்மண்ணை பரவி வீதியிலுள்ள பள்ளங்களை நிரவி விட்டு செல்கின்றனர்.

இவ் வீதியின் இரு பக்கங்களும் வடிகான்கள் அமைப்பதன் ஊடாக பருவ மழை காலங்களில் இவ்வாறான சேதங்கள் ஏற்படாமல் தடுக்க முடியுமென பொது மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் வீதியை நேரில் சென்று பார்வையிட்டு புனரமைப்பு செய்யுமாறு பொதுமக்களாலும் பாடசாலை மாணவர்களாலும் கோரிக்கை விடப்படுகின்றது. (2-271)

# இடைநிறுத்தப்பட்ட பேருந்து சேவையை மீளவும் இயங்க வைக்க நடவடிக்கை எடுங்கள்

## — பாதிக்கப்பட்ட பொதுமக்கள் —

முள்ளியவளைப் பிரதேசத்திலுள்ள சந்தியம்மன் தொடக்கம் வற்றாப்பளை மத்தி வரையான 03 கி.மீ. குறுந்தூர பேருந்து சேவையானது கடந்த யுத்த காலத்தின் பின்னர் நிறுத்தப்பட்டமையால் அப்பகுதியால் பயணம் செய்யும் மக்கள். மாணவர்கள் ஆகியோர் நடந்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர். இதனால் குறித்த நேரத்தில் உரிய இடத்திற்குச் சென்றடைய முடியாத நிலையிலுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த யுத்தகாலங்களில் மணணெண்ணெயில் பேருந்து ஓடிய போதும் மக்கள் மற்றும் மாணவர்களின் நலன்கருதி இங்கு குறுந்தூர பேருந்து சேவை இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் தற்போது ஏன் இவ்வாறான சேவையை ஏற்படுத்த முடியவில்லையென மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். எனவே குறித்த பிரச்சினை தொடர்பாக உரியவர்கள் உடனடித்தீர்வைப் பெற்றுத் தருமாறு கிராம மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (2-301)

# கடற்கொந்தளிப்பு காரணமாக கடற்றொழிலாளர்கள் பாதிப்பு

(மாமூலை)

கடந்த ஒரு வாரமாக கடல் கொந்தளிப்பாகக் காணப்படுவதால் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் கடலுக்குச்சென்று தொழிலில் ஈடுபடமுடியாத நிலையில் உள்ளனர்.

இவ்வாறான அசாதாரண நிலையானது மீனவர்களின் வாழ்வாதாரத்தை பெரிதும் பாதித்துள்ளது. இதனால் முல்லைத்தீவில் உள்ள அனைத்து சந்தைகளிலும் கடல் உணவுக்கு தட்டுப்பாடு காணப்படுகின்றது.

இங்கு ஏனைய மாவட்டங்களைப்போல மீன் இறக்குமதி செய்யப்படுவதுமில்லை. ஏனைய மாவட்டங்களைப்போல இங்கும் மீன் இறக்குமதி செய்யப்பட்டு நியாயமான விலையில் விற்கப்பட வேண்டுமென நுகர்வோர்கள் கூறுகின்றனர்.

தற்போது நன்னீர் மீன்களுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளதாகச் சந்தை வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. (2-301)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்தவர் வைத்தியசாலையில்

வவுனியாவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

வவுனியா சூசைப்பிள்ளையார் குளத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் பேருந்து மற்றும் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹொரவப்பொத்தானையிலிருந்து வவுனியா நோக்கி வந்த தனியார் பேருந்துடன் மோட்டார் சைக்கிள் மோதியே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்தவரே படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டனர் என தெரிவிக்கப்படுகின்றது. (2-250)

# பற்சிகிச்சை முகாம்

(உருத்திரபுரம்)

கிளிநொச்சி மகாதேவா சிறுவர் இல்லத்தில் விடுமுறைக்காலத்தில் தங்கியிருக்கின்ற 70 இற்கும் மேற்பட்ட இல்லக் குழந்தைகளுக்கான பற்சிகிச்சை முகாம் கடந்த மாதம் 17,18 ஆகிய திகதிகளில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இயங்கிவரும் கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் பற்சிகிச்சை நிலையத்தில் நடைபெற்றது.

சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்ட குழந்தைகளில் பல் அகற்றப்பட வேண்டியவர்கள், பற்கள் சுத்தம் செய்யப்பட வேண்டியவர்கள், பல் அடைக்கப்பட வேண்டியவர்கள் என மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப் பட்டு அவர்களுக்கு தகுந்த சிகிச்சை வழங்கப்பட்டது. (2-298)




அமெரிக்கன் மிஷன் (வன்னி பிராந்திய) திருச்சபையின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 11 மணியளவில் முல்லைத்தீவு இந்துபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 65 குடும்பங்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

(படம்:- பொன்னகர் செய்தியாளர்)

உயர்ந்த இலட்சியத்தை அடைய வீறுடன் உழைப்பவனுக்கு சிறு குறைகள் உறுத்தாது
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# குற்றமற்ற-சமாதானமான மாவட்டமாக யாழ்ப்பாணம்

குற்றமற்ற – சமாதானமான மாவட்டமாக யாழ்ப்பாணத்தை ஆக்குவதென யாழ் மாவட்ட நீதிபதிகள் பிரகடனம் செய்திருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும். பொதுவில் எங்கள் வடபுலத்தில் பிரகடனம் செய்து கடமையாற்றுவதென்பது மிகமிகக் குறைவு எனலாம்.

எப்போதும் ஒன்றைப் பிரகடனப்படுத்தி அதனை நோக்கிப் பணியாற்றுவதென்பது அபரீதமான வெற்றியைத் தரும். அந்த வகையில் யாழ்.மாவட்டத்தை 2016–ல் சமாதான மாவட்டமாகப் பிரகடனப்படுத்தி அதனை அமுல் படுத்துவதென்ற உயரிய இலக்குடன் யாழ். மாவட்ட நீதிபதிகள் எடுத்திருக்கும் பிரகடனம் உண்மையில் வரவேற்கப்பட வேண்டும்.

அதேநேரம் மேற்படி பிரகடனத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பதும் உண்மை. எனினும் எங்கள் இளைஞர்கள், மாணவர்கள் இயல்பில் நல்லவர்கள். அவர்கள் ஒருபோதும் அடிப்படையில் தீமையான நோக்கங்களை கொண்டவர்கள் அல்ல.

இருந்தும் கடந்த கால யுத்த சூழ்நிலைகளும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட விரும்பத்தகாத சூழமைவுகளும் எங்கள் பிள்ளைகளுக்குப் பாதகமாக அமைந்து போயிற்று.

இதற்கப்பால் எங்கள் மண்ணில் நீண்டு நிலைத்திருந்த ஆத்மிக சிந்தனைகள் வலுக்குறைந்து போனமையும் எங்கள் மண்ணில் குற்றங்கள் நிகழக் காரணமாயிற்று. இது ஒருபுறம் நடந்தேற, பெற்றோர்கள் தொலைக்காட்சிகளின் தொடர் நாடகங்களுக்குள் மூழ்கிப்போக, வீடு என்ற கட்டமைப்பு தளர்வு காணலாயிற்று. இதனால் எங்கள் இளைஞர்கள் நெறிமுறை என்ற ஒழுங்கமைப்பில் இருந்து விலகத்தலைப்பட்டனர்.

ஆக, யாழ்.மாவட்டத்தை குற்றமற்ற – சமாதான மாவட்டமாக பிரகடனப்படுத்தி அந்த இலக்கை அடைதற்காக பல வழிகளில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இளைஞர்கள் என்ற உழைக்கும் படை ஏதோ ஒருவகையில் தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதும் அவசியம்.

இது தவிர பொதுசனத் தொடர்பு என்பதுஇன்னமும் எங்களிடம் எதிர்மறையானதாகவே உள்ளது. அரச அலுவலகங்கள் உள்ளிட்ட பொது அமைப்புகளில் பணியாளர்களுக்கும் பொதுமக்களுக்குமான தொடர்பாடல் வெறுப்புக்குரியுதாக, கோபமுடையதாக, எரிச்சலூட்டுவதாக இருப்பதைக் காண முடிகிறது.

பொதுமக்களுக்குரிய தகவல்களை வழங்குவதில் பணியாளர்கள் பலரும் தவறிழைத்து விடுகின்றனர். இதுதவிர பொதுஇடங்கள், சந்தைகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் நல்ல சொற்பிரயோகங்களை பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வுகள் செய்யப்பட வேண்டும்.

சந்தையில் நின்று கெட்டவார்த்தைகள் பேசும் போதுஅதனைக் கேட்கின்ற சிறுவர்கள் அதற்குப் பழக்கப்பட்டு விடுகின்றனர். எனவே இவை தொடர்பிலும் நாம் கரிசினை செய்வது கட்டாயம்.

இவையாவற்றுக்கும் மேலாக எமது முக்கிய இலக்கு மாணவர்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மாணவர்களை நல்வழிப்படுத்துதல்– அவர்களை ஆன்மிக சிந்தனை உள்ளவர்களாக மாற்றுதல், இனியன உரைக்கும் இன்முகத்தவர்களாக, பன்முக ஆளுமை உள்ளவர்களாக, பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்கின்ற மனநிலை உடையவர்களாக ஆக்கிக் கொள்வதில் பாடசாலைகளுக்கான வகிபங்கு ஏராளம் உண்டு.

படி.. படி.. என்பதைத் தவிர வேறு எதுவும் அறியாப் பள்ளிகளால் நன்மாணாக்கரை உருவாக்க முடியாது. எனவே அன்பு, இரக்கம், பரோபகாரம், உண்மை, நேர்மை, நீதி என்ற உயர்ந்த பண்புகளை மாணவர்களிடையே பரப்புகை செய்யும் போது இயல்பாகவே சாந்தியும் சமாதானமும் ஏற்பட்டுவிடும்.

ஆகையால் யாழ்ப்பாணத்தை குற்றமற்ற– சமாதானமான மாவட்டமாக மாற்றுவதற்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பது தலையாய கடமை.

# கொழும்பில் பாதைகளில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு கட்டணம் அறவீடு

(கொழும்பு)

கொழும்பு காலி வீதி மற்றும் ஆர். ஏ. டி மெல் மாவத்தை ஆகிய பாதைகளின் இரு மருங்கு மற்றும் குறித்த வீதிகள் தொடர்புபடும் அனைத்து கிளை வீதிகளின் இரு மருங்குகளிலும் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு கட்டணம் அறவிடுவதற்கு கொழும்பு மாநகரசபை தீர்மானித்துள்ளது.

அதற்கமைய தெஹிவளை மேம்பாலம் தொடக்கம் கலதாரி சுற்றுவட்டம் வரையும், ஆர். ஏ. டி மெல் மாவத்தையில் தம்மாராம வீதி தொடக்கம் லிபேட்டி சுற்றுவட்டம் வரையும் எந்த இடத்திலாவது வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலும் கட்டணம் அறவிடப்படவுள்ளது.

குறித்த பிரதான வீதிகளுக்கு மேலதிகமாக அந்த பாதையுடன் தொடர்புபடும் கிளை வீதிகளில் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களுக்கும் கட்டணம் அறவிடப்படவுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல்கள் நேற்று அப்பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

குறித்த அறிவித்தலுக்கு அமைய,மோட்டார் சைக்கிளில் ஒன்று ஒரு மணித்தியாலம் நிறுத்தி வைக்க 10 ரூபாய் அறவிடப்படுவதாகவும், கார் ஒன்று ஒரு மணித்தியாலம் நிறுத்தி வைக்க 30 ரூபாய் அறவிடப்படுவதாகவும், முச்சக்கரவண்டி ஒன்றுக்கு ஒரு மணித்தியாலத்திற்கு 20 ரூபாய் அறவிடப்படுவதாகவும், அனைத்துவிதமான லொறி வகைகளும் ஒரு மணித்தியாலம் நிறுத்தி வைக்க 50 ரூபாய் அறவிடப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனம் ஒன்றுடன் இணைந்து கொழும்பு மாநகர சபை இத்திட்டத்தை நேற்று தொடக்கம் முன்னெடுத்துள்ளது.

மிகவும் சிறந்த சாலை ஒழுக்கம் மற்றும் மிகவும் முன்னேற்றகரமான வாகன தரிப்பிடம் திட்டத்தின் ஊடாக கொழும்பு நகரின் வாகன நெரிசலை குறைப்பது இத்திட்டத்தின் நோக்கம் என அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தினம் தோறும் கொழும்பு காரியாலயங்களில் தொழில் நிமித்தம் வருகை தரும் வாகன உரிமையாளர்கள் இத்திட்டத்திற்கு பலத்த எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதோடு, இத்திட்டத்தின் காரணமாக தாம் தினமும் 250 ரூபாய் செலவிட வேண்டியுள்ளதாகவும் அவரகள் தெரிவித்துள்ளனர்.(செ–12)

## திருவாசகம் முற்றோதல்

யாழ்.கந்தர்மடம் சிவகுருநாத குருபீடம் வேதாந்தமடத்தில் இன்று காலை 6.30மணி தொடக்கம் மதியம் வரை திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து அங்குள்ள சுவாமிமார்களது சமாதிகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று இறுதியாக மகேஸ்வர பூஜையும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.(செ)

## பேஸ்புக் தொடர்பில் 2,800 முறைப்பாடுகள்

கடந்த வருடத்தில் சமூக இணையத்தளமான பேஸ்புக தொடர்பில் 2 ஆயிரத்து 800 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக கணினி அவசர நடவடிக்கைப் பிரிவு தெரிவித்துள்ளது.

போலியான கணக்குகள் தொடர்பிலேயே அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அந்த பிரிவின் சிரேஷ்ட தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர் ரொஷான் சந்திரகுப்த குறிப்பிட்டார்.

தமது பெயர்களில் வேறு நபர்கள் கணக்குகளை வைத்திருப்பதாக தமக்கு அதிக முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதுகுறித்து பேஸ்புக் இணையத்தளத்திற்கு நேரடியாக முறைப்பாடுகளை தெரிவிப்பதன் மூலம், உரிய நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் கணனி அவசர நடவடிக்கைப பிரிவின் சிரேஷ்ட தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர் தெரிவித்தார்.

அறிமுகமில்லாத நபர்களை பேஸ்புக்கில் நண்பர்களாக இணைத்துக்கொள்வதை தவிர்க்குமாறும் அவர் அறிவுரை விடுத்துள்ளார்.

0112691692 /011 2679 888 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அல்லது 011 2691 064 என்ற தொலைநகல் இலக்கத்திற்கு அறிவிப்பதன் மூலமும் அல்லது slcert @certdotgovdotlk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு பேஸபுக் தொடர்பான முறைப்பாடுகளை முன்வைக்க முடியும். (செ-12)

## மீண்டும் சிறைக்கு செல்வார் ஜெயா

### வைகோ தெரிவிப்பு

சட்டசபைத் தேர்தலுக்கு முன்பாகவே முதல்வர் ஜெயலலிதா சிறைக்குச் செல்லும் வாய்ப்புகள் உள்ளன. அதை இல்லை என்று மறுத்து விட முடியாது என்று மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

தற்போது சொத்துக் குவிப்பு வழக்கில் முதல்வர் ஜெயலலிதாவை விடுதலை செய்ததை எதிர்த்து தொடரப்பட்டுள்ள வழக்கில் உச்சநீதி மன்றம் விரைவில் தினசரி விசாரணையைத் தொடங்கவுள்ளது. இந்த வழக்கில் ஜெயலலிதாவுக்கு பாதகமான நிலையே காணப்படுகிறது.

ஜெயலலிதா மீண்டும் சிறைக்குச் செல்லக் கூடிய வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. சட்டசபைத் தேர்தலுக்கு முன்பாகவே அவர் சிறைக்குச் செல்லக் கூடிய வாய்ப்புகள் உள்ளன. அதை நடக்காது என்று மறுக்க முடியாது. இப்படி பாதகமாக நிலைமை உள்ள போதிலும் தலைக்கு மேல் கத்தி தொங்கும் நிலையிலும் கூட இனிமேல் ஊழலில் ஈடுபடக் கூடாது என்று இவர்கள் நினைக்கிறார்களா என்றால் இல்லை. அந்த எண்ணமே அவர்களிடம் இல்லை. ஆனால் எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் ஊழலற்ற கூட்டணியை மக்கள் நலக் கூட்டணி அமைக்கும், ஊழலற்ற ஆட்சியையும் அமைக்கும்.

தமிழகத்தில் ஊழலே இல்லாத பொது அரசு அமைய வேண்டும் என்பதே மக்களின் ஒரே குறிக்கோள். அதில் நாங்களும் உறுதியாக இருககிறோம். தமிழக வாக்காளர்களில் 65 சதவீதம் பேர் எந்தக் கட்சியையும் சாராதவர்கள். அவர்களின்வாக்குகள்எங்களுக்குக் கிடைக்கும் என மேலும் தெரிவித்தார். (இ-7)

## யாழ்.வலய அதிபர்களுக்கு கூட்டம்

யாழ்.வலய அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் 5ஆம் திகதி காலை 9 மணிக்கு வலய கேட்போர் கூடத்தில் நடைபெறும் என யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா அறிவித்துள்ளார். (இ)

## மரண வீட்டினுள் நுழைந்தது வான்; இருவர் மரணம்

மொரட்டுவை - கெரலவெல்ல பகுதியில்மரண வீட்டிற்குள் நுழைந்த வாகனத்தினால் ஏற்பட்ட விபத்தில் இருவர் உயிரிழக்க நேரிட்டுள்ளது.

கெரலவெல்ல வீதியின் மஞ்சள் கோட்டினைக் கடக்க முற்பட்ட ஒருவர் வாகனம் மோதியதில் கடந்த டிசம்பர் மாதம் 31ஆம்திகதி அதிகாலை உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் வீதியருகிலுள்ள அவரது வீட்டில் நல்லடக்கத்துக்காக வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வீதியால் பயணித்த வேறுஒரு வான்நேற்று அதிகாலை மரண வீட்டிற்குள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து நுழைந்தமையால் அங்கிருந்த இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில்மேலும்மூவர காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

விபத்திற்குள்ளான வான் வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.(செ-12)

## இ.போ.ச.பேருந்துமீது மீண்டும் கல்வீசி தாக்குதல்

(கரணவாய்)

பருத்தித்துறை சாலைக்குச் சொந்தமான இ.போ.ச. பேருந்து மீது மீண்டும் கல் வீசி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சாலை முகாமையாளர் எஸ்.கந்தசுவாமி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் வவுனியாவில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்து கொண்டிருந்த பேருந்து மீதே நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் வடமராட்சி முள்ளிப் பகுதியில் வைத்து கல்வீச்சு தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (இ-7-60)

## பட்டம் விடுவோரால் மக்களுக்குச் சிரமம்

வடமராட்சிப் பகுதியில் தற்பொழுது சிறுவர்கள், இளைஞர்கள், வயது வந்தவர்கள் என அனைவரும் பட்டம் ஏற்றுவதனால் பொது மக்கள் பெரிதும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.


வயல் வரம்பில் பட்டம் ஏற்றுவதாலும் வயல்களுக்குள் இறங்கி ஓடுவதாலும் பயிர்கள் நாசமாகின்றன. பட்டம் ஏற்றும் நூல்கள் மின் இணைப்புக் கம்பிகளில் சிக்குவதால் மின் துண்டிக்கப் படுகிறது.

இதனால் சில சில கிராமங்களில் மின்னிணைப்பு அடிக்கடி துண்டிக்கப்படுவதாகவும் தொலைபேசி, தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி போன்ற மின் இணைப்புக்கள் பழுதடைந்துள்ளன எனவும் கூறப்படுகிறது.

கரணவாய் நாவலர் மடம்,கரவெட்டி போன்ற கிராமங்களில் இவ்வாறான சம்பவம் ஏற்பட்டுள்ளது.

பட்டம் விடுவோர் வயல் வெளி, மின்னிணைப்பு உள்ள இடங்களில் பட்டம் ஏற்றுவதை கட்டுப்பாட்டில் கொண்டு வருமாறு பொதுமக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ)

# பேஸ்பால் போட்டியில் மேற்கிந்திய வீரர்



மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியிலிருந்து விலகிய கீரன் பாவெல் பேஸ்பால் போட்டியில் பங் கேற்கவுள்ளார்.


மேற்கிந்திய தீவுகள் அணி ஏற்கனவே பல்வேறு தோல்வி களை சந்தித்து வருகிறது, இந் நிலையில் கிரிக்கெட் வாரியத்துடன் ஏற்பட்ட தகராறு காரணமாக கிரிக் கெட்டை விட்டு விலகிய கீரன் பாவெல் பேஸ்பால் போட்டியில் பங்கேற்கவுள்ளார்.

தொடக்க வீரரான இவர் இது வரையில் 21 டெஸ்ட், 28 ஒருநாள் மற்றும் ஒரு இருபது -20 போட்டியல் பங்கேற்றுள்ளார்.

விரைவில் அணித்தலைவ ராகலாம் என நம்பப்பட்ட நிலையில், இவரது விலகல் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே டுவைன் பிராவோ, பொலார்டு மற்றும் கிறிஸ் கெய்ல் போன்றவர்களும் கிரிக்கெட் வாரி யத்துடன் அதிருப்தியில் உள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

# ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளிலும் சிறப்பாக விளையாட முடியும்: புஜாரா



இந்திய டெஸ்ட் அணியின் முன்னணி துடுப்பாட்டக்காரர்களில் ஒருவர் புஜாரா. அவர் கடந்த 2010ஆம் ஆண்டு டெஸ்ட் அணியில் அறிமுகமானார். அவுஸ்திரேலியா விற்கு எதிரான முதல் போட்டியில் 72 ஓட்டங்கள் எடுத்தாலும் அதன் பின் சரியாக விளையாடாததால் அணியில் சேர்க்கப்படவில்லை.

அதன்பின் 2012 ஆம் ஆண்டு நியூசிலாந்து அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து டெஸ்ட் தொடரில் விளையாடியது. அப் போது டிராவிட் டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றதால் புஜாரா விற்கு மீண்டும் அணியில் இடம் கிடைத்தது.

இந்த வாய்ப்பை சிறப்பாக பயன் படுத்திய புஜாரா, ஓட்டங்கள் குவித்து அசத்தினார். ஐதராபாத்தில் நடைபெற்ற முதல் போட்டியில் 159 ஓட்டங்கள் குவித்தார். அதன்பின் இங்கிலாந்து அணி இந்தியா வந்தது. அப்போது 206 (அவுட் இல்லை), 135 ஓட்டங்கள் குவித்தார். அத னைத்தொடர்ந்து அவுஸ்திரேலியா இந்தியா வந்தது. அப்போது 204 ஓட்டங்கள் அடித்தார்.

அதன்பின் மேற்கிந்தியத் தீவுக் கெதிராக இரண்டு சதம் அடித்தார்.

இதனால் அடுத்த டிராவிட் என்ற அளவிற்கு பெயர் பெற்றார். அதன் பின் இந்தியா வெளிநாட்டு மண் ணில் சுற்றுப்பயணம் செய்தது. அப்போது புஜாராவின் ஆட்டம் மங்கியது. இதனால் அணியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதனால் தனது ஆட்டத்தை மேம்படுத்த இங்கிலாந்து சென்று கிளப் அணியில் விளையாடினார். அதன்பின் இந்திய அணியில் மீண்டும் இடம் பிடிக்க காத்திரு ந்தார். இலங்கையில் நடைபெற்ற டெஸ்டில் களம் இறங்கினார். அப்போது சதம் அடித்து இந்தியா வின் வெற்றிக்கு முக்கிய பங்கா ற்றினார்.

சமீபத்தில் தென்னாபிரிக்கா விற்கு எதிரான தொடரிலும் சிறப் பாக விளையாடினார். இதனால் அவருக்கு டெஸ்ட் போட்டியில் நிரந்தர இடம் கிடைக்கும் என்று கூறலாம். ஆனால், ஐந்து ஒருநாள் போட்டிகளில் விளையாடி 51 ஓட்ட ங்கள் மட்டுமே எடுத்தார். இதனால் புஜாரா டெஸ்ட் வீரர் என முத்திரை குத்தப்பட்டார்.

இந்த கருத்தை மாற்றி அனை த்து வகை கிரிக்கெட்டிலும் தன் னால் சிறப்பாக விளையாட முடியும் என்ற நம்பிக்கையுடன் உள் ளார்.

இந்நிலையில், இன்று இந்தியா வில் நடக்கும் உள்ளூர் இருபது-20 லீக் தொடரான சையத் முஸ் தாக் அலி டிராபி தொடங்குகிறது. இதற்காக புஜாரா தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளார். அத்துடன் இந்த தொடர் ஒருநாள் மற்றும் இருபது-20 தொடருக்கு திரும்ப முக்கிய காரணமாக இருக்கும் என்று நம்பு கிறார்.

இதுகுறித்து புஜாரா கூறுகை யில்,

"நான் டெஸ்ட் போட்டியில் மட்டும்தான் சிறப்பாக விளையாடு வேன் என்ற கருத்து இருந்து வருவ தாக நான் நம்புகிறேன். ஆனால், டெஸ்ட் போட்டிகளில் கூட என்னு டைய ஸ்ட்ரைக் ரேட் மிகவும் மோச மாக இருந்தது கிடையாது. டெஸ்ட் போட்டியை போல் ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளிலும் சிறப் பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும் என்பதில் மிகுந்த நம்பக் கையுடன் இருக்கிறேன்" என்றார. (க)

## வலைப்பந்து போட்டிக்கு விண்ணப்பிக்குக

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தினால் 2015 ஆம் ஆண் டிற்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி 2016 ஜனவரி மாத நடுப் பகுதியில் நடத்தப்படவிருக்கின்றது. இச் சுற்றுப்போட்டியில் பங்குபெற விரும்பும் கழகங்கள் தங்கள் பதிவு களை ஜனவரி மாதம் 10ஆம் திகதி க்கு முன்னர் யாழ்.மாவட்ட வலைப் பந்தாட்டச் சங்கத்தின்தலைவி திரு மதி ஏ.எப்.ஜே.றூபசிங்கத்திடம் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இச் சுற்றுப்போட்டியில் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணி கள் வடமாகாண ரீதியில் நடத்தப்பட விருக்கும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (க)



தேசிய கராத்தே போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள் அண்மையில் மகாதேவா இல்ல நிர்வாகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர். வெற்றி பெற்ற வீரர்களுடன் பிரமுகர்கள், கராத்தே பயிற்சி ஆசிரியர் ஆகியோரைப் படத்தில் காணலாம்.


# குசல், ரங்கன ஹேரத்துடன் ஆட்ட நிர்ணய முகவர்களை கைது செய்யவும் -தயாசிறி உத்தரவு

தடை செய்யப்பட்ட ஊக்க மரு ந்து உட்கொண்ட குற்றச்சாட்டின் பேரில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் குசல் ஜனித் பெரேரா மற்றும் முன் னணி சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் ஆகியோரை ஆட்ட நிர்ண யத்தில் ஈடுபடுத்த முயன்றவர் களை கைது செய்து சதித்திட்ட பின்னணி குறித்து வெளிப்படுத் துமாறு நிதிக்குற்றப்புலனாய்வு பிரிவுக்கு முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. விளையாட்டுத்துறை அமை ச்சர் தயாசிறி ஜயசேகரவினால் இந்த முறைப்பாடு பதிவு செய்யப் பட்டுள்ளது.

நடந்து முடிந்த மேற்கிந்திய தீவுகள் அணியுடனான கிரிக்கெட் தொடரின் போது குறித்த வீரர்கள் இருவரையும் ஆட்ட நிர்ணயத்துக் குட்படுத்த முகவர் ஒருவர் முயற்சித் ததாகவும் அவர் இலங்கை கிரிக் கெட்டுடன் நெருங்கிய தொடர்பை பேணுவதாகவும் அவர்கள் தொடர் பில் உடன் விசாரணை ஆரம்பிக் குமாறும் அமைச்சரின் முறைப் பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் மேற்கிந்திய தீவுகள் தொடரின் போது ஆட்ட நிர்ணய முகவர்கள் தம்மை அனு கியமை தொடர்பில் குறித்த இரு வீரர்களும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் கவனத்திற்கு கொண்டு வந்ததன் அடிப்படையில் விசாரணை நடத்துமாறு கோரப்பட் டுள்ளது.

அமைச்சரின் முறைப்பாடு தொட ர்பில் நிதிக்குற்றப் புலனாய்வு பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ரவி வைத்தி யலங்காரவின் கீழ் ஆராயப்பட்டு வருகின்றது. (க)



## 617 ஏக்கர்...

முல்லைத்தீவு வட்டுவாகல், முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் கடற்படையினர் நிலைகொண்டுள்ள 617 ஏக்கர் காணியினை கடற்படைக்கு வழங்குவது தொடர்பிலான கூட்டமொன்று முல்லைத்தீவு கரைதுறைபற்று பிரதேச செயலகத்தில் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி வசந்த பெரேரா தலைமையில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். எனினும் காணி உரிமையாளர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இக் கூட்டத்தில் கலந்துகொண்ட காணியுரிமையாளர்கள் மூன்று தலைமுறையாக மேற்படி காணியில் வாழ்ந்து வருகின்றோம். 617 ஏக்கரில் 150 ஏக்கர் வயல் நிலமும் 276 ஏக்கர் அரச காணியும் காணப்படுகின்றது. எங்களுடைய காணிகளை கடற்படையினரின் முகாம் அமைப்பதற்கு விட்டுக்கொடுக்க முடியாதென தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில கலந்துகொள்வதற்காக வருகை தந்திருந்த வன்னிநாடாளுமன்ற உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின்இணைத தலைவருமானசிசிவமோகன்,வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோருடன் ஊடகவியலாளரகளுக்கும் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டது.

வடமாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன் காணி உரிமையாளர் என்ற வகையில் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

அவர் 30 ஆண்டுகளாக போரினால் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ள முல்லைத்தீவின் வட்டுவாகல் முள்ளிவாய்க்கால் கிழக்கு மக்களின் காணிகளை நல்லாட்சிக் காலத்தில் சுவீகரிக்க முயல்வது ஜனநாயக விரோத போக்கெனவும் காணிக்கான ஆவணங்கள்போரினால்பலரிடம்இல்லையெனவும் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர், காணி சுவீகரிப்பதென்பது இறுதி முடிவல்ல. காணிக்குரிய ஆவணங்கள் உள்ளவர்கள் பத்து நாட்களுக்குள் கரைதுறை பற்று பிரதேச செயலரிடம் பதிவுகளை மேற்கொள்ள முடியும். ஆவணங்களை இழந்தவர்கள் ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் காணிக்குரிய ஆவணங்களை பிரதேச செயலரிடம் ஒப்படையுங்கள்.

பெப்ரவரி முதல் வாரத்தில் நாம் முல்லைத்தீவுக்கு வருகைதந்து முடிவுகள் எடுப்போம் எனவும் தெரிவித்தார். இக்கூட்டத்தில், வட்டுவாகல் முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியின் காணி உரிமையாளர்களும் கடற்படை அதிகாரிகளும் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன், கரைதுறை பற்று பிரதேச செயலர் எஸ்.திரேஸ் குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர். (செ-281)


## பாகிஸ்தான்...

யலான பேச்சுக்கள், ஜனாதிபதி செயலகத்தில் வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்தப் பேச்சுக்களின் போது, இரு நாடுகளுக்கும் இடையில் சுமார் 10 புரிந்துணர்வு உடன்பாடுகளும் கையெழுத்திடப்படவுள்ளன.

நவாஸ் ஷெரீப் தனது பயணத்தின் இறுதி நாளான வரும் புதன் கிழமை கண்டிக்குச் சென்று தலதா மாளிகை மற்றும் பள்ளிவாசலில் வழிபாடுகளை மேற்கொள்ளவுள்ளார். (எ-12)

## உ/த பரீட்சை...




உள்ள பரீடசைப் பெறுபேறுகள் அனைததையும் நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பதோடு தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அனைத்தையும் அவர்களின் முகவரிக்கு தபால்மூலம் அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம்.என்.ஜே.புஷ்பகுமார மேற்கண்ட தகவலை தெரிவித்துள்ளார். (செ-12)

# மரக்கறி விலைகள் சந்தையில் அதிகரிப்பு



சந்தையில் மரக்கறி வகைகளின் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்துக் காணப்படுவதாக ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆய்வு மற்றும் பயிற்சி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் நிலவிய மழையுடனான வானிலை காரணமாக பெரும்பாலான விவசாய நிலங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்ததாக அந்த நிறுவனத்தின் சந்தைப்படுத்தல், உணவுக் கொள்கை மற்றும் கமநல விற்பனைப் பிரிவுத் தலைவர் துமிந்த பிரியதர்ஷன கூறினார்.

இதனால் மரக்கறி வகைகளின் விநியோகம் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

டிசம்பர் மாதத்தில் நிலவிய கடும் மழையுடனான வானிலை காரணமாக மரக்கறி செய்கைகள் அதிகளவில் பாதிக்கப்பட்டிருந்ததாக குறிப்பிட்ட அவர்,

மேலும் இரண்டு வாரங்களுக்கு மரக்கறி வகைகளின் விலைகள் அதிகரித்துக் காணப்படும் என எதிர்ப்பார்ப்பதாகவும் கூறினார்.

எவ்வாறாயினும், ஜனவரி மூன்றாம் வாரத்திலிருந்து மரக்கறிகளின் விலைகள் வீழ்ச்சியடையும் என எதிர்ப்பார்ப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, உருளைக் கிழங்கு, பருப்பு, பயறு மற்றும் பெரிய வெங்காயம் போன்ற அத்தியாவசிய உணவு வகைகளின் விலைகளும் சந்தையில் அதிகரித்தே காணப்படுவதாக சந்தைப் படுத்தல், உணவுக் கொள்கை மற்றும் கமநல விற்பனைப் பிரிவுத் தலைவர் தெரிவித்தார். (செ-12)

## தோட்டக் கிணற்...

தனது வீட்டிலிருந்து நேற்றுக் காலை 11.30 மணியளவில் கோயிலுக்குச் செல்வதாக கூறிபுறப்பட்ட வயோதிபர் பல மணிநேரமாகியும் மாலைவரை வீடு திரும்பவில்லை.

இதனால் பதற்றமடைந்த உறவினர்களும்அயலவர்களும்அவரை பல இடங்களில் தேடியபோதும் தகவல் கிடைக்காத நிலையில் தொடர்ந்து தேடி அலைந்துள்ளனர்.

அவ்வேளை நந்தாவில் பகுதியில் உள்ள தோட்டக்காரர் ஒருவர் தனது தோட்டத்துக்கு நீர் பாய்ச்சுவதற்காக சென்றபோது கிணற்றினுள் சடலம் ஒன்று மிதப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்ததுடன் அயலவர்களுக்கும் தகவல் தெரிவித்துள்ளார்.

சம்பவத்தை அறிந்த பிரஸ்தாப வயோதிபரின் உறவினர்கள் கிணற்றுக்கு அருகே சென்று பார்வையிட்டபோது காணாமல்போன வயோதிபரே சடலமாக காணப்பட்டமை உறுதி செய்யப்பட்டது.

இதுதொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் சிலமணி நேரங்கழித்தே பொலிஸார் சடலத்தை மீட்க பிரசன்னமாகியிருந்தனர்.

மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

## புலனாய்வு பிரிவு ஜனாதிபதிக்கு...

விட்டதாகவும் குறிப்பிட்டு குற்றப் புலனாய்வுப் பிரிவு கடந்த வாரம் ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பித்திருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், கடந்த புதன் கிழமை அவசர கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி முக்கிய உறுப்பினர்களையும், பாதுகாப்பு உயர் அதிகாரிகளையும் இதற்கு அழைப்பு விடுத்திருந்தார்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் விவசாய அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அரச தொழில முயற்சிகள் மற்றும் அபிவிருத்தி அமைச்சருமான கபீர் ஹாஸீம், அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், தலதா அத்துகோரல உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர் என்று ஜனாதிபதி செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பின் பின்னரே கடந்த புதன்கிழமை இரு பிரதான கட்சி பொதுச் செயலாளர்களும், அமைச்சர் ரவூப் ஹக்கீம், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான ஜயம்பதி விக்ரமரத்ன உள்ளிட்டவர்கள் அரச தகவல் திணைக்களத்தில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினர் எனத் தெரிய வந்துள்ளது.

இந்த ஊடகச் சந்திப்பின்போது ஹக்கீம், துமிந்த, கபீர் மூவரும் அரசை யாராலும் கவிழ்க்க முடியாது என்றும் அதற்கான முயற்சிகள் தோற்கடிக்கப்படும் என்றும் சூளுரைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# அரசியல் தீர்வை வரையும்...

ருந்தனர்.

இந்நிலையில் குறித்த குழு நேற்றைய தினம் யாழ்.மாவட்டத்திலிருந்து தமது உத்தியோகபூர்வ பணிகளை தொடங்கியிருககின்றது.

இந்நிலையில் நேற்றைய தினம் மாலை 3.30 மணிக்கு நல்லூர் ஆலயத்தில் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் யாழ்ப்பாணம் பேராலயத்திலும் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

இதனைத் தொடர்ந்து தமது பணிகளை உப குழு உத்தியோக பூர்வமாக நேற்றைய தினம் தொடங்கியிருக்கின்றது. உத்தியோகபூர்வமாக பணிகள் தொடங்கும் நிகழ்வில் ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த் தேசிய மக்கள் முனனணி தலைவர், புளொட் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் தமிழ் மக்கள் பேரவை பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த உப குழுவின் பணிகள் யாழ்.மாவட்டத்திலிருந்து தொடங்கி வடக்கு, கிழக்கு மாகாணங்கள் முழுவதுமாக மக்கள் மட்டத்திலிருந்து கருத்தறிந்து தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத். திட்டத்தை தயாரிக்கவுள்ளமை சிறப்பம்சமாகும்.

இது தொடர்பில் தமிழ்மக்கள் பேரவையினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கை வருமாறு,

**ஊடக அறிக்கை**

அரசியல் என்ற எல்லைகளைக் கடந்து தமிழ் மக்களின் நலன்கள், உரிமைகளை வலியுறுத்துவதையும் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை தனது பணியை மிகவும் அடக்கமாகவும் உறுதியாகவும் முன்னெடுத்துச் செல்கின்றது.

தமிழ் மக்கள் பேரவைக்கு எதிராக சில ஊடகங்கள் வேண்டுமென்றே எதிர்ப்பிரசாரம் செய்கின்ற போதிலும் தமிழ் மக்கள் பேரவையானது தனது கொள்கையில் தளராத துணிவோடு பயணிக்கத் தொடங்கியுள்ளது.

தமிழ்த் தரப்புக்கள் அனைத்தும் ஓரணியில் ஒன்று திரண்டு தமிழ் மக்களின் உரிமையை வலியுறுத்துகின்ற தேவை தற்போது ஏற்பட்டுள்ளது என்பதை நாம் உணர்ந்துள்ளோம்.

மிகப்பெரும் தியாகங்கள் நடந்தேறிய எங்கள் இனத்துக்கான தீர்வென்பது தனி மனிதர்களால் முடிவு செய்யப்படக்கூடியதன்று.

எனவேதான் தமிழ் அரசியல் தரப்புகளும் பொது அமைப்புகளும் மதத் தலைமைகளும் தமிழ்ப் புத்திஜீவிகளும் ஒன்றிணைந்து எமக்கான தீர்வுத்திட்டத்தை தயாரிப்பதுடன் அனைத்துத் தமிழ் மக்களிடமும் அதனை எடுத்துச் சென்று அதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வது மிகவும் அவசியமானது என்று உணரப்பட்டது.

இந்தச் செயற்பாட்டுக்கு அனைதத்துத் தரப்புக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதுடன் குறிப்பாக எமது புலம்பெயர் உறவுகள் ஒன்றுசேர்ந்து தமது பேராதரவை தரவேண்டும் என்பதும் எம் தாழ்மையான வேண்டுகோள்.

முன்பு ஒருபோதும் சாத்தியப்படாமல்போன ஒரு முக்கியமான விடயம் இப்போது சாத்தியப்பட்டுள்ளது. அதுவே எங்கள் தாயகத்தைச் சேர்ந்த துறைசார் நிபுணர்கள் ஒன்றுசேர்ந்து எமக்கான அரசியல் தீர்வுத் திட்ட வரைபைத் தயாரிக்கும் பணியாகும்.

காலம் உணர்ந்த இப்பணியானது 02.01.2016 இன்று (நேற்று) சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படுகிறது. அரசியல் தீர்வுத் திட்டத்தை தயாரிக்கும் துறைசார் நிபுணர்கள் அடங்கிய உபகுழுவானது தொடர்ந்து தனது பணியை விரைவாக முன்னெடுத்துச் செல்வதுடன் தனது செயற்பாட்டு அறிக்கையை வாரந்தோறும் தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைமையின் கவனத்திற்குக் கொண்டுவரும்.

குறைந்தது 15 துறைசார் நிபுணர்கள் அடங்கிய உப குழுவானது உள்நாட்டு வெளிநாட்டு சட்ட நிபுணர்கள் அடங்கிய ஆலோசனைக் குழுவையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

இவ் உப குழுவானது தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை, அபிலாசைகள் என்பவற்றை நிரந்தரமாகப் பெற்றுக்கொள்வதும் நடைமுறைக்குச் சாத்தியமானதும் சர்வதேசத்தின் ஆதரவைப் பெறக்கூடியதுமான தீர்வுத் திட்டத்தை தயாரிப்பதுடன் அது தொடர்பில் தமிழ்மக்களின் கருத்துக்களையும் கண்டறியும்.

இரண்டு தொடக்கம் மூன்று மாதங்களுக்குள் தயாரிக்கப்படும் தீர்வுத் திட்ட வரைபு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் அரசியல் கட்சிகளிடம் கையளிக்கப்படுவதுடன் இத்தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழ் மக்கள் பேரவை கடுமையாகப் பாடுபடும் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதேவேளை தீர்வுத் திட்ட வரைபு தொடர்பில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள தமிழ் உறவுகள் தமது கருத்துக்களை நிபுணர் குழுவுடன் பகிர்ந்து கொள்ள முடியும். இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் politicalsub@tamil peoples council.org என்ற மின்னஞ்சல் மூலமாகவும் தகவல் களைப் பரிமாறிக் கொள்ளலாம்.

இன்றைய தினம் (நேற்று) தனது பணியை ஆரம்பித்துள்ள உப குழுவில் இடம்பெற்றுள்ள நிபுணரகளின் பெயர் விபரங்களும் ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றுள்ளவர்களின் விபரங்களும் மிக விரைவில் வெளியிடப்படும்.

நன்றி

ஏற்பாட்டுக்குழு

தமிழ்மக்கள் பேரவை. (செ-12)

## 12 இலக்கக்களைக்...

நபரின் பிறந்த ஆண்டை குறிக்கும்.

இரண்டாம் பாகத்தில் உள்ள 3 இலக்கங்கள் குறிதத நபர் பிறந்த ஆண்டின் ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல், அவரது பிறந்த தினம் வரையில் உள்ள நாட்களின் எண்ணிக்கையை குறிக்கும்.

அத்துடன் மூன்றாம்பாகத்தில்உள்ள 3 இலக்கங்கள் குறித்த நபரின் பால்நிலை குறித்த தகவலை கொண்டிருக்கும்.

எனினும்நேற்று முன்தினம் 12 இலக்கங்களை கொண்ட புதிய அடையாள அட்டை அறி முகப் படுத்தப் பட்டுள்ளதுடன், இதற்கு ஆங்கில இலக்கம் சேர்க்கப்பட மாட்டாது.

பழைய 9 எண்களைக் கொண்ட நடைமுறை பின்பற்றப்படும் போது, 1916ஆம் ஆண்டு பிறந்த ஒருவருக்கும், 2016ஆம் ஆண்டு பிறந்த ஒருவருக்கும் ஒரே அடையாள அட்டை வழங்கப்படும்நிலை காணப்படுகிறது.

இதனை தவிர்ப்பதற்காகவே இந்த 12 இலக்கங்களை கொண்ட அடையாள அட்டைகள்அறிமுகப் படுத்தப்படுகின்றன.

எவ்வாறாயினும், புதிய எண்தொடர் கொண்ட அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளும வரையில், தற்போதுள்ள அடையாள அட்டை செல்லுபடியாகும் என்றும் ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது. (செ-12)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## உடுவிலில்...

பேர்டெங்கு நோய்தாககத்திற்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுள்ளாரகள்.

குறிப்பாக சுன்னாகம் நகரப் பகுதி, ஏழாலை உடுவில் இணுவில் பகுதிகளில இத்தகைய டெங்கு நோயின் தாக்கத்துக்கு உள்ளாகியவர்கள் அதிக எண்ணிக்கையில் காணப்பட்டுள்ளதாகவும் பிரதேச சுகாதார வைத்தியதிகாரியினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பொது சுகாதார பரிசோதகர்கள்மருத்துவ மாதுகள் சுகாதாரத் தொண்டர்கள் வீடு வீடாக சென்று மேற்கொண்ட டெங்கு ஒழிப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளின் மூலம் பெருக விடாது கட்டுப்படுத்தக் கூடியதாக இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## மரண அறிவித்தல்



### திருமதி பாலாம்பிகை செல்வநாயகம்

யாழ்.வேலணை மேற்கு, சிற்பனையைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடா, Toronto வை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி பாலாம்பிகை செல்வநாயகம் அவர்கள் 01.01.2016 வெள்ளிக்கிழமையன்று கனடாவில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வாதவூர் அன்னம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்வநாயகம்(வறக்காப்பொல - பிரபல வர்த்தகர்) அவர்களின் அன்பு மனைவியும் செல்வரதி, செல்வன் (ராஜன்) - கனடா, செல்வராணி(UK), சரவணபவன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாலச்சந்திரன் (தியாகராஜா ஸ்ரோர்ஸ் - காலி), நந்தினி(கனடா), மனோகரலிங்கம்(UK), ரமணி(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற தங்கசாமிப்பிள்ளையின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, அருணகிரி, மகாலட்சுமி, திருச்செல்வம், தவச்செல்வம் மற்றும் வரதலெட்சுமி(கனடா), அருட்செல்வம்(N.S.P.S - கொழும்பு), காலஞ்சென்ற லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பாமதி, பாமினி, பிரசாந்த், பகீரதன், ராஜிகா, ஆரபி, அபிலாஷ், அபிலன், அக்ஷயா, அஷான் ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.01.2016 நாளை திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : பாலச்சந்திரன்(மருமகன்) - 0777 512739, 0112 364197
ராஜன் செல்வநாயகம்(மகன்) கனடா - 416 759 4624, 416 312 7613
சரவணபவன் செல்வநாயகம்(மகன்) கனடா - 416 451 6669
(C-3293)


**BEACON** யாழ் நகர்
A/L 2016 DAY CLASS
ஆரம்பம் 06/01/2016 8am
கலை
பொருளியல்: K.பிரதீபன்
அளவையியல்: SS.மனோகரன்
தமிழ்: ஜீவானந்தன்
இந்துநாகரிகம்: S.சுரேஸ்
புவியியல்: S.P.கரன்
வரலாறு: நாகேந்திரன்
அரசியல்: P.S.அசோக்
ICT: D.ஷெல்ரன்
நா.அரங்கியலும்: அயூரன்
வர்த்தகம்
பொருளியல்: K.பிரதீபன்
கணக்கீடு: R.சுகிர்தன்
வணிகக்கல்வி: S.முகுந்தன் (கொழும்பு பிரபல்ய ஆசிரியர்
A/L 2018
ஆரம்பம் 10/01/2016 8am
A/L 2016,2017 வகுப்புக்கள் நடைபெறுகின்றன (C-3286)

**வேலையாட்கள் தேவை**
யாழ்ப்பாணத்திலுள்ள அசைவ உணவகம் ஒன்றுக்கு றொட்டி - கொத்து றொட்டி தயாரிக்கத் தெரிந்த ஒருவரும் அனைத்து வேலையும் செய்யத் தெரிந்த உதவியாளர் ஒருவரும் தேவை.
தொடர்பு : 0771258072 (2737)

**தீராத பல்வலி தீர அற்புத ஆயுள்வேதம் வைத்தியம்**
தொ.இல 0776664674
(தொடர்பு செய்து விட்டு வரவும்)
தொடர்புகளுக்கு:
திவ்விய ஆயுள்வேத வைத்திய நிலையம்
இல. 73, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (3054)

**வணிகக்கல்வி BUSINESS STUDIES A/L**
DAY CLASSES ஆசிரியர் திரு. S. முகுந்தன் (கொழும்பின் பிரபல ஆசிரியர்)
குறிப்பு- சிங்கள மொழி மூலம் வெளிவந்த முக்கிய பாடக்குறிப்புகள், எதிர்பார்க்கை வினாக்கள், கொழும்பின் முன்னணி பாடசாலைகளின் பரீட்சை வினாத்தாள்களுடன் A/L 2016 இற்கான பரீட்சை நோக்கிய தொரு சிறப்புப்பயணம்
ஆரம்பம் : 06.01.2016
நேரம் காலை 8.00 மணி
(வகுப்புக்கள் பிரதி திங்கள் முதல் வெள்ளி வரை)
BEACON மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம் (C-3286)

**விற்பனைக்கு**
HERO HONDA (B2 XTEME)
Model Year: 2012
150 CC, KM 33250, No: XN
தொடர்பு:
64, Nedungulam Road, Ariyalai, Jaffna.
T.P:0772912551 (3057)

**FLC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH**
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1025 மாணவர்கள் French கற்றுள்ளனர்...
உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள : 0779 789 456 / 021 221 7781
No. 40, பலாலி வீதி. ஆரிய குளத்துக்கு அண்மையில் ஆரம்பம் : 09.01.16 சனி 2 மணி
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 11.01 @ 4pm
கண்டி வீதி, சாவகச்சேரி. ஆரம்பம்: 13.01 @ 4pm
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre (C-3226)

**SPOKEN English** With Grammar
முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மாணித்தியாலங்களாக 3 மாதங்களுக்கு நடைபெறுவதுடன் பகுதிநேர வகுப்புக்கள் சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாட்களில் இரவு (6-8pm) நேரங்களிலும் நடைபெறும்.
Duration : 3 Months Fee : 13250/=
BRITISH COLLEGE of Education
Hot line 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
39, Convent Rd, Mannar. Tel : 023-4924124
136, A9 Rd, Paranthan, Kilinochchi. Tel : 021-4927497 (10/01/16) (C-3290)

**Vacancies**
முன்னனி ஆங்கில பாடசாலையான BIS இன் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி மற்றும் மன்னார் கிளைகளுக்கு விண்ணப்பங்களை வரவேற்கின்றோம்
1. English Teachers
2. Montessori Teachers
3. Music / Dance Teachers
4. Primary Teachers
5. PT Teachers
6. Course Coordinator
ஒரு வாரத்தினுள் email மூலம் விண்ணப்பிக்கவும்
BIS email : bis.learning@gmail.com
11/1, Battiya Mw. Dehiwala.
Tel : 077-3830671 (C-3290)

**ஆண்டின் தொடக்கத்தில் அதிரடி தள்ளுபடி** Nation popular travels & tours
5000/-
128,பிறவுண்வீதி யாழ்ப்பாணம் 0214920920, 0214920505
ஐரோப்பிய நாடுகளுக்கு விசேட சலுகை #179 புகையிரதநிலைய, வீதி வவுனியா
0715 365 365
0244930830,0244930831 (C-3287)

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு**
◆ மத்தியகிழக்குநாடுகளில் வீட்டுப்பணிப்பெண்களுக்கான
உடனடி வேலைவாய்ப்பு
◆ ஆண்களுக்கான வாய்ப்புக்களை எமது இணையத் தளத்தில் பார்வையிடலாம்.
◆ அரச அங்கீகாரம் பெற்று யாழ்.நகரில் இயங்கும் ஒரே வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்.
தொடர்புகளுக்கு
IKEA TRAVELS & TOURS (PVT) LTD
62/34, Stanley Road (Old Post Office Rd) Jaffna.
T.P : 021 222 4220, 077 818 1892
www.ikeatourslk.com (C-3284)

**யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகிறது**
ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (PVT) LTD
P.ஜெய்சங்கர்
கொழும்பில் கடந்த 25 வருடங்களாக, கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில் வாய்ப்புகள், வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ்பெற்ற சோதிடர்களால், தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ்க்கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகிறது.
தொடர்புகளுக்கு:-384, A, நாவலர் வீதி, (கைலாச பிள்ளையார் கோயில் அருகில் நல்லூர்)
தொலைபேசி:-021 221 7944
கொழும்பு முகவரி:
19, 1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி,
தொலைபேசி:-011 258 6180/ 011 258 6208 (3049)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி

# சங்குநாதம்

Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 03.01.2016 தொலைபேசி : 021 222 3378

நாதம் 47




# தமிழ் மக்கள் பேரவை தந்த பயத்தின் உச்சக் கட்டம்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

2016ஆம் ஆண்டின் பிறப்பையொட்டி ஆலடிப்பிள்ளையார் கோயிலில் விசேட வழிபாடு நடைபெற்றது.

புதிய ஆண்டின் மாலைப் பொழுதில் ஆலடி மாநாடும் பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் கூடியது.

**பண்டிதர்:** அனைவருக்கும் ஆலடி மாநாட்டின் சார்பில் வணக்கத்தையும் புதுவருட வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிறந்துள்ள 2016ஆம் ஆண்டில் அனைவரும் எல்லா நலன்களையும் பெற்று மகிழ்வோடு வாழ இறைவனைப் பிரார்த்திப்போம்.

(பண்டிதர் இவ்வாறு அறிவித்ததும் வாத்தியார் வைத்திலிங்கம் திருமுறை ஓதினார். மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்... என்ற தேவாரத் திருமுறையைப் பாடி முடிக்க மூப்பரால் கிறிஸ்தவ கீதம் இசைக்கப்பட்டது.

எல்லாம் வல்ல பரமபிதாவே உமது அளவற்ற கருணை எங்களுக்குக் கிடைப்பதாக, மலர்ந்திருக்கும் 2016 ஆம் ஆண்டில் உமது அருளாட்சியில் நாம் அனைவரும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு உதவும்... இப்படி மூப்பரின் செபம் நிறைவுற்றதும் ஆலடி மாநாட்டில் அனைவரும் அமர்ந்திருந்தனர்)

**பண்டிதர்:** 2016 ஆம் ஆண்டிலாவது தமிழினத்திற்கு நல்லதொரு தீர்வு கிடைக்கவேணும்.

**விதானையார்:** உண்மைதான் பண்டிதர் எங்கட மக்கள் எவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். இந்தக் கஷ்டங்களுக் கெல்லாம் ஒரு முடிவு கிடைக்க வேணும். அதற்காக நாம் அனைவரும் கடவுளையும் பிரார்த்திக்க வேணும்.

**கங்காணி:** கடவுளைப் பிரார்த்திப்பதற்கு முன்னதாக எங்களிட்ட நேர்மையான எண்ணமும் தூய்மையான பணிவும் அவசியம். எங்கட இனத்தை விற்றுப் பிழைச்ச சிலர் இப்ப தங்களை தூய்மையானவர்களாகக் காட்டுகினம்.

**மூப்பர்:** அதெண்டால் உண்மைதான் கங்காணியார். மகிந்த ராஜபக்ஷ விட்ட மாதம் 20 இலட்சம் ரூபா வாங்கி டாம்... டாம்... காட்சி போடுறவியள் தமிழ் இனத்திற்காக பாடுபடுகினமாம்.

**பண்டிதர்:** அதுமட்டுமே கடந்த ஜனாதிபதித் தேர்தலில வாக்களிப்பு நேரம் மாலை 4 ம்ணிக்கு முடிவுறுவதாக இருந்த போதிலும் மாலை 6 மணி மட்டும் வாக்களிக்க முடியும் எண்டு டாம் டாம் போட்டவியள் இப்ப தமிழினத்தின்ர பற்றாளர்களாம் எப்படி இருக்குது நிலைமை.

**வாத்தியார்:** ஏன் பண்டிதர் பிரபாகரன் சாகிறதுக்கு காரணமாக இருந்த ஒரு பிரகிருதி இப்ப வீடியோவைத் தூக்கிக் கொண்டு திரியுது. இவையளுக்கு விளக்கமும் இல்லை, விசாரணையும் இல்லை. வலு சுதந்திரமாகத் திரியினம். விடுதலைப் புலிகள் பற்றிய தகவலை மகிந்தவுக்குக் கொடுத்து புலிகளை அடியோட அழிச்சவியள் இப்ப தமிழ்ப் பற்றாளர்களாக நடிக்கினம்.

புலி அமைப்பில குரல் கொடுப்பவராக இருந்தவர் என்னெண்டு தப்பினவர்.

**மூப்பர்:** வாத்தியார் வலம்புரி தொடர்பில டாம் டாம்மில ஒரு செய்தி சொன்னவியள் அல்லோ. வலம்புரி நிர்வாகம் அந்தச் செய்தி தொடர்பில, பிரபாகரனைக் காட்டிக் கொடுத்த அந்தப் பிரகிருதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யத் தயாராகிறது எண்டு அறியிறம்.

அதேநேரம், அந்த நேரத்தில நடந்த ஒரு முக்கிய சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட இவரை விசாரிக்காதது ஏன் எண்டும் அரசாங்கத்திட்ட கேட்க இருக்கிறதாகக் கேள்வி.

நடக்கட்டும், நடக்கட்டும். தமிழினத்திற்குத் துரோகம் இழைத்தவியள் தங்களை தமிழினப் பற்றாளர்களாகக் காட்டிக் கொள்ள ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது என்று இந்த ஆலடி மாநாட்டில தீர்மானம் எடுப்பம்.

(மூப்பர் இவ்வாறு ஆவேசமாகக் கூறியதும் ஆலடி மாநாட்டில் சில நிமிடம் மெளனம். மெளனத்தைக் கலைப்பதற்காக பண்டிதர் குரல் கொடுத்தார்)

**பண்டிதர்:** புலிகளைக் காட்டிக்கொடுத்த அந்தப் பிரகிருதி தொடர்பில இருக்கக்கூடிய வேறு பல குற்றச்சாட்டுக்களையும் திரட்ட வேணும்.

ஒரு பத்திரிகையின்ர பிரதம ஆசிரியரின் பெயரைச் சொல்லி செய்தி சொன்னதால அது குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யமுடியும். அந்தச் செய்தியை சொன்னவரையும் எதிரியாக பதிவு செய்ய வேணும் எண்டு பிரபல சட்டத்தரணி கூறியுள்ளதாகவும் கேள்வி.

ஆயத்தங்கள் நடந்து கொண்டிருப்பதால அந்த பிரகிருதியில இருக்கிற வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில பொது சனத்திட்டயும் தகவல் எடுக்கிறது நல்லது.

**கங்காணி:** பண்டிதர் ஐயா எல்லா நடவடிக்கையும் நடந்து கொண்டிருக்கிறது. சட்டத்தின் படி செயற்படுறது தான் புத்திசாலித் தனம்.



**வாத்தியார்:** கங்காணி நாங்கள் ரென்சன் அடையக் கூடாது. எல்லாவற்றையும் செயலில காட்ட வேணும் எண்டு, நினைக்கிறவன் நான். எல்லாவற்றுக்கும் இறைவன் உதவி செய்வான். ஒண்டும் யோசியாதீங்க.

**விதானையார்:** அது சரி வாத்தியார் தமிழ்மக்கள் பேரவையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு எதிரானது எண்டு வடக்கு மாகாண சபையின்ர முக்கிய புள்ளி ஒருவர் கூறியிருக்கிறாரே அது என்ன மாதிரி.

**வாத்தியார்:** தான் முதலமைச்சராக வரவேணும் எண்டு அவருக்கும் ஆசை வந்திட்டுது போல.

என்ன செய்யிறது அந்த ஆசை நிறைவேற வேணும் எண்டால் தமிழ்மக்கள் பேரவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரானது எண்டு சொல்லுறது தானே ஒரே வழி.

தமிழ்மக்கள் பேரவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான அமைப்பல்ல என்ற உண்மை அந்த முக்கிய புள்ளிக்கு நன்கு தெரியும். எனினும் இப்படி ஒரு கதை.

எங்கட மூத்த அரசியல் தலைவர் சம்பந்தர் தமிழ் மக்கள் பேரவையின்ர செயற்பாட்டைப் பொறுத்திருந்து பார்ப்பம் எண்டு சொல்லுறார். அது ஒரு அரசியல் தலைவனுக்கு அழகு. இதென்னடா எண்டால் எழுந்தமானமாகக் கதைக்கிறது.

**விதானையார்:** அது சரி ஜீ.ஏ.சந்திரசிறி ஆளுநராக இருக்கும் வரைக்கும் தேசியத் தலைவர் பிரபாகரன் எண்டு சொல்லாதவியள் இப்ப பார்த்தியளோ எல்லாம் நடிப்பும் தந்திரமும் எண்டால் எங்கட தமிழ்ச் சனம் என்னெண்டு உய்யிறது.

தென்மராட்சி பிரதேச செயலகம் அண்மையில ஒரு கலாசார நிகழ்வை நடத்தியதல்லோ. அதில ஒரு கவியரங்கம். அந்தக் கவியரங்கத்தில நீதிமன்றத்தில வேலை செய்யிற ஒருத்தர் ஜனாதிபதி மைத்திரியையும் வடக்கின் முதல்வரையும் கடுமையாகத் தாக்கி கவிதை பாடினவராம்.

**மூப்பர்:** ஏன் அவர் மகிந்தவின்ர ஆளோ.

**கங்காணி:** ஜனாதிபதி மைத்திரியைத் தாக்கிக் கவிதை பாடுகிற அளவில அவருக்குச் சுதந்திரமும் உரிமையும் கிடைத்து விட்டது.


**வாத்தியார்:** இப்படியானவர்களால கலாசார விழாவை முன்னெடுக்கிறவர்களும் வில்லங்கத்திற்குள்ள மாட்டுப்படுகிறதுதானே!


**பண்டிதர்:** அட கவிதை பாடினவன் தன்னை ஒரு ரஜனி எண்டு நினைச்சிட்டார் போல. நீதிமன்றத்தில வேலை செய்யிறவர் முதலில சட்டத்தைப் புரிந்து சொள்ள வேணும். கண்டபாட்டில கவிதை பாடினால் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டிவரும் என்பதை அந்தத் தம்பிக்கு எடுத்துக்கூறி, அறிவுரை சொல்லிக் கொடுப்பது நல்லது. எங்கட பிள்ளையள நாங்கள் தானே வழிப்படுத்த வேணும்.

இப்படி பண்டிதர் கூற அதனை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# தமிழ் மக்கள் பேரவை தந்த பயத்தின் உச்சக் கட்டம்


குருஷேத்திரம்



தமிழ்மக்கள் பேரவை என்பதே இப்போது எங்கும் பேச்சாகியுள்ளது. தமிழ்மக்கள் பேரவை தமது எதிர்கால அரசியலுக்கு ஆபத்தாகி விடுமோ என்று பயம் கொண்டவர்கள் தமிழ்மக்கள் பேரவை ஓர் அரசியல் கட்சி என்றும் மாற்றுத் தலைமை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரானதென்றும் கடும் பிரசாரம் செய்து வருகின்றனர்.

உண்மையில் தமிழ் மக்கள் பேரவை என்பது ஒரு மக்கள் இயக்கம் என்பது தெளிவாகிறது. எனினும் மக்கள் இயக்கமொன்றின் உருவாக்கம் தமது சுயநல அரசியலுக்கு ஆபத்தானதென்று பயம் கொள்வோர், மக்கள் இயக்கத்தை எப்படியாவது தோற்கடிக்க வேண்டும் என்று நினைக்கின்றனர்.



தமிழ்மக்கள் பேரவையை சுயநல அரசியல்வாதிகள் எதிர்ப்பதன் பின்னணி என்ன? என்பது பற்றி தமிழ்மக்கள் நன்கு ஆராயவேண்டும். இனியும் பேரவைக்கு எதிராக ஊடகங்களில் வருவது உண்மை என்று நம்புகின்ற துரதிர்ஷ்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து மெய்ப்பொருள் காண்பது அறிவு என்ற அடிப்படையில் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் செயற்படவேண்டியது கட்டாயமானதாகும். இல்லையேல் சுயநல அரசியல்வாதிகள் தங்களின் பதவி, பட்டம், வருமானம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவரேயன்றி தமிழ்மக்களுக்காக ஒருபோதும் செயற்படமாட்டார்கள் என்பது உண்மை.

தமிழ்மக்கள் பேரவை ஒரு அரசியல் கட்சி; இந்த நேரத்தில் இந்தக் கட்சி தேவைதானா? என்றெல்லாம் கேள்வியெழுப்புவர்கள் தமிழ்மக்கள் பேரவை

## முதல்வர் விக்கிக்கு எதிரானவர்களை தமிழ் மக்கள் மன்னிக்கமாட்டார்கள்

அரசியல் கட்சி என்றால், தேர்தலில் போட்டியிட வேண்டும், தேர்தலில் போட்டியிடுவதாக இருந்தால் மக்களைத் தேடி வரவேண்டும், அப்போது நீங்கள் அரசியல் கட்சி இல்லை என்று சொன்னீர்களே என்றெல்லாம் மக்கள் கேள்வி கேட்பார்கள் என்று நினைக்காதது ஏன்? அரசியல் கட்சி என்றால் எடுத்தபாட்டில் பாராளுமன்றம் போய்விட முடியுமா என்ன? கடந்த பொதுத் தேர்தலின்போது ஒரு எம்.பி. பதவியைப் பெற்றுக் கொள்வதற்காக எத்தனை ஆயிரம் சாராயப் போத்தல்கள் உடைக்கப்பட்டன. எத்தனை மடிக் கணனிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

கொத்து ரொட்டி, பியர் போத்தல், நாட்கூலி என்றெல்லாம் எத்தனை கோடிகள் கொட்டப்பட்டன என்பது வெற்றியை வலிந்து தமதாக்கிய வர்களுக்கு தெரியாதா என்ன?

இத்தனை உண்மைகள் தெரிந்திருந்தும் நேற்று உதயமாகிய தமிழ் மக்கள் பேரவையை அரசியல் கட்சி என்றும் மாற்றுத் தலைமை என்றும் கூப்பாடு போடுவது உங்கள் அரசியல்களம் உங்களுக்கு ஆரோக்கியமானதாக இல்லை என்பதாலா அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சரிந்தால் அவரின் இடத்தைப் பறிப்பதற்கு தமிழ் மக்கள் பேரவை பெரும் இடைஞ்சலாக இருக்கும் என்ற பயத்தாலா உங்களின் பிரசாரம் உச்சமடைகிறது.

தமிழ்மக்கள் பேரவையைத் தோற்றுவித்தவர்கள் தெட்டத் தெளிவாக கூறுகிறார்கள் தமிழ்மக்கள் பேரவை அரசியல் கட்சியோ மாற்றுத் தலைமையோ அல்ல என்று.

எனினும் சில அரசியல்வாதிகள் அதை மறுத்து அது அரசியல் கட்சிதான் என்கிறார்கள் என்றால் இவர்களின் அறிவு எந்த வகையில் தமிழ்மக்களுக்கு உதவும் என்பதை தமிழ்மக்கள்தான் சிந்திக்க வேண்டும்.

### பயத்தின் உச்சம்

இந்தியத் தொலைக் காட்சி ஒன்று ஒவ்வொரு ஞாயிறுதோறும் பயத்தின் உச்சக்கட்டம் என்றொரு நிகழ்ச்சியை ஒளிபரப்பும். அந்த நிகழ்ச்சியில் வரக்கூடிய பயத்தின் உச்சம் போல தமிழ் மக்கள் பேரவையால் அரசியல்வாதிகள் சிலருக்கு ஏற்பட்டுள்ளது.

இதற்கெல்லாம் அடிப்படை வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ்மக்கள் பேரவையில் இணைத் தலைவராக இருப்பதுதான் காரணம்.

தமிழ்மக்கள் மத்தியில் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு மிக உன்னதமான வரவேற்பும் ஆதரவும் பெருகி வருகிறது.

ஒரு நேர்மையான, அப்பழுக்கற்ற தலைவர் தமக்குக் கிடைத்துள்ளார் என்ற மனநிறைவு தமிழ் மக்களிடம் உள்ளது.

இந்நிலையில் வடக்கு முதல்வர் விக்னேஸ்வரனுக்கு நாளுக்குநாள் அதிகரித்துவரும் மக்கள் ஆதரவு தமக்கும் தமது விலை போன அரசியலுக்கும் ஆபத்தாகி விடுமோ என்ற ஏக்கத்தின்- பயத்தின் உச்சமே தமிழ்மக்கள் பேரவையின் உதயத்தால் எழுந்த ஆவேசமாகும்.

எது எவ்வாறாயினும் தமிழ்மக்களின் நலன்கள், உரிமைகள் தொடர்பில் தமிழ்மக்கள் பேரவை ஆற்றும் பணி உண்மையை தெளிவுபடுத்தும் என்பது திண்ணம்.

அதேநேரம் வடக்கு மாகாண சபையில் உள்ள சில உறுப்பினர்கள் சபையின் செயற்பாடுகளின் போது நையாண்டித்தனமாகச் செயற்படுவதை தமிழ் மக்கள் மிக உன்னிப்பாக கவனித்து வருகின்றனர்.

முதலமைச்சர் விக்னேஸ்வரனின் செயற்பாட்டிற்கு ஊறுவிளைவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இவர்கள் தொடர்பில் தமிழ் மக்கள் கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் இது தொடர்பில் அதீத கவனம் செலுத்துவதும் கட்டாயமானதாகும்.

இவை தொடர்பில் கூட்டமைப்பின் தலைமை மௌனம் சாதிக்குமாயின் வடக்கு மாகாண சபையில் முதலமைச்சரை அச்சுறுத்தும் வகையில் செயற்படும் ஒரு சில மாகாண சபை உறுப்பினர்களுக்கு எதிராக தமிழ் இளைஞர்கள் நடவடிக்கை எடுப்பதை எவரும் தடுக்க முடியாது.

விதுரன்




# "மூளை இல்லாத கழுதை"

**அது** ஒரு அடர்ந்த காடு.அந்தக் காட்டில் வயதான சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. வயதாகிவிட்ட காரணத்தால் அந்தச் சிங்கத்தால் வேகமாக ஓடவும், வேட்டையாடவும் முடியவில்லை. அதனால், சாப்பிட எதுவும் கிடைக்காமல் அந்தச் சிங்கம் ரொம்பவே கஷ்டப் பட்டது.

சிங்கமும் எத்தனை நாட்களுக்கு இப்படியே இருப்பது? சாப்பிடுவதற்கு ஏதாவது செய்தாகணுமே என்று யோசித்தது.

யோசித்துக்கொண்டு இருக்கும் பொழுது அந்த பாதையின் வழியே குள்ளநரி ஒன்று வந்துகொண்டிருந்தது. உடனடியாக சிங்கமும், இந்த நரியைத் தவிர, வேறு யாரும் இந்த மாதிரி வேலைக்குச் சரிப்பட்டு வரமாட்டார்கள் என்று நினைத்தது. தனக்கு உணவைச் சேகரிச்சிட்டு வருவதற்கு இந்த குள்ள நரியை உதவியாளனாக நியமிக்க முடிவு செய்தது. உடனே சிங்கமும் நரியை வர வழைத்தது.

இனிமேல்,"நீதான் என் மந்திரி. உன்னைக் கேட்டுத்தான் எதையும் செய்வேன்" என்று சிங்கம் அந்தக் குள்ள நரியிடம் கூறியது.

நரியால் சிங்கத்தின் பேச்சை நம்ப முடியவில்லை."ராஜா! உங்களுக்கு மந்திரியாக இருக்கிறது என் அதிர்ஷ்டம்" என்று நரி சிங்கத்திடம் கூறியது. "உனக்கே தெரியும், இந்தக் காட்டுக்கே நான்தான் ராஜா. ஒரு ராஜா உணவுக்காக மற்ற விலங்குகளின் பின்னாடி ஓடினால், அது பார்க்கிறதுக்கு நல்லாயிருக்குமா? அதனால, எனக்குத் தேவையான உணவை நீ எப்படியாவது ஏற்பாடு செய்யணும். அதுதான் உன் முதல் வேலை" என்றது சிங்கம்.

நரியும் பயந்துபோய் நின்றது. சிங்கத்துக்கு எப்படி நம்மால் சாப்பாடுபோட முடியம் என்று யோசித்தது.

சிங்கமும் அந்த நரியை விடவில்லை. "நீ ஒரு நாளைக்கு, ஒன்றாக, தினமும் ஒரு விலங்கை எனக்காக அழைத்துவர வேண்டும். நீதான், கெட்டிக்காரனாச்சே. ரொம்ப சுலபமாக செய்திடுவாயென்று எனக்குத் தெரியும்" என்று சிங்கம் நரியைப் புகழ்ந்துபேசியது. சிங்கத்தின் புகழ்ச்சிப் பேச்சில் மயங்கிய நரியும் ஒப்புக்கொண்டது.

சிங்கத்துக்காக உணவு தேடும் வேலையில் இறங்கியது நரி. அப்போது ஒரு கழுதை எதிரில் வந்தது. கழுதையிடம் போய், "நண்பா, எங்கே ரொம்ப நாளா ஆளையே காணோம்? எங்க போயிட்டே?" என்றது.

"இங்கேயேதான் நான் சுத்திக்கொண்டே இருக்கிறேன். என்ன விஷயம்?" என்று கேட்டது.

"நீரொம்ப அதிர்ஷ்டக்காரன். நம்ம காட்டின் சிங்கராஜா உன்னை முதல் மந்திரியா தேர்ந்தெடுத்திருக்கிறாரு" என்றது.

"ஐயோ! எனக்கு சிங்கத்தைப் பாத்தாலே பயம்பா. அவர் ஒரே அடியில் என்னைக் கொன்று சாப்பிட்டிடுவாரு. அவர், எதுக்காக என்னை முதல் மந்திரியா தேர்வு செய்ய வேண்டும்? ஆளைவிடு" என்றது கழுதை.

"பயப்படாதே. நீ மட்டும் முதன் மந்திரியாக இருந்தால், உன் நிலைமை எங்கேயோ போயிடும். ராஜாவுக்கு அடுத்தபடியாக நீதான். எல்லா விலங்குகளும் உனக்கு மரியாதை தரும். ஏதாவது காரியம் ஆகவேணுமென்றாலும் உன் பின்னாடிதான் வருவாங்க" என்றது நரி.

அப்பாவியான கழுதையும் நரியின் பேச்சை உண்மை என நம்பியது. சிங்கத்தைப் பார்க்க நரியோடு சென்றது.

நரியும் கழுதையும் சிங்கத்தின் இருப்பிடத்தை அடைந்தன. சிங்கம் கழுதையைப் பார்த்துச் சிரிச்சுக்கொண்டே . "வா, நண்பா! இன்று முதல் நீதான் என்னோட முதல்மந்திரி" என்று கூறியது.

கழுதையும் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தது. வெட்கத்துடன் தலை குனிந்தபடி சிங்கத்துக்கு அருகில் வந்து நின்றது. சிங்கம், அதன் தலையில் ஓங்கி ஒரு அடி அடிச்சது. கழுதை அந்த நிமிடமே உயிரை விட்டது.

சிங்கம் கழுதையைச் சாப்பிட ஆரம்பித்தது. "மகாராஜா, கொஞ்சம் பொறுங்க. என்னதான் பசியாக இருந்தாலும், ஒரு ராஜா குளிக்காமல் சாப்பிடக்கூடாது இல்லையா?" என்று சிங்கத்திடம் நரி கூறியது.

சிங்கமும் அதனை ஒப்புக்கொண்டு குளிப்பதற்காகப் போய்விட்டது.

நரி கழுதையின் உடலைப் பார்த்தது. அதற்கும் ஒரே பசி. கழுதையின் தலையைக் கிழிச்சு, மூளையை எடுத்துச் சாப்பிட்டு விட்டது.

குளித்துவிட்டு வந்த சிங்கம், கழுதையின் உடல் முன்புபோல இல்லை என்று கண்டுபிடித்தது.

"கழுதையின் தலை, ஏன் கிழிந்துள்ளது? உள்ளே ஒன்றுமே இல்லையே?" என்று சிங்கம் கேட்டது.

"என்ன மகாராஜா! உங்களுக்குத் தெரியாதா? கழுதைகளுக்கு எல்லாம் மூளையே கிடையாது" என்று நரி சிங்கத்திடம் கூறியது.


சிங்கம் நரியை நம்பவில்லை. "அது எப்படி மூளை இல்லாமல் இருக்கும்? பொய்சொல்லாதே" என்று சிங்கம் கேட்டது.

"கழுதைக்கு மூளை இருந்திருந்தால் என்னோடு வந்திருக்குமா?" என்று நரி சிங்கத்திடம் கேட்டது.

நரி சொல்வது சரிதான் என்று சிங்கமும் அமைதியாகிவிட்டது.



# வரலாற்றில் முதன்முறையாக பூமிக்கு மீண்டுள்ள றொக்கெட்



முதன்முதலில் பூமிக்கு மீண்டுள்ள- விண்வெளிப் பயணத்தை மேற்கொண்ட றொக்கெட்(பால்கன்-9)

றொக்கெட் இறங்குவதற்காக சமுத்திரத்தில் அமைக்கப்பட்ட பிரத்தியேகமான தெப்பம்

**விண்**வெளியில் செலுத்தப்பட்ட அமெரிக்காவின் ஃபால்கன-9 ராக்கெட், பத்திரமாக மீண்டும் பூமிக்கு திரும்பியது. விஞ்ஞான தொழில் நுட்பத்தில் இது மகத்தான சாதனையாக கருதப்படுகிறது.

செயற்கைக்கோள்களை சுமந்து செல்கிற வாகனங்களாகத்தான் ராக்கெட்டுகள் பயன் படுகின்றன. அந்த வகையில் செயற்கைக் கோள்களை ராக்கெட்டுகள் சுமந்து சென்று, விண்வெளியில் புவி வட்டப்பாதையில் நிலை நிறுத்தி விடுவதுடன் அவற்றின் பணி முடிந்து விடும். அந்த ராக்கெட்டுகள் பூமிக்கு திரும்புவதில்லை. அவை சாம்பலாகிவிடும். இதுதான் இயல்பு. இதுவரை நடந்துவந்ததும் இதுதான்.

இந்த நிலையில், அமெரிக்காவை சேர்ந்த பெரும் கோடீசுவரர் எலன் முஸ்க்கிற்கு சொந்தமான 'ஸ்பேஸ்எக்ஸ்' நிறுவனம், செயற்கைக் கோள்களை விண்வெளிக்கு சுமந்து சென்று, புவியின் சுற்றுவட்டப்பாதையில் நிலை நிறுத்தி விட்டு, ராக்கெட்டை மீண்டும் பூமிக்கு திரும்ப வைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுவந்தது. அந்த முயற்சிக்கு இப்போது வெற்றி கிடைத்துள்ளது.

இந்த நிறுவனத்தின் ஃபால்கன-9 ராக்கெட், 11 சிறிய செயற்கைக்கோள்களுடன் அண்மையில் இரவு 8.33 மணிக்கு அமெரிக்காவில் கேப் கேனவரல் ராக்கெட் ஏவுதளத்தில் இருந்து விண்வெளியில் செலுத்தப்பட்டது. 9 நிமிடங்களில் அந்த ராக்கெட், சுமந்து சென்ற 11 சிறிய செயற்கைக்கோள்களையும் புவிவட்டப் பாதையில் வெற்றிகரமாக நிலை நிறுத்தியது. அதைத் தொடர்ந்து செங்குத்தான நிலையில் சமுத்திரத்தில் அமைக்கப்பட்ட பிரத்தியேகமான தெப்பத்தில் பத்திரமாக பூமியில் இறங்கியது. இது விஞ்ஞான தொழில்நுட்பத்தில், மகத்தான சாதனையாக கருதப்படுகிறது.

இது குறித்து எலொன் முஸ்க்கூறும்போது,

இது எலொன் முஸ்க்குழுவினருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது, (இந்த சாதனை குறித்து முஸ்க், 'டுவிட்டர்' வலைத்தளத்தில்,) "திரும்ப வந்துள்ள குழந்தையை வரவேற்கிறோம்" என குறிப்பிட்டுள்ளார். மேலும்அவர், "இது ஒரு புரட்சிகரமான தருணம். இதுவரை யாரும் பூஸ்டரை திரும்ப கொண்டு வந்தது இல்லை. இது மிகவும் பயன்தரக்கூடிய ஒரு திட்டம் ஆகும். 11 செயற்கைக்கோள்களை நிலை நிறுத்தி விட்டு ராக்கெட் திரும்ப வந்துள்ளது" என குறிப்பிட்டார்.

ஃபால்கன்-9 ராக்கெட் பூமிக்கு திரும்பி இருப்பது, 'ஸ்பேஸ்எக்ஸ்' நிறுவனத்தாரை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியது. அவர்கள் ஆடிப்பாடி, கொண்டாடினர்.கடந்த ஜூன் மாதம் 28-ந் தேதி இதே நிறுவனம், ஃபால்கன-9 ராக்கெட்டை சரக்குகளுடன் கூடிய விண் கலத்துடன் சர்வதேச விண்வெளி மையத்துக்கு ஏவியது. ஆனால்,அந்த பயணம் வெற்றி அடையவில்லை. அந்த ராக்கெட் வெடித்து சிதறியது.


இப்போது ஃபால்கன்-9 ராக்கெட் பூமிக்கு திரும்பியுள்ள நிலையில், அதை சீர்செய்து மீண்டும் பயன்படுத்த முடியும். இதனால்





தெப்பம்

விண்வெளிக்கு செயற்கைக்கோள்களை அனுப்புவதற்கான செலவு அரைவாசிக்கு மேல் குறையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

விண்வெளிக்குச் சென்ற றொக்கெட் தனது பயணத்தை முடித்தபின்பு,வானில் வெத்துச் சிதறுகிறது எனில், விண்வெளி வீரர்கள் எப்படி பூமியை அடைகிறார்கள் என்பதை அறிய, கீழ்வரும் படங்களை எண் வரிசை ஒழுங்கில் நன்கு அவதானியுங்கள்.







# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள், -
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532




## தமிழ் மக்கள் பேரவை பற்றி?

**காவியா — சுழிபுரம்**

**பெற்றோர்களைப் பற்றி?**

குழந்தைகளை எப்படி வளர்ப்பது என்பதை குழந்தைகளிடமிருந்தே கற்றுக்கொள்ளுங்கள். அவர்கள் ஒருபோதும் பொம்மைகளுக்கு அடிப்பதும் இல்லை. அவற்றை அழ வைப்பதும் இல்லை.

**கஜன் — யாழ்ப்பாணம்**

**ஐயா தமிழருக்கு தமிழ்நாடு கிடைக்குமா?**

இத்தால் சகலருக்கும் அறியத்தருவது யாதெனில் 2016-ல் எதிர்க்கட்சித் தலைமையில் இருக்கும் தமிழ் தேசியமக்கள் கூட்டமைப்பு தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கிடைக்கும் என அறியத் தந்ததை மீண்டும் சகலருக்கும் 2016 இல் அறியத் தருகின்றோம்.

**அஜந்தா — கிளிநொச்சி**

**காதலில் சிறந்தது எது?**

கள்ளக் காதலர்கள் கூட சந்தித்துக் கொள்ளும் போது உன்னில் நான் உயிரையே வச்சிருக்கிறேன் என்றுதான் கூறுவார்கள்.

**துசி — சிவநகர்**

**பச்சோந்தி போல பழகுபவர்களைப் பற்றி?**

பச்சோந்திகள் இடத்திற்கு ஏற்றாற்போல் தன் நிறத்தை மாற்றிக் கொள்கின்றன. அது தன்னை, தன் இனத்தைப் பாதுகாக்க. எங்கள் மண்ணில் பல பச்சோந்திகள் எம் மண்ணையும் மக்களையும் விற்றுப் பிழைக்கிறார்களே. அவர்களைப் பச்சோந்தி என்று சொல்வது எந்தவகையில் நியாயமாகும்.

**சிந்து — சுன்னாகம்**

**பெண்கள் இல்லாத உலகம் எப்படி இருக்கும்?**

பெண்கள் இல்லை என்றால் இந்த உலகமே இருக்காதே.

**பி.மதீசன் — நல்லூர்**

**சுன்னாகம் நீரைக் குடிக்க முடியுமா? முடியாதா?**

நல்ல தலையங்கம். மக்களுக்கு தேவையான விடயம். வரும் தைப்பொங்கலுக்கு பட்டி மண்டபம் நடத்துவோமா? இதை விட வேறு எதையும் எம்மால் செய்து விட முடியாது.

**சஞ்சயன் — யாழ்ப்பாணம்**

**திறமையை வளர்த்துக் கொள்வது எப்படி?**

முயற்சி - பயிற்சி இரண்டும் பலமாகத் தேவை.

## சுன்னாகம் நீரைக் குடிக்க முடியுமா? முடியாதா?

**செ.முரளி — நெடுங்கேணி**

**கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்பது?**

பிள்ளை இல்லாவீட்டில் கிழவன் துள்ளி விளையாடினாராம் என்று ஒரு பழமொழி இருக்கிறது. தான் மட்டும் தான் இருக்கிறேன் என நினைத்த காலத்தில் ஒருவன் பொய்களையெல்லாம் மெய்யாக்கி வீராப்புப் பேசி வந்தார். அவரை எதிர்த்து அறத்தை நிலை நாட்ட ஒருவன் எழுந்தான். அப்போது தான் பொய்யுரைத்த முகம் கிழிக்கப்பட்டது. தர்மம் ஓங்கியது. கீரைக்கும் எதிர்க்கடை இருந்ததால் தானே தரம்புரியும்.

**அகிலன் — கனராயன்குளம்**

**மனைவி ஒரு மாணிக்கம் என்றால் கணவன்?**

மண்ணாங்கட்டி. அந்த மண்ணாங்கட்டிக்குள் தானே மாணிக்கம் விளைகிறது.



'எதிரியின் வான்வழி தாக்குதலால் பதுங்கு குழியில் இருந்த மன்னருக்கு எப்படி காயம் ஏற்பட்டது?'

"ஹெலிகொப்டர் சத்தம் கேட்டதும் வேடிக்கை பார்க்க மேலே வந்திருக்கிறார்!"

### அன்பு வாசகர்களே!

நீங்களும் வியாசர் பகுதிக்கு உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அரசியல், ஆன்மீகம், சமூகம், பொழுதுபோக்கு சார் கேள்விகளை மிக சுருக்கமாக உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பி வையுங்கள்.

**குறுந்தகவல் (SMS) 021 567 1532**

## ஐயா தமிழருக்கு தமிழ் நாடு கிடைக்குமா?

**பிறின்சன் — வயாவிளான்**

**கடவுள் இருப்பது உண்மையா?**

நாம் நல்லவர், உண்மை பேசுபவர், எமக்காக பாடுபடுபவர் என யாரை நினைக்கிறோமோ அவரின் உண்மை முகத்தை அவரின் செயற்பாட்டின் மூலமே காட்டித்தந்தால் கடவுள் இருக்கிறான் என்பதை நம்பித்தானே ஆகவேண்டும்.

**ராஜேந்திரகுமார் — வயாவிளான்**

**தமிழ் மக்கள் பேரவை பற்றி?**

எம் இனத்தின் விடிவுக்காக அரசியல் என்ற எல்லை கடந்து ஒரு இயக்கமாக தமிழர்களின் உயிரில் கலந்திருக்கின்ற நீதியரசர் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் இணைத் தலைமையில் உதயமாகியுள்ளது. இந்த அரசியல் நோக்கற்ற அமைப்பை எவர் எதிர்க்கிறாரோ அவர்களுக்கு தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டத்தை வழங்குவதில் கொஞ்சமும் பற்றில்லை என்பதே பொருளாகும்.

**சோமி — அல்வாய்**

**கடவுளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

வருடப் பிறப்பன்று கோவிலுக்குச் சென்றேன். நான் யாரை மிகக் கெட்டவன் என நினைத்தேனோ அவன் கும்பிட்டுக் கொண்டு நின்றான். விலகிச் சென்றேன். என்னைக் கெட்டவன் எனச் சொன்னவன் எதிரில் வந்தான். அவனையும் விலகிச் சென்றேன். மீற்றர் வட்டிக்கு பணம் கொடுக்கும் இவன் உருப்படுவானா? இன்னொருவரைக்காட்டி ஒருவர் வசைபாடினார். அதையும் தாண்டி நடந்தேன் இறைவன் வீற்றிருந்தான்.

**வே.அகிலேஸ்வரன் — மருதங்கேணி**


**காமரசம், அன்புரசம் எது இன்றைய காதலுக்குரியது?**


முன்னது முன்னதாய் உதித்தால் பின்னது பிசக்கும். பின்னது முன்னதாய் உதித்தால் முன்னது சிறக்கும்.

**குருபரந்தாமன் — அல்வாய்**

**தெரிந்தவர்களை ஏமாற்றுவதும் தெரியாதவர்களிடம் ஏமாறுவதும் பெண்களின் இயல்பா?**

அப்படியென்றால் தெரியாதவர்களை - தெரிந்தவர்களாக்கி பின்பு அவர்களையே தெரியாது எனச் சொல்வது ஆண்களின் இயல்பா.





## ஈடு செய்கின்றேன்

பல நினைவுகளை ஒன்றிணைத்த
நிலவு தேவதையே
இது வரைக்கும் உன் அழகிற்கு- என்னால்
ஒன்றையும் ஈடு கொடுக்க முடியவில்லை
இதனால் உன்னை காண வெட்கப்பட்டு
உன் நினைவுகளுடனே
கல்லறையை நோக்கிச் செல்கின்றேன்
உன்னுடைய அழகிற்கு
என் உயிரை ஈடு செய்வதற்கு

**முல்லை அன்ரன்**

## கந்தா! கதிர்வேலா!

சந்தியில் நின்ற சுப்பனும்
சைக்கிளில் வந்த கந்தனும்-தமக்குள்
கதைத்துக் கொண்டனர்
இத்தனைநாளும்- எமக்கு
டிமிக்கி கொடுத்தவர்கள்
கழுத்தை கெட்டியாய்ப் பிடிக்க
வந்ததல்லோ
தமிழ் மக்கள் பேரவை
இல்லையதில் அரசியலென
அவர்கள் சொல்லச் சொல்ல
இல்லை இது அரசியலே என்று
சில மாரித் தவளைகள் கத்துது
விடியும் அப்போது
அவர்கள் கதை முடியும்

மாவை. நா.கஜேந்திரன்

## மலர்வைத் தந்திடு என்று...

மழை மேகம் கறுத்து
மாமழை பொழிகின்றது
மின்னல்கள் மின்னி
மனமார வாழ்த்துகின்றது
மாதர் சங்கமும்
மங்கைக் கூட்டமும்
மனதளவில் போற்றுகிறது
மடிவைத்த குழந்தையும்
மடி தேடும் இளந்தையும்
மறுபிறப்பாய் உனை நினைக்கிறது
மழலை மொழிகளும்
மஞ்சள் பூக்களும் வாழ்த்துகிறது
மதி கொஞ்சும் நிலவும்
மானமுள்ள பெண்ணும் போற்றுகிறது
மலர்ந்திட்ட புத்தாண்டே நீ
மலர்வைத் தந்திடு என்று...

**விசுவமடு அபிக்குட்டி**
**கிளி/ முருகானந்தா கல்லூரி**

## முகவரி அறியாமல்

உன் முகவரி தெரியவில்லை பெண்ணே
என் முகவரி உன் முகவரி ஆனது கண்ணே
உன் புன்னகையால் புதைந்தது உள்ளம்
உனைத் தேடிப் புழுதிக்காற்றாய் அலைகிறது
காதலென்னும் இன்ப வெள்ளம்
கொள்ளை அழகுடன் கொஸ்பிரலில் கண்டேன்
உன் இதழலால் என் இதயத்தை
ஸ்பரிஷசம் செய்தாய்
கண்ணால் பல கதைகள் சொன்னாய்
கடைசியில் கண்ணிமைப்பதற்குள்
காணாமலே சென்று விட்டாய்
போனது நீ அல்ல என் இதயமும்கூடவே
நீ சேர்ந்தது உன் வீடல்ல
என் இதயம் எனும் வீட்டினிலே காதலியாய்
மறுபடியும் உன்னைச் சந்திப்பேன்
என் மனக்கதவுகளின் இரகசியங்களை
மடல்களாக உனக்குத் தருவேன் -நீ
மனைவியாகும் வரையில்

**ஆதியூர் றஜி**
**கொக்குளாய்**

## கூடா நட்பு

ஆராய்ந் தொழுகா
அறிவிலார் நட்பால்
பேரான வாழ்வு பாழாகும்
கூரான
மதிகொண் டிணையா
மதியற்றான் நட்பால்
விதிமாறும் வீணாகும் வாழ்வு
நல்லோர்கள் கூடலது
நல்லதோர் கூடமாம்
வல்லோராய் வாழ்ந்திட
நல் வரமாகும்
பொல்லாத
துட்டன் துரோகியாகத்
தூய்மையிலான் சகவாசம்
விட்டிடல் விவேகமது அறி

**கலாபூஷணம்**
**ந.இராமநாதன்**

# மௌனத்தின் தேடல்- 281



## வாருங்கள் உறவுகளே

காப்பாற்றத் துடிக்கின்றீர்
கரை சேரத் தவிக்கின்றீர்
தோளில் சுமை சுமந்து
சோகம் தனை மறைத்து
தாகத்தை அணைக்கும்
தண்ணீருக்குள் நடைபிணமாய் நீர்
கனவுகள் பல சுமந்து
கற்பனையில் சிறகடித்து
நடைபயில இடமற்று
நமக்கேது வாழ்வு என...

*எஸ். குமுதினி*
*எழுதுமட்டுவாழ்*

## வாழ்த்தி வரவேற்கிறது

கொட்டும் மழையின்
கொடூர வெள்ளத்தால்
சிக்கித் தவிப்போரை...
உயிரைப் பெரிதென
நினையாது கரைசேர்க்கும்
கலங்கரை விளக்கங்களே...!
உங்களைப் போன்ற
மனிதநேயமிக்க...
நல்லவர்களைத்தான்
வாழ்வைத் தொலைத்து
கண்ணீரில் அல்லாடும் தமிழினம்
வாழ்த்தி வரவேற்கிறது

*வ.ச.செல்வராசா*
*திருநாவலூர்*

## பாசம்

பாசத்தை தோள் மீது
சுமக்கத் துணிந்த
அன்பு உள்ளங்கள்
வாழ்வதனால்தான்
உறவுகள் மறந்துவிடாத
அன்பின் சக்தியால்
வெள்ளமாய் என்ன
கள்ளமாய்கூட
துன்பம் தொட்டுவிட
முடியாமல்
தோற்றுப்போகின்றது

*க.அபர்ணா*
*வட்டுக்கோட்டை*

## எண்ணங்கள் சுமந்து

ஓயாத அலையாக அடித்து
ஓய்ந்த இடுப்பளவு நீரலையில்
உயிர் பிழைக்கவென
முன்னேறிப் பாய்ந்து தோளில்
சுமையுடனே நகர்ந்து
வாழ்தலுக்கான புதிய
பாது "காப்பரண்" அமைத்து
அதில் குடியிருந்து
மீண்டும் வீழாது
எழும் எண்ணங்கள் சுமந்து...

*எ.அ.மேரி எமில்டா*
*புதுமுறிப்பு*

## ஏனிந்த நிலை

இயற்கையின் காலநிலை
மாற்றத்தை எம்மால்
தடுக்கவோ நிறுத்தவோ முடியாது
அதனோடு சேர்ந்து
இணைந்து வாழ்வதே பொருத்தம்
தமிழ்நாட்டில் பொழிந்த
கடும் மழை வெள்ளம்
வீடுகளுக்குள் போக
விளைவினை உணர்ந்த
மக்கள் தவிக்க
அன்பு கொண்ட உள்ளங்கள்
சிறுவர்களைத் தூக்கி தோளிலிட்டு
கரைசேர்க்கும் பரிதாப நிலை காண
இதயம் துன்பத்தால் துடிக்கிறதே

*துரை.தென்மட்டுவில்*

## மனிதநேயம்

மழை புயல் வெள்ளம்
மலைதான் சரிந்தாலும்
மனிதநேயத்தோடு
மண்ணிலே வாழும் நாம்
மனிதர்களாக வாழ்ந்திடுவோம்
ஓடிச் செல்லும் நீரினாலும்
உயிர்காக்க உதவிடுவோம்
கரை ஒன்று சேரும் வரை
காவியே சென்றிடுவோம்
எங்களுக்காய் எழுதப்பட்டதை
இறைவனும்தான் என்ன செய்வான்

*அனிஞ்சில் புவபாலன்*

## புதிய பாதை

மனிதனின் அளவில்லா
கொடூரங்கள் கண்டு
தாங்க முடியாமல்
இயற்கையும் சீற்றம் கொண்டு
பாவப்பட்ட மனித
வளத்தையே அளிக்கின்றது
அவர்கள் எங்கு போவார்கள்
பாவப்பட்ட மனிதனே
பாதை தெரியவில்லை
என்று எண்ணாமல்
நீ உனக்கென
ஓர் பாதையை உருவாக்கு

*இரா.ஜெ.துஷ்யந்தா*
*மாதகலூர்*

## இனியேது நிம்மதி

பத்தரை மாற்று தங்கமொன்று
கண் முன்னாலேயே
பாழாகிப்போனதுவோ!
நித்திலம் கொழித்திட்ட
நிலம் தானின்று
தன் நிம்மதியை இழந்ததுவோ

*வாணியழகன், முரசுமோட்டை*

# மௌனத்தின் தேடல் -282



**அன்பு வாசகர்களே !**


உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 06.01.2016ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.


குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# தமிழ்க்கூட்டமைப்பின் அசமந்தப்போக்கும் தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கமும்



கடந்த வார இறுதியின் மாலைப் பொழுதொன்றில் உருவாகிய தமிழ் மக்கள் பேரவை பற்றிய செய்திகளும் அதை ஒட்டிய அரசியல் பரபரப்பும் இன்னமும் அடங்கிய பாடாகத் தெரியவில்லை. இது தொடர்பில் ஆதரித்தும், எதிர்த்தும் பல்வேறு கருத்துக்கள் வெளிவந்தவண்ணம் உள்ளன. தமிழ் அரசியல் பெருவெளியில் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற ஓர் குறிப்பிடத்தக்க நிகழ்வு இது எனவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கான ஓர் மாற்று அரசியல் சக்தியாக இது உருவாகும் எனவும் இதனை நோக்குபவர்களும் உண்டு. அதே நேரம் தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கம் என்பது பத்தோடு பதினொன்றான இன்னுமொரு நிகழ்வு எனவும் இதனைப் பெரிதுபடுத்தத் தேவையில்லை எனவும் சிலர் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். குறிப்பாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரும் அது சார்ந்த ஊடங்களும் தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கம் தொடர்பில் மிகக் கடுமையான அல்லது எதிர்மறையான கருத்துக்களை வெளியிட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இதேவேளை இன்னொரு தரப்பினர் இந்த அரசியல் குழப்ப நிலையைப் பயன்படுத்தி தனிப்பட்ட ரீதியில் தங்களை முதன்மைப் படுத்த என்னென்ன நகர்வுகளைச் செயய முடியுமென குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முயல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவர்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைமையுடன் முறிந்து போன தமது பழைய உறவுகளைப் புதுப்பிக்க அல்லது பலப்படுத்த இதனைப் பயன்படுத்த திட்டமிட்டு வருவதாகவும் அறியமுடிகிறது.



தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தென்னிலங்கை சக்திகளுடனான எதிர்ப்பு அரசியல் என்பதைக் கைவிட்டு இணக்க அரசியல் என்கின்ற பாதைக்குள் பிரவேசித்து ஏறத்தாழ ஒருவருடம் நிறைவடைந்துள்ளது. இந்த ஒரு வருட காலத்தில் தமிழ் மக்கள் பெற்றுக்கொண்டது எவை? இழந்தது எவை? என்பதை அவதானிப்போமாயின் தமிழ் மக்கள் பேரவை உருவாக்கத்திற்கான சூழ்நிலையையும் தேவையையும் புரிந்துகொள்ள முடியும் என நான் நம்புகிறேன்.

போருக்குப் பின்னரான காலப் பகுதியில் மிகவும் இறுக்கமாக அதிக கெடுபிடிகளுடன் நிலவிவந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினது ஆட்சியினை அகற்றி நல்லாட்சி என்று கூறப்படுகின்ற மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியை உருவாக்குவதற்கு பெருமளவில் பங்களித்தவர்கள் தமிழ் மக்கள் ஆவர். இந்த மாற்றத்திற்காக மைத்திரி, ரணில் மற்றும் சந்திரிகாவுடன் கைகோர்த்து அதனை தமிழ் மக்கள் மத்தியில் சிபார்சு செய்தவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர்கள். ஆனால் இம்மாற்றத்தின் பெறுபேறுகளை அல்லது நன்மைகளை தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க தவறிவிட்டனர் என குற்றம் சாட்டுபவர்களும் உண்டு.

குறிப்பாக தமிழ் மக்களது உடனடி மற்றும் உணர்வுபூர்வ பிரச்சினைகளான ராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து காணிகளை விடுவித்துக் கொள்வது, அரசியல்கைதிகளின் விடுதலை, காணாமல்போனோர் தொடர்பான விடயங்கள், இறுதிக்கட்ட யுத்தக்குற்றங்கள் தொடர்பான விசாரணை என பல்வேறுபட்ட விடயங்கள் காணப்பட்டாலும் கூட அது தொடர்பில் இதுவரை எதுவித ஆக்கபூர்வமான விடயங்களும் நிறைவேற்றப்படாமை தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தி நிலை ஒன்றை உருவாக்கிவிட்டுள்ளது எனக் குறிப்பிடமுடியும். குறிப்பாக தமிழ் அரசியல கைதிகள் விடுதலை தொடர்பில்அரசாங்கம் நடந்து கொண்ட முறைமையும் அது தொடர்பிலான விடயகளை கூட்டமைப்பினர் கையாண்ட முறைமையும் தமிழ் மக்களை கோபம் கொள்ள வைத்துள்ளது.

யாழ்.மாவட்டத்தின் வலி வடக்குப் பிரதேசத்தில் இன்னமும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணமான பொதுமக்களின் நிலங்கள் ராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் உள்ளதுடன், சில நூறு ஏக்கர்களின் விடுவிப்பைத் தவிர இன்னமும் விடுவிக்கப்படாமல் ஆறாயிரம் ஏக்கருக்கு அதிகமான நிலங்கள் காணப்படுகின்றன. இது தொடர்பில் எதுவித காத்திரமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பதுடன், அம்மக்கள் இன்னமும் முகாம்களிலேயே வாழவேண்டிய அவல நிலை காணப்படுகின்றது.

காணாமல் போனோர் விடயத்திலும் இதுபோன்றே எது விதமான உருப்படியான நடவடிக்கைகளும் எடுத்ததாகத் தெரியவில்லை. புதிய அரசாங்கமும் வெறுமனே ஆணைக்குழு விசாரணை என கால இழுத்தடிப்பினையே செய்து வருகின்றது. இவ்விடயங்கள் தொடர்பில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் அரசிற்கு போதியளவு அழுத்தத்தினைக் கொடுக்கவில்லை என்கின்ற ஆதங்கம் தமிழ் மக்கள் மத்தியில் எழ ஆரம்பித்துள்ளது.

இது தவிரவும் வேறு பல விடயங்களும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் மீது தமிழ் மக்கள் மத்தியில் வெறுப்பினையும் சந்தேகத் தினையும் உருவாக்கியுள்ளது. குறிப்பாக ஜெனிவா மனிதவுரிமை மாநாட்டில் கலந்துகொண்ட கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அரசிற்குச் சார்பான நடவடிக்கைகளையே மேற்கொண்டிருந்தனர் என்றும் தமிழ் மக்கள் தொடர்பில் விசுவாசமாக நடந்து கொள்ளவில்லை எனவும் செய்திகள் இணையத்தளங்கள் வாயிலாக வெளிவந்தன. இவற்றின் உண்மை பொய என்பவற்றிற்கு அப்பால் இவை தமிழ் மக்கள் மத்தியில் கூட்டமைப்பினர் மீதான வெறுப்பை சம்பாதித்துக் கொடுத்திருந்தன. இந்நிலையில் தமிழ் மக்கள் மீது இடம்பெற்றது இனப்படுகொலை எனக் கூறமுடியாதென கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஜெனிவாவில் கூறியதாக வெளிவந்த கருத்தும் மக்களை மேலும் விசனத்துக் ஆளாக்கியது.

தேர்தல்காலங்களில்தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கு இடையில்இடம்பெற்ற அநாகரிகமான சம்பவங்களும் தேர்தலின் விருப்பு வாக்கு எண்ணுதல்தொடர்பில்வெளிக்கிளம்பிய வதந்திகளும் தமிழ்த்தேசயக் கூட்டமைப் பின் உறுப்பினர்கள் மீது தமிழ் மக்களை அருவருப்புக்கொள்ளச் செய்துள்ளது.

இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல சுமந்திரன் - விக்னேஸ்வரன் முரண்பாடும் மக்கள் மத்தியில் அதிருப்தியை உருவாக்க வழிவகுத்துள்ளது. சரி பிழை என்பவற்றிற்கு அப்பால் விக்னேஸ்வரன் என்கின்ற தனிமனித ஆளுமையை தமிழ் மக்கள் மிகவும் விரும்புகின்றனர் என்பதே உண்மையாகும். செல்வநாயகத்திற்கு இணையாக விக்னேஸ்வரன் மீது தமிழ் மக்கள் அன்பு கொண்டுள்ளார்கள் என்பது அப்பட்டமான உண்மையாகும். இந்நிலையில் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அவருக்கு பல்வேறு நெருக்கடிகளைக் கொடுத்தமையும் அவரைக் கட்சியிலிருந்தும் முதல்வர் பதவியிலிருந்தும் அகற்றக் கோரியமையும், அதற்காக நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டமையும் கூட்டமைப்பினர் மீது தமிழ் மக்களுக்கு உருவாகியிருந்த அதிருப்தியினை அதிகப்படுத்தியது எனலாம்.

இவை எல்லாம் இவ்வாறிருக்க, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கு நெருக்கமான பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் 1990 இல் முஸ்லிம் மக்களை வடக்கிலிருந்து வெளியேற்றியமை ஓர் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கை என வியாக்கியானம் செய்ததுடன் தமிழ் மக்கள் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும் எனவும் கூறியிருந்தமையானது தமிழ் மக்களை மிகவும் கோபத்திற்குள்ளாக்கிய நடவடிக்கையாகப் பார்க்கப்படுகின்றது.

இது தவிர நயினாதீவு பெயர் மாற்றம், கொக்கிளாய் விகாரை கட்டுமானம், முல்லைத்தீவு காடழிப்பு போன்ற விடயங்களில் கூட்டமைப்பினர் காட்டிய அசிரத்தையும் மெத்தனப் போக்கும் தமிழ் மக்களை போதும் என்ற நிலைமைக்கு கொண்டுவந்துவிட்டது என்று கூறப்படுகின்றது.

தமிழ் மக்கள் தொடர்பில் இத்தகைய சறுக்கல்களை தொடர்ச்சியாக ஏற்படுத்தி வந்த கூட்ட மைப்பினர் மறுபுறத்தில் தமக்கான பதவிகளையும் சலுகைகளையும் தென்னிலங்கை அரசாங்கத்திடம் கோரிப் பெற்றுவந்துள்ளனர். சம்பந்தருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி, அடைக்கலநாதனுக்கு குழுக்களின் பிரதித்தலைவர் பதவி, மாவை சேனாதிராஜா, சிறிதரன், சிவ மோகன், சாள்ஸ், அடைக்கலநாதன், சிறிநேசன போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் இணைத்தலைமைப் பதவிகள் மற்றும் ஏனையோருக்கு இதர பல பதவிகளும் சலுகைகளும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் அரசாங்கத்தின் சலுகைகளில் திளைத்துக்கொண்டிருக்கிறார்கள். தென்னிலங்கைத் தலைவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களை, பாராளுமன்றத்தில் புகழ்ந்துரைக்கும் அளவிற்கு கூட்டமைப்பின் அடிமை விசுவாசம் கோலோச்சுகிறது.

இத்தகைய சூழ்நிலையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்குரிய நியாயமான தீர்வினை பெற்றுத்தருவார்களா? என்கின்ற ஐயம் தமிழ் மக்களிடையே உருவாகியுள்ளது. எதிர் வரும் வருடம் அரசியல் தீர்வொன்றிற்கான முன்னெடுப்பினை தென்னிலங்கை மேற்கொள்ளலாம் என்கின்ற நிலையில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பிரதிபலிக்கும் வகையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் செயற்படுவார்களா? என்கின்ற சந்தேகம் பொதுமக்கள் மத்தியில் உருவாகியுள்ளதுடன் கவலைகொள்ளவும் செய்துள்ளது.

இந்நிலையில் தான் வடக்கு கிழக்கின் சிவில் அமைப்புக்களைச் சேர்ந்த கல்விமான்கள் தொழில்வல்லுநர்கள், சமூகப் பிரதிநிதிகள், சமயத்தலைவர்கள் என பல்வேறுபட்ட தரப்பினர் இணைந்து புதிய அமைப்பான தமிழ் மக்கள் பேரவையை உருவாக்கியுள்ளனர். இவர்களது பிரதான நோக்கம் தமிழ் மக்களின் அரசயல் தீர்வு தொடர்பான ஓர் வரைபினை முன்வைப்பதாக சொல்லப்படுகிறது. உண்மையில் இது ஓர் வரவேற்கத்தக்க விடயமென்றே சொல்ல வேண்டும். இதுவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோ அல்லது வேறு தமிழ் அமைப்பினர்களோ தமிழ் மக்களுக்கு எந்தவகையான அரசியல் தீர்வு தேவை என்பதனை விரிவாக முன்வைக்கவில்லை.


எமக்கு என்ன வேண்டும் என உலகிற்கு எடுத்துரைப்பது காலத்தின் கட்டாயம். அதனை தமிழ் மக்கள் பேரவை முனனெடுக்க முனைந்திருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்க விடயமாகும்.

ஆனால் இன்நோக்கத்தைப் புரிந்துகொள்ளாத சிலர் அல்லது புரிந்துகொண்டும் தமது எதிர்கால இருப்புக்கு இப் புதிய அமைப்பு இடைஞ்சலாக இருக்கும் எனக் கருதி அதன் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்தவண்ணம் உள்ளனர்.

ஆனால் மறுபுறத்தில் கற்றறிந்த சமூகத்திடையே இப்புதிய அமைப்பிற்கு நல்ல வரவேற்பு காணப்படுவதாக அறியக்கூடியதாக உள்ளது. நான் முன்னர் கூறியதைப் போல கூட்டமைப்பின் சறுக்கல்களும் காலத்தின் தேவையும் தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கத்திற்கு வழிவகுததுள்ளது. அது மக்களின் அரசியல் சக்தியாக பரிணமித்து வெற்றி நடைபோடுவதை காலமும் மக்களும் அதன் செயற்பாடுகளும் தீர்மானிக்கும் என எண்ணத்தோன்றுகின்றது.

**சதுர்வேதி**

# மதங்கள், ஒரே வேரின் உதிப்பு!



பொதுவாக மதம் என்பது, மனிதனின் மனிதத் தன்மையை உயர்த்துவதற்காக அல்லது மனிதன், தான் இழைத்த தீச்செயலில் இருந்து மீண்டெழுந்து நற்காரியங்கள் புரிந்து தேறுவதற்காக, வாழ்க்கையில்ஏற்படும்துன்பதுயரங்களைக்கண்டு சிதைந்து போகாமல், துணிந்து அவற்றுக்கு முகங்கொடுப்பதற்காக, கூட்டு நிகழ்வுகளினூடாக (சடங்குகளின் ஊடாக) மனங்களுக்கு மருத்துவமளிக்கும் சமூகக் கலையாக கலாசாரமாகவே நடை பயில எத்தனித்திருக்கிறது. ஆனால், அதன் நோக்கங்களும் கண்டுபிடிப்புகளும் இன்று சிதைக்கப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

மதத்தின் பேரால் இன்று உலகில் நடக்கும் அநீதிகளுக்கும், மதத்தின் தோன்றலுக்கும் அதன் நோக்கத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. மதங்கள் எல்லாவற்றினதும் அடிவேர் ஒன்றுதான், என்பதைப்புரிந்து கொள்ள... சற்று பின்னோக்கிப் பார்த்தால், பல புராணக்கதைகள் அந்த உண்மையை எமக்கு விளம்பும்.

அவதாரம் என்றால் வானத்தில் இருந்து இறங்கி வருபவர் என்று பொருள் என்றால், இறங்கி வருபவனுக்கு ஊடகம் தேவைப்படும். வானத்தில் இருந்து நேரடியாக வந்தாலும் அண்டவெளி எனும் ஊடகம் தேவைப்படும். யேசு, புத்தர், இராமர், நபி, அனைவரும் இந்திரிய, சூலகத் தொடர்புடையவர்களே. இவையும் ஊடகமே.

அப்படி என்றால் அவதாரம் என்றால் என்ன? அவதாரம் என்பது "இறங்கி வருதல்" மட்டுமே என்று தான் பொருள் கொள்ள முடியும். தன் உயர்நிலையில் இருந்து மனிதநிலைக்கு தாழ்ந்து வருதலாகும். விஸ்ணுவை இராமனாகவும், கர்த்தரை யேசுவாகவும், அல்லாவின் தூதனாக நபிகளையும் கருதலாம்.

அவதாரம்என்பதை வடமொழியான சமஸ்கிருதத்தில் அவ்வுத்-தார் என்னும் இருசொற்களின் இணைப்பே ஆகும். இதை வானத்தில் இருந்து அண்டவெளி எனும் ஊடகத்தினூடாகவும் இறங்கி வரலாம். தாயின் சூலகத்தில் இருந்தும் இறங்கி வரலாம் என்று ஏன் கொள்ள முடியாது? தெய்வ நிலையில் இருந்து மனிதராக தரம்இறங்குதலை அவதாரம் எனலாமோ?

இன்று பல அறிவுசார் இஸ்லாமியர்கள் பகவதம், கல்கி அவதாரம் பற்றிய உண்மைகளை ஒத்துக்கொள்ள ஆரம்பித்துள்ளார்கள். அவர்கள் கல்கி அவதாரம் என்பது நபிகள் நாயகமே என்பதை நிஷரூபிக்க முயல்கின்றனர்.

பூகோள ரீதியாகவும், இனப்பரம்பல் ரீதியாகவும் இந்தியாவை எடுத்துக் கொண்டால் வடக்கில் இருந்து வந்தவர்களே வடவிந்தியர்களாகக் கருதலாம். அதாவது அரபு, பாரசீகம், ஆப்கானிஸ தான், நேபாளம் மத்திய ஆசியாவில் இருந்து வந்தவர்களாகவே கருத முடியும்.

இவர்கள் தமது நம்பிக்கைகளுடனேயே கீழ்நோக்கி நகர்ந்தனர். அதேவேளை இந்தியாவில் ஒருபெரு இனம் தன்னை நிரந்தரப்படுத்தி நாகரீகத்துடன் வாழ்ந்து கொண்டிருந்தது. அவர்களே பண்டைய தமிழர்கள். இவர்கள் இயற்கை வணக்கத்துடன் (முக்கியமாக சூரிய, வாயு, மின்னல் வணக்கங்கள்) லிங்க வணக்கத்தையும் கொண்டவர்களாகவே கருதப்பட்டனர்.

அங்கே லிங்கம் என்பது இயறகையின் ஒரு பிரதியாகவே காணபபட்டது. இங்கே நாகரீகம் அடைந்த நிலையில் இருந்த தமிழர்களிடம காணப்பட்டவற்றுடன், வடக்கில் இருந்து வநதேறியவர்களின் நம்பிக்கைகளும் இணைந்து கொண்டன. இந்த நம்பிக்கைகளின் இணைவே இந்துமத்தின் முக்கிய பிரிவுகளான சைவம், வைணவம் எனலாம்.

யூதம், கிறிஸ்தவம், இஸ்லாத்தின் அடிப்படைக் கூறுகளை எடுத்து நோக்கினால் அவற்றை வைணவ புராணங்களில் காணலாம். பகவதம், கல்கி அவதாரங்களில் கூறப்படுவன, நபியின் பிறப்பை உறுதிப்படுத்தியதாக சில இஸ்லாமியர்கள் கருத்துக்கொள்கின்றனர்.

கல்கி அவதாரம் பற்றி பகவத் புராணம் தொகுதி 12, அத்தியாயம் 2, சுலோகம் 18-20வரை சொல்வதாவது, சம்பாலா எனும் ஊரில், ஊர்த்தலைவரின் வீட்டில் விஸ்ணுயாஸ் என்பவருக்கும், சுமதி என்பவருக்கும் மகனாக கல்கி அவதரிப்பார் என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் கூறுவதாவது கல்கி 8 குணங்கள் கொண்டவர் என்றும், தேவர்களால் கொடுக்கப்பட்ட வெள்ளைக் குதிரையில் வலதுகையில் வாளை ஏந்தியபடி வருவார் என்றும், சுலோகம் 25ல் மன்னவர்கள் எல்லாம் கொள்ளையர்களாக மாறும் வேளையே கல்கி அவதாரம் உருவாகும் என்றும் இவருக்கு நான்கு தோழர்கள் உதவியாக இருப்பார்கள் என்றும், மாதவ மாதம் 12ம் திகதி பிறப்பார் என்றும் கூறப்பட்டுள்ளது. அப்பிறப்பு நடநததோ இல்லையோ என்பது இந்துக்களுக்குத் தெரியாது.

இது நடந்ததாகவும் அவர்தான் நபிகள் நாயகம் என்றும் இஸ்லாமிய அறிவு ஜீவிகள் உணர முயலகின்றனர்.

விஸ்ணுயாஸ் என்றால் இறைவனான விஸ்ணுவை யாசிப்பவன் என்றுபொருள் அதன் அர்த்தம் இறைநம்பிக்கை உடையவன் என்பது ஆகும். தாய் பெயர் சுமதி என்பது சுகம், அமைதி என்று பொருள் கொள்ளும்.

இந்தக் கல்கி, இடம்பெயர்வார் என்றும் மலைக்குகையில் வாழ்வார் என்றும் தெய்வீக ஞானம் கிடைக்கும் என்றும் இவரே இறுதியான விஸ்ணுவின் அவதாரம் கல்கி என்றும் கூறப்பட்டுள்ளது.

இதை இஸ்லாத்தில் பார்த்தால் முகமது நபியின் தந்தை பெயர் அப்துல்லா அதாவது இறைவனின் அடியாள் என்றும், தாய் ஆமினா என்றால் சாந்தி அமைதி என்றும் சம்பாலா என்றால் அமைதியான இடம் மெக்கா சாந்தமும் அமைதியுமுள்ள இடம் என்றும் கல்கி அவதாரமே கடைசியானது அதேதான் முகமது நபியும் இறுதியான முனி என்றும் குரான் கூறுகிறது.

மேற்கூறிய நபிகள் பற்றிய தரவுகளை சுரா அல் அஹ்ஜாப்பில் இருந்து எடுத்துத் தந்தவர் டாக்டர் ஜாகீர் நாயக் என்பவராவார்.

கல்கி அவதாரத்தில் கூறியது போல் நபிகளும் குகையில் வாழந்தார் என்றும் வடக்கே சென்று திரும்பினார் என்றும் அவருக்கு அல்லுர் மலையில் உள்ள கிராக் குகையில்தான் தெய்வ அறிவிப்புக் கிடைத்தது என்றும் இதன்பால் இந்த மலையை ஒளியின் மலை என்று கருதப்பட்டது. இதனால் நபிகளே கல்கி அவதாரம் என்பதை டாக்டர் ஜாகீர் நாயக் நிரூபிக்க விளைகிறார். எது எப்படியோ இஸ்லாத்தின் அடிப்படையை ஆதிமதம் இந்துப்புராணங்களில் சொல்லியிருக்கிறது என்பது உறுதியாகிறது.

இறைவனானவன் 8 குணங்கள் கொண்டவன் என்பதை வள்ளுவரும் "எண்குணத்தான் தாளை வணங்காத் தளை" என்றார். ஆக மதங்களின் அடிப்படைகள் அனைத்தும் ஒன்றாக அமைந்தாலும் மனிதனே அதை வேற்றுமைப் படுத்தி மதத்தை, மனிதம் தாண்டி யுத்தத்த களத்துக்கு அழைத்துச் சொல்கிறான்.

யூத, கிறிஸ்தவ, இஸ்லாத்தின் ஆணிவேர் என்று கருதப்படும் ஆபிரகாமுக்குப் பிள்ளை பிறககாது என்றும், அவர் தன்னை ஈகம் செய்தால் மட்டுமே பிள்ளைப் பலன் உண்டு என்றும் ஞானிகளால் அறிவுறுத்தப்பட்டது. அவர் இறைவனை வேண்டி அவருக்கு ஒரு ஆண்குழந்தை ஈசாக் பிறந்தான்.

*அந்தப்பிள்ளையை மலையில் உச்சியில் வைத்துக் கொன்றுவிடு* என்று இறை அசரீரி கேட்டது. இவர்,ஈகம் செய்வாரா என்பதை இறைவன் சோதித்தான். அவர் அக்கூற்றை ஏற்று அப்பிள்ளையை கொல்லும்போது தேவதைகளை வந்து தடுத்து அப்பிள்ளையை வாழவைத்தன. இந்த ஈசாக்கே கிறிஸ்தவ இஸ்லாமியர்களின் பொதுத் தந்தையாவான்.

இதேபோன்ற கதை அல்லது புராணத்தை இந்துவேதத்தில் காணப்படுகிறது. ஆனால், முடிவு மட்டும் வித்தியாசமாக இருந்தது. அதாவது, அக்குழந்தையைக் கொல்லுமாறு உத்தரவு கிடைத்த போது இந்துத் தந்தை இறைவனுடன் வாதிட்டு அக்குழந்தையைக் காப்பாற்றுகிறான்.

அதேநேரத்தில் சைவ சமயத்தில் சிறுத்தொண்ட நாயனார் என்ற சிவத்தொண்டர், ஆகோரி வடிவில்வந்த சிவனுக்கு பிள்ளைக் கறி சமைக்கிறார். ஆனால், பிள்ளையை இறைவன் மீட்டுக கொடுக்கிறார்...

ஆயினும் வேற்றுமைகளில் ஒற்றுமை காணப்படுகிறது. (மதங்கள் ஒன்றே என்பதற்கான பதிவு) மேற்கண்ட இரு கதைகளிலும் தந்தை சோதிக்கப்படுகிறான், பிள்ளை காப்பாற்றப படுகிறது ஆனால்,காப்பாற்றப் பட்ட மார்க்கம்தான், வித்தியாசமானது.

மத்தியகிழக்கு மதங்களில் முக்கியமாக இஸ்லாம் கடவுளின் கட்டளைக்கு எந்தக் கேள்வி நியாயமும் இன்றிப்பணிய் வேண்டும். இதை குரானே கூறியுள்ளது.

ஆனால், இந்து மதத்தில் மனிதன் கடவுளிடம் கேள்வி கேட்கலாம் பேரம் பேசலாம் வாதிடலாம். இந்த சுதந்திரம் உண்டு. (இதனாலேயே இந்துக்கள் இலகுவில் மதம் மாற்றவும் படுகிறார்கள்) சிந்திக்கும் உரிமை சுதந்திரமாக இந்துக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

ஆக மதங்கள் கூறுவது அனைத்தும் ஒன்றே. ஆனால், மார்க்கங்களே வித்தியாசமானவை. மதங்களின் தோற்றம் என்பது, பலவேற்றுமைகளைக் கடந்து ஒருமையின் அடியிலிருந்து உருவெடுத்துள்ளது என்பதை இக்கதைகள் புரிய வைக்க முனைகின்றன.

உண்மையில் மதங்களின் நோக்கம் ஒன்றுதான் அது, மனிதம என்ற உன்னதத்தை அழியவிடாது காத்து தெய்வத் தன்மையை மனதருள் மேம்படுத்துவது. இந்த மனமருத்துவ சமூக கலாசாரத்தை விளங்கிக் கொண்டு அதன் காலத்துக்கு ஒவ்வாதவற்றைக் கழித்து உகந்தவற்றை சரியான வழியில்-மனித்தை உயர்த்துவதற்கு பயன் படுத்தி சிறப்படைதலே இன்றைய பொருந்தும்.

மதங்களிடயே வேற்றுமை காண்பது என்பது அறிவீனம். மதங்களின் வளர்ச்சி, அது கடைப்பிடிக்கப்பட்ட பிரதேசங்களின் (நாடுகளின்) இயற்கை நிலைமைக்கு ஏற்றவகையில், அந்நாட்டு மக்களின் வாழ்கை முறைக்கேற்ப அநுட்டானங்களைப் பெற்றிருக்கிறது என்பது புரியப்படவேணடியது.

*-நோர்வே நக்கீராவிலிருந்து*

# மனம் உண்டெனில்...!



சிறுகதை

அந்தக் கிராமத்துக் கோயிலில் வருடாந்த பெருந் திருவிழா நடைபெற இருக்கிறது. கோயிலின் பரிபாலன சபையினரும் உபயகாரர்களும் சேர்ந்து இந்தமுறை திருவிழாவுக்கு தேவாரப்பண்ணிசையா.. அல்லது கதாப் பிரசங்கமா.. அல்லது நாதஸ்வர இசையா எதை ஒழுங்கு செய்யக்கூடியதாக அமையும் என்று விவாதித்துக்கொண்டிருந்தனர்.

"இந்தமுறை ஒரு கதாப் பிரசங்கத்தை ஒழுங்கு செய்யலாம்" என்ற, தனது அபிப்பிராயத்தை கூறினார் ஒரு உபயகாரர்.

"உதுகளுக்கெல்லாம் சனங்கள் வராது. பிறகென்ன... சுவாமி காவுவதற்குக்கூட ஆட்கள் இராது என்றார்" இன்னொருவர். சனங்கள் நிறைய வரவேண்டும் என்பது முக்கியமல்ல. அந்தக் காலத்திலே கோயில் கதாப்பிரசங்கங்கள், சொற்பொழிவுகள் நடந்தன. மக்களும் அதைக் கேட்டு.., எப்படியோ கடவுளுக்குப் பயப்படுகின்றவர்களாக வாழ்ந்தினம்.

இந்தக் காலத்திலே மனுசனுக்கு எது.. பாவம், எது புண்ணியம் என்று தெரியாமல் கிடக்குது. கொஞ்சப்பேர் கேட்டாலும், கேட்கிற அவ்வளவு பேர்களுக்குமாவது மன அமைதி கிடைக்கும். வேறு சிலர் கொஞ்சமாவது தம்மைத் திருத்திக்கொள்வார்கள் என்று நினைக்கிறன்" என்று இன்னொருவர், கதாப் பிரசங்கத்துக்கு ஆதரவாகக் கதைத்தார். கடைசியில் எல்லோரும் ஏகமனதாக கதாப் பிரசங்கத்தை ஒழுங்கு செய்வது என்று தீர்மானித்தார்கள்.

அன்று கொடியேற்றத் திருவிழா. கதாப்பிரசங்கம் இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாக இருந்தது. முதற்கட்ட திருவிழா என்றபடியால் ஓரளவு சனக்கூட்டம் காணப்பட்டது. பரிபாலன சபைத் தலைவர், பிரசங்கியாரை அறிமுகம் செய்தார். பிரசங்கியார் ஒரு ஆசிரியர். சுமார் ஐம்பது வயது இருக்கும். முகத்தில் தெய்வீகப் பொலிவு காணப்பட்டது. அன்று சிறுத்தொண்டர் நாயனாரது கதை, கண்ணப்ப நாயனாரது கதை என புராணக்கதைகளில் ஒவ்வொன்று, ஒவ்வொரு நாளும் பிரசங்கியாரால் அழகாகவும் உணர்வுபூர்வமாகவும் கூறப்பட்டுவந்து.

அவருடைய பேச்சு வல்லமையும், பாடல்களின் இனிமையும் கூட்டத்தினரை கவர்ந்து இழுத்தது. சில கதைகளை மிகச்சுவையாகவும், நெஞ்சை உருக்கும் விதமாகவும் ஒரு கலைஞனைப்போல் அவர் மக்களுக்கு அளித்தார். அச்சமயம் கூட்டம் அமைதியடையும்; ஆழ்ந்து கேட்கும்...தூரத்தில் இருந்து கதைத்து ஆரவாரம் செய்த இளைஞர்களும் ஒவ்வொருவராக வந்து முன்னுக்கு உட்கார்ந்தார்கள்.

இவ்வாறு பிரசங்கம் தொடர்கையில்...அன்று தீர்த்தத் திருவிழா. கதாப்பிரசங்கத்தை பூர்த்திசெய்யும் நாள். அன்று கீதையும் வாழ்வும் என்ற தலைப்பில் பிரசங்கியார் தன்னுடைய பிரசங்கத்தை ஆரம்பித்தார்.

"ஒருவன் எப்படிப்பட்ட பாவியாரானாலும், என்னைச் சரணடைந்தால், அவனை சகல பாவங்களில் இருந்தும் விடுவித்து, அவனை என்னுடையவனாக ஆக்கிக்கொள்வேன்" என்று கண்ணபரமாத்மா, கீதையில் கூறுகின்றார்.

அவருடைய பிரசங்கத்தை ஒழுங்காகக் கேட்டவர்களில் குணாளனும் ஒருவன். அன்று அவன் படுக்கையில் கிடந்த போது, நித்திரை வரமறுத்தது. கண்ணபரமாத்மா, கீதையில் கூறிய அந்த வாக்கியம், அவனுடைய மனதில் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

திருவிழாக்காலத்தில் குணாளன், குடிக்காமல் வீட்டில் அமைதியாக இருந்தார். நாளையிலிருந்து அவரது அட்டகாசங்கள் தொடங்கப்போகிறதே.. என்பது சகுந்தலாவின் கவலை. திருவிழாவின் போதான இந்தப் பதினைந்து நாட்களும் அவள் சற்று நிம்மதியடைந்து காணப்பட்டாளாயினும். நாளைய நிலைமையை நினைக்கையில் அவளுக்கும் இன்று நித்திரை வரமறுக்கிறது.

"என்தாய் தந்தை ஏழ்மையில் வாடியதால்... அவர்களுக்கு என்னாலும் மேலும் துன்பம் சேரக் கூடாது என நினைத்தேன்... எத்துணை துயர் வந்தாலும் தாங்குவேன் என்று கருதி..., இவர், ஒரு பெரிய குடிகாரன் என்று தெரிந்தும், சீதனபாதனம் கொடுக்காமல் இவரையே திருமணம் செய்துகொண்டேன்...

கோயில் திருவிழா நாட்களில் எனது குடும்பத்தில் நிலவிய இந்த அமைதி... மகிழ்சி... நான் மீண்டும் பெறுவேனோ... எனது பிள்ளைகள் நிம்மதியான வாழ்வை எப்போது பெறுவார்கள்.." என்பது தான் அவளது மனச்சுமை. இந்தச் சுமையால்... அவள் நித்தம் நித்திரைக்குச் செல்ல நேரமாகிவிடும்.

அவளின் குழந்தைகளின் எதிர்காலத்தை எண்ணுகையில் ஏனைய நாட்கள் பலவற்றைப் போல் இன்றும் அவள் கண்கள் தலையணையை ஈரமாக்கின.

அடுத்தநாட் காலை வழக்கம் போல, குணாளன் தான், வேலை செய்கின்ற, அரிசி ஆலைக்குச் செல்ல ஆயத்தமானான். சகுந்தலா தேநீரைக் கொண்டுவந்து கொடுத்தாள். தேநீரைக் குடித்தவன், பீடியொன்றைப் பற்றவைத்துக் கொண்டு துவிச்சக்கர வண்டியை எடுத்துக்கொண்டு வாசலுக்குச் சென்றான். சகுந்தலா தகரப் படலையை திறந்து விட்டாள். அவன் சென்ற பிற்பாடு, அவளையும் அறியாமல், அவள் மனதில் ஒரு தவிப்பு...இன்று மாலை அவர்.. என்ன கோலத்தில் வருவாரோ...? அல்லாடும் மனதுடன் அவளது அன்றைய பணிகளைத் தொடங்கினாள்.

அரிசி ஆலையில் குணாளான், தளத்தில் பரவியிருந்த அவித்த நெல்லை கால்பாதங்களால் கிளறிக்கொண்டிருந்தான். மனமோ அவனுடைய கடந்தகால வாழ்க்கையை ஒவ்வொன்றாகக் கிளறிக்கொண்டிருந்தது. குடிபோதையில் அடிபட்டு இரத்தம் சிந்த வீட்டுக்கு வருவது, ஒழுங்கையில் விழுந்து கிடப்பது, அயலவர்கள் தாய்க்குச் செய்த முறைப்பாடுகள், தாய் விட்டகண்ணீரும், பெருமூச்சும், பேசிவந்த திருமணங்கள் குழம்பிப்போனது, ஒருவரும் பெண் கொடுக்கமாட்டினம் என்ற நிலையில் வறுமையின் கொடூரத்தை தாங்க முடியாமல் சகுந்தலாவின் பெற்றோர்கள் அவளை தனக்கு திருமணம் செய்து வைத்தது, அதனால், எப்பொழுதும் வாடிப் போயிருக்கும் சகுந்தலாவின் முகம். எல்லாமே அவனுடைய மனதில் வந்துபோய்க் கொண்டிருந்தன.

அன்று மாலை, வேலை முடிந்து, வீட்டுக்குச் செல்ல புறப்பட்டான் குணாளன். வழமையாக சாராயக் கடைக்குச் சென்று குடித்தபிற்பாடுதான், வீட்டுக்குச் செல்வான். அவன் வீட்டுக்குப் போகின்ற வழியில் தான் சாராயக்கடை இருந்தது. சாராயக்கடையை நெருங்க.. நெருங்க.. அவனுடைய மனப் போராட்டம் உக்கிரமடைந்தது.

அவன், இன்று ஏற்கனவே, ஒரு தீர்மானம் எடுக்க முயற்சி செய்திருந்தான். நேற்றுப்போல் இன்றும் தன் நாவையும் மனதையும் அடக்கிக்கொள்வது.., தன் குடும்பத்துக்காக..

ஆனால், கடைக்கு அண்மையில் செல்கையில் அவன் நா.. எச்சியூறியது.. மனம் படபடத்தது... அதுவா இதுவா..? அவன் துவிச்சக்கர வண்டி கூட, அவனையும் அறியாமல்... கடைப்பக்கமாக திரும்ப எத்தனித்தது...

ஆனாலும் அவன், திருந்தும் வழிகளில்... முன்னேறவே முயற்சித்தான். கீதை உபதேசம் அவனின் அடிமனதில் இருந்துகொண்டு அவனது பதட்டத்தை மெல்ல மெல்லத் தணித்தது... "கண்ணபரமாத்மா.. எனக்கு உதவி செய்யப்பா.. நான் இந்த தீய வழிகளின்று விலகி என் குடும்பத்தை மகிழ்சியாக வைத்திருக்க எனக்கு உதவிசெய்யப்பா..! இந்த குடிப்பழக்கத்தை மறக்கும்படியாக, எனக்கு எது செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்யப்பா... நான் உன்னிடம்.. இதைத்தான் கேட்கிறேன்... காசுபணம் தேவையென்று நான் கேட்வில்லை.. அதை நானே உழைத்துக்கொள்கிறேன்..

இந்தக் குடிப்பழக்கத்தை அறவே விட்டுவிட எனக்கு பாதைகாட்டப்பா.. அதைத் தான் உன்னிடம் இறைஞ்சுகிறேன்.. என் மனசுள் நீயே குடி கொள்ளப்பா.., அந்தக் மதுவைக் குடிக்கின்ற ஆசையை வெளியேற்றி விடு.. அது போதும் எனக்கு.. அதுபோதும் எனக்கு.. உன்னையே நம்புகிறேன் என்னைக்காத்தருளப்பா.." என்று மனதுக்குள் பலமுறை வேண்டியவாறு.. துவிச்சக்கர வண்டி மிதி பலகையை உறுதியோடு மிதிக்கிறான்..

அவனது வண்டி, இப்பொழுது அவன் சொற்படி கேட்டது. அதுசாராயக் கடைப் பக்கம் நிற்காமல் வீடுநோக்கிச் சென்றது.

வீட்டுக்குச் சென்ற குணாளன் கால், முகத்தை கழுவிக் கொண்டு சுவாமி அறைக்குச் சென்றான். விபூதியை எடுத்து நெற்றியில் பூசிக்கொண்டான். சில நிமிடங்கள் சுவாமிகளைக் கும்பிட்டபின் வெளியே வந்து படிக்கட்டில் உட்கார்ந்தான்.

சகுந்தலா அவனுக்கு தேநீரைக் கொடுக்கும்போது வழமைபோல அவனுடைய முகத்தை உற்றுப் பார்த்தாள். அவனுடைய முகம் வெளிச்சமாயிருந்தது. அவன் குடிக்கவில்லை என்பதை உறிதிப் படுத்திக்கொண்டாள்.

"இறைவா! இனிமேலாவது என்னுடைய வாழ்க்கைக் கதையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தமாட்டாயா! நீ நினைத்தால் முடியாதது ஒன்றுமில்லை" அவளுடைய மனம் பேசிக்கொண்டது.

க.தர்மலிங்கம்

# தமிழ்த் தேசியர்களின் இரட்டை நிலை!

“கடந்த வாரம் இளம் நோர்வேஜிய ஆய்வாளர் ஒருவர், தாயக நிலைமைகள் குறித்தும் தமிழ் டயாஸ்பொறாவின (புலம்பெயர் தமிழ் மக்கள்) தாயக ஈடுபாடு குறித்தும் என்னுடன் கலந்துரையாடினார். இவர், அண்மையில் இரண்டு வாரங்கள் இலங்கைப் பயணம் செய்து பலரையும் சந்தித்து உரையாடி தரவுகள் சேகரித்து வந்தவர். இப் பயணத்தின்போது இவர் சந்தித்து உரையாடிய தமிழர்கள் பலரும் ‘ஆட்சி மாற்றத்தின் பின் தமிழர் வாழ்வு நிலை சார்ந்து மிகுந்த நம்பிக்கையுடன் பேசவில்லை எனவும், ஓர் எச்சரிக்கை கலந்த உணர்வுடன்தான் பேசினார்கள்’ என்றும் அவர் தெரிவித்தார். மாறாக இவர் சந்தித்துப் பேசிய சிங்கள சமூகத்தினர் ஆட்சிமாற்றம் குறித்து கூடுதல் மகிழ்வுடன் பேசியதாகவும் தெரிவித்தார். தமிழ் டயாஸ் பொறாவின் தாயக ஈடுபாடு குறித்தும் நாம் பேசிக் கொண்டோம்.

இவ் உரையாடலின் போது தமிழ் டயாஸ்பொறாவுக்கும் தாயகத் தமிழ் மக்களுக்கும் இடையில் பெரும் இடைவெளி இருப்பதாகக் கூறப்படுவதை நான் மறுதலித்தேன். எனது பார்வையின்படி தமிழ்த் தேசிய நிலைப் பாட்டைக் கொண்ட தமிழ் மக்களுக் கிடையே தாயகத்திலும் சரி டயாஸ் பொறாவின் மத்தியிலும் சரி இரண்டு வகையான போக்குகள் அல்லது பார்வைகள் தென்படுகின்றன என எடுத்துக் கூறினேன். இவை அரசியல் தீர்வு குறித்து வேறுபட்ட நிலைகளில் மையங்கொண்டுள்ளன என்பதையும் குறிப்பிட்டேன். நான் அவதானிக்கும் இவ் இருவகைப் போக்குகள் குறித்து இன்றைய பத்தி சுருக்கமாகப் பதிவு செய்கிறது.

இவ் இருவகைப் போக்குகளைப் பற்றிப் பதிவு செய்யும்போது கட்சிகளைக் கடந்த நிலையிலேயே இந்த அவதானிப்பைப் பதிவு செய்கிறேன். ஒருவகைப் போக்கு ஒரு கட்சியுடையது என்றும் மற்றைய போக்கு இன்னொரு கட்சியுடையது என நாம் இதனை வேறுபடுத்த முடியாது. குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இவ் இருவகைப் போக்கைச் சேர்ந்தவர்களும் உள்ளார்கள். இதனால், இப் போக்குகளைப் பற்றிப் பார்க்கும்போது கட்சி வட்டத்துக்குள் சுருங்கிக் கொள்ளாமல் விடுதல் முக்கியமானது.

முதலாவது போக்கு, தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் அல்லது ஒரு தேசம் என்பதற்கான அங்கீகாரம் எட்டப்பட்டு அதன் அடிப்படையில் ஓர் அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டது. இதனை இன்னொரு வகையில கூறின் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் போன்ற அடிப்படை நிலைப்பாடுகளுக்கான அங்கீகாரத்தை எட்டுதல். எந்தவொரு நிலையான அரசியல் தீர்வு முயற்சிக்கும் முக்கியமானது என இப்போக்கு கருதுகிறது. இத்தகைய அங்கீகாரம் எட்டப்படாவிடின் சிறிலங்கா அரசின் தமிழர்களை இனக்கபளீகரம் செய்யும் நீண்டகாலத்திட்டத்தில் இருந்து தமிழ் மக்களைக் காப்பாற்ற முடியாது எனவும் இப்பார்வையைக் கொண்டவர்கள் உறுதியாக நம்புகின்றனர். அனைத்துலக சமுதாயத்தின் ஆதரவைத் தமிழ் மக்களின் அடிப்படைகளுக்கு ஆதரவாக வென்றெடுக்க வேண்டுமே தவிர அனைத் துலக சமூகத்தின் நிலைப்பாடுகளுக்கேற்ப தமிழ் மக்களின் உரிமைகளைக் கைவிடமுடியாது எனவும் இவர்கள் கருதுகிறார்கள்.

இந் நிலைப்பாட்டைக் கொண்டு தாயகத்தில் உள்ளவர்கள், நாடு பிரியாத தீர்வை முன்வைக்க, தமிழ் டயாஸ்பொறவில் உள்ளோர் தனிநாட்டையும் தீர்வுமுறைகளில் ஒரு தெரிவாக உள்ளடக்கி, மக்கள் வாக்கெடுப்பு மூலம் தீர்வுகாண வேண்டும் எனக் கோருகின்றனர். அரசியல் தீர்வு குறித்து ஜனநாயக அடிப்படையில் மனந்திறந்த கருத்துப் பரிமாற்றத்தைச் செய்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் 6வது திருத்தச் சட்டம் அகற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் இப்போக்கைக் கொண்டோரிடம் இருந்து கூடுதலாக வெளிப்படுகிறது. இப்போக்கைக் கொண்ட அரசியற் தலைவர்களில் முக்கியமானவர்களாக வடக்கு முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஈழமக்கள் புரட்சி முன்னணியின் செயலாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் ருத்ரகுமாரன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

## தமிழ்த் தேசியர்களின் இரட்டைப் போக்கும் தமிழ் மக்கள் பேரவையும்!

இரண்டாவது போக்கு, தமிழ் மக்களின் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் போன்ற நிலைப்பாடுகளைத் தமது அரசியல் நிலைப்பாடுகளாக வெளிப்படுத்தினாலும், இவை அரசியல் தீர்வுக்கு அடிப்படையாக ஏற்றுக் கொள்ளப்படாவிடினும், கிடைக்கக்கூடிய உரிமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்ட போக்கு. இப் போக்கைக் கொண்டவர்கள் கொள்கையளவில் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் அல்லது ஒரு தேசம் என்பதை ஏற்றுக் கொண்டவர்கள். ஆனால், அதற்கான அங்கீகாரம் கிடைப்பதற்கான சாத்தியம் குறைவு என்பதால் இத்தகைய அங்கீகாரம் இல்லாதவோர் தீர்வையும் ஏற்றுக்கொள்வதுதான் விவேகமானது என இவர்கள் கருதுகிறார்கள்.




அனைத்துலக சமூகத்தின் ஆதரவைப் பெறுவதும் இவர்களுக்கு முக்கியமானதாகப் படுகிறது. சிங்களத் தலைவர்களிடம் தமக்கு இருக்கும் நெருக்கமான தொடர்புகள் மூலம் காரியம் சாதிக்கலாம் என்றவகையான கருத்துக்களும் இவர்களிடம் உள்ளது. இவர்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படையாகப் பேசிக் கொள்ளாமல் முதலாவது போக்கின் நிலைப்பட்டு இயங்குவது போலவே தம்மை வெளிப்படுத்திக் கொள்கிறார்கள். இப்போக்கைக் கொண்ட முக்கிய அரசியல் தலைவர்களாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், உலகத் தமிழ் பேரைவத் தலைவர் அருட்தந்தை இம்மானுவல் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

இன்றைய தமிழ்த் தேசிய அரசியலில் அக்கறை கொண்டோர் அனைவரும் இவ் இரண்டு போக்குக்கள் தொடர்பாகத் தாம் எங்கு நிற்கிறோம் எனத் தம்மை மதிப்பீடு செய்தல் ஒன்றும் கடினமானதல்ல. ஒருவரின் சிந்தனை இவ் இரு போக்கில் எதற்கு நெருக்கமாக இருக்கிறதோ அதற்கேற்பவே அவர்களின கருத்துக்களும் செயற்பாடுகளும் வெளிப்படுகின்றன. நான் இந்த இரு போக்குகளில் முதலாவது போக்குக்கு நெருக்கமானவனாகவே என்னை அடையாளம் காண்கிறேன். எனது சிந்தனையின் அடிப்படையில் எந்தவொரு நிலையான அரசியல்தீர்வுக்கும் அடிப்படையாகத் தமிழ் மக்கள் ஒரு தேசம் அல்லது தேசிய இனம் என்பதற்கான அங்கீகாரம் மிகவும் முக்கியமானதாகப் படுகிறது. இத்தகைய அங்கீகாரம் கிடைக்கும் மட்டும் தமிழ் மக்கள் அரசியல் இராஜதந்திர ரீதியில் போராடித்தான் ஆக வேண்டும். இதற்கு குறுக்கு வழியேதும் கிடையாது.

இவ் இரு போக்குத் தொடர்பாகப் பேசும்போது தற்போதய அரசியற் தலைவர் ஒரு சிலரின் ஏமாற்றுத் தனத்தைப் பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். நான் மேற்கூறிய இரண்டாவது போக்கினைப் பிரதிபலித்துக் கொண்டு நின்று, அதன் அடிப்படையில் அரசியல்தீர்வு காணும் முயற்சியினைச் செய்து கொண்டு, அதனையே முதலாவது போக்கின் வகைப்பட்ட தேசியம், தாயகம், சுயநிர்ணயத்தை அடிப்படையாகக் கொண்ட சமஸ்டித் தீர்வு எனத் தமிழ் மக்கள் மத்தியில் சித்தரிக்கும் முயற்சிகளும் நடைபெறுகின்றன. இந்த முயற்சியினைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களே செய்வதால், கிளம்பும் அதிருப்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்துகிறது. கூட்டமைப்புக்கு மக்கள் வாக்களித்தமை, முதலாவது போக்கின் பாற்பட்ட கூட்டமைப்பின் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவே- என்பதும் இங்கு சுட்டிக் காட்டப்படவேண்டியது.

ஈழத் தமிழ் மக்களின் மத்தியிலான அரசியல் நடவடிக்கைளும் இவ் இரு போக்குகளுடனும் தொடர்புபட்டவை. அண்மையில் உருவாகிய தமிழ் மக்கள் பேரவை எனது பார்வையில் நான் இங்கு குறிப்பிட்ட முதலாவது போக்குக்கு நெருக்கமாகத் தென்படுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை இரண்டாவது போக்குடன் இயங்குவதன் விளைவாகத்தான் தமிழ் மக்கள் பேரவை தோற்றம் பெற்றுள்ளதாகவே எனக்குப்படுகிறது.

தமிழ் மக்கள் பேரவை தன்னை கட்சி அரசியலுக்கும் தேர்தலுக்கும் அப்பாற்பட்ட மக்கள் இயக்கமாக அறிவித்துள்ளது. தமிழ் மக்களின் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் என்று அடிப்படைகளை அங்கீகரித்ததொரு தீர்வு என்ற நிலையினை பேரவை தமிழ் மக்கள் மத்தியில் வலுப்படுத்தும் என்று நம்புவோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்கள் பேரவையினை எதிர் அமைப்பாக நோக்காமல் பேரவை தரும் அழுத்தத்தை தனது பேரம் பேசும் சக்தியை வளர்ப்பதற்குப் பயன்படுத்த முயலவேண்டும். அப்போது தமிழ் தேசிய அரசியல் வலுப்படும். மாறாக தமிழ் மக்கள் பேரவையினை முறித்துக் கொட்டுவதில் கூடுதல் கவனம் செலுத்தினால் அதுவே கூட்டமைப்பு முறிவதற்குக் காரணமாக அமைந்துவிடலாம்!



**-கலாநிதி சர்வேந்திரா**

# திட்டி திட்டி விளையாடுறாங்க!




'கிரிக்கெட் என்பது பெரிய மனுஷங்க விளையாட்டு. அதுல கப்பித்தனமா திட்டிக்கவோ, அடிச்சுக்கவோ மாட்டாங்கனு கிரிக்கெட் ரசிகர்களும் அவ்வப்போது கரியை அள்ளிப் போடுவார்கள். உண்மையில், வீரர்கள் எதிரணி வீரர்களைக் கடுமையான வார்ததைகளால் திட்டிக்கொள்வார்களா. இதற்கு 'ஸ்லெட்ஜிங்' என பெயர். சம்பிளுக்கு சில சாஃப்டான 'ஸ்லெட்ஜிங்குகள்'.

இந்தியா-பாகிஸ்தான் டெஸ்ட் போட்டி. சேவாக்கும், சச்சினும் களத்தில் ஆடிக்கொண்டிருந்தனர். சேவாக்குக்கு அக்தர் பவுன்ஸர்களாக போட்டுக் கடுப்பேற்றியிருக்கிறார். மேலும், சேவாக்கிடம் 'பவுன்ஸர் போட்டால் ஹூக் ஷாட் ஆடுங்க சேவாக். அப்போதானே சீக்கிரம் அவுட் ஆகுவீங்க என கலாய்க்கவும் செய்திருக்கிறார். அதற்கு சேவாக், 'நான் ஹூக்ஷாட்டெல்லாம்ஆடமாட்டேன். உங்க அப்பா அந்தப் பக்கம் கையில் பேட் வெச்சுகிட்டு நின்னுட்டு இருக்கார். அவர் ஹூக் ஷாட் ஆடுவார்' என அக்தரிடம் சச்சினைக் காட்டியிருக்கிறார். அக்தர் தன் அடுத்த ஓவரில் சச்சினுக்கும் பவுன்ஸர் போட ஹூக் ஷாட் ஆடி பந்தை சிக்ஸருக்கும் விரட்டியிருக்கிறார் சச்சின். போச்சா...

அவுஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் பிரட்லீ. மணிக்கு சுமார் 160 கி.மீ வேகத்தில் பந்து வீசி சாதனை செய்திருக்கிறார். ஒரு முறை பாகிஸ்தானின் முன்னாள் கப்டன் இன்சமாம் உல்-ஹக் பிரட்லீயிடம் 'முதலில் நீ சுழற்பந்து போடுவதை நிறுத்து' என கலாய்த்திருக்கிறார். பார்றா...

அவுஸ்திரேலிய அணியின் ஜாம்பவான் ஸ்டீவ்வாக்கின் கடைசி டெஸ்ட் போட்டி. இந்தியாவுக்கு எதிரான அந்தப் போட்டியில் ஸ்டீவ் பேட்டிங் ஆடிக்கொண்டிருந்தாராம். அப்போது கீப்பராக இருந்த பார்த்திவ் பட்டேல், 'உங்களுக்கு ஆட வராத ஸ்வீப் ஷாட் ஆடி, சீக்கிரம் அவுட் ஆகிக் கிளம்புங்க' என 'கிளம்பு கிளம்பு காத்து வரட்டும்' என்ற ரேஞ்சுக்குப் பேசியிருக்கிறார்.

வாயை மூடி அமைதியா இரு' என்று பார்த்தீவுக்கு பல்பு கொடுத்திருக்கிறார்.

இது தாத்தா காலத்து ஸ்லெடஜிங். இந்திய அணிக்கும் மேற்கிந்திய அணிக்கும் நடைபெற்ற போட்டியில் ஓப்பனிங் பட்ஸ்மேனான சுனில் கவாஸ்கர் நான்காவதாக இறங்கி ஆடத்திட்டமிட்டிருக்கிறார். மேற்கிந்தியத்தீவுகள் அணியினர் இரண்டு ஓப்பனர்களையுமே டக்-அவுட் செய்து விட, கவாஸ்கர் களமிறங்கியி ருக்கிறார். அப்போது விவியன் ரிச்சர்ட்ஸ் கவாஸ்கரிடம் 'நீ ஓப்பனிங் இறங்கினாலும் நாலாவதா இறங்கினாலும் டீம் ஸ்கோர் ஜீரோவாதான் இருக்கும்' என அசிங்கப் படுத்திவிட்டாராம். ச்சே...

அதே விவியன் ரிச்சர்ட்ஸ். ஒருமுறை இங்கிலாந்து பந்து வீச்சாளர் க்ரெக் தாமஸ், பேட்டிங் செய்துகொண்டிருந்த விவியன் ரிச்சர்ட்ஸிடம் 'இங்கே பார். சிவப்பு வண்ணத்துல, உருண்டையா இருக்கே. இதுக்கு பேர்தான் பந்து. இதைத்தான் நீ அடிக்கணும்' என ரிச்சர்ட்ஸை பால்வாடிப் பையன் போல் கேலி செய்திருக்கிறார். அடுத்த பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ரிச்சர்ட்ஸ் 'உனக்கு பந்து எப்படி இருக்கும்னு தெரியும்ல... அதைப் போய் எடுத்துட்டு வா...' என வழியனுப்பி வைத்திருக்கிறார்.




ஒருமுறை முன்னாள் அவுஸ்திரேலிய வீரர் இயான் ஹேலி பட்டிங் செய்துகொண்டிருந்த இலங்கை வீரர் அர்ஜுன ரணதுங்கவிடம் 'ஏன் உன் கால் இப்படி நடுங்குது, என்ன பயமா?' எனத் திரியைக் கிள்ளிப் போட, அதற்கு ரணதுங்க 'இல்ல... உன் வீடு வரைக்கும் போய்ட்டு வந்தேன். அதான் அலுப்பில் கால் நடுங்குது' என சரவெடியே கொளுத்தியிருக்கிறார்.

பாகிஸ்தான் முன்னாள் வீரர் ஜாவித் மியான்டட். மனுஷன் வேற மாதிரி, பேட்டைக்கொண்டு அம்பயர் முன்னாலேயே எதிரணி வீரரை அடிக்கச் சென்றவர். எதிரணி வீரர்களிடம் ஒரண்டை இழுப்பது தான் இவரது பொழுதுபோக்கே. ஒரு முறை ஜாவித் பேட்டிங் ஆடிக்கொண்டிருந்தார். அப்போது பவுலிங் போட்டுக்கொண்டிருந்த திலீப் தோஸியிடம் 'உனது ரூம் நம்பர் என்ன? சொல்லு...' என நச்சரித்து இருக்கிறார்.

மைதானத் துக்கு அருகில் தான் ஹோட்டலும் இருந்திருக்கிறது. ஒரு அளவுக்கு மேல் பொறுமை இழந்த திலீப் 'ரூம் நம்பர் 216. இப்போ அதுக்கு என்ன பண்ணப் போற?' எனக் கேட்டிருக்கிறார். அதற்கு ஜாவித் 'அடுத்த பந்தை நான் அங்கதான் அடிக்கப் போறேன்' எனக் கூறியிருக்கிறார். ஓவர் சேட்டை...

இதுதான் இருப்பதிலேயே படு பயங்கரம். அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர் மெக்ரத், சிம்பாவே அணி வீரரான பிரான்டைஸைப் பார்த்து 'ஏன் இவ்ளோ குண்டா இருக்க?' எனக் கேட்க, அதற்கு பிரான்டெஸ் 'நான் உன் மனைவியோடு இருக்கும்போதெல்லாம், அவ எனக்கு பிஸ்கெட் தருவா' என பதில் கூறியிருக்கிறார்.

கடுப்பான மெக்ரத் 'அடுத்த முறை உன் வாயில் இருந்து என் மனைவி பற்றிய வார்த்தை ஏதாச்சும் வந்துச்சு, சங்கை கடிச்சுத் துப்பிடு வேன்' என மிரட்டியிருக்கிறார்!

# 2016ம் ஆண்டில் சர்வதேச போட்டிகளில் இருந்து விடைபெறும் 5 வீரர்கள்

நடப்பு ஆண்டில் சங்கக்காரா, ஜெயவர்த்தன, ஷேவாக், கிளார்க் என பல முன்னணி கிரிக்கெட் வீரர்கள் சர்வதேச போட்டிகளில் இருந்து விடை பெற்றனர்.

இந்த நிலையில் அடுத்த வருடம் டோனி, டில்ஷான், டீ வில்லியர்ஸ், நெஹ்ரா, ஸ்டெய்ன் இவர்களும் ஓய்வு பெறுவார்கள் என்று தெரிகிறது.

### டோனி

இந்திய அணித்தலைவர் டோனி, இந்தியாவின் சாதனை தலைவராக உள்ளார். இதுவரை 2 உலகக்கிண்ணங்களை வென்று கொடுத்துள்ள டோனி, அடுத்த வருடம் இந்தியாவில் நடக்கும் இருபது- 20 உலகக்கிண்ணததை குறி வைத்துள்ளார்.

இவர் கடந்த ஆண்டு டெஸ்ட் போட்டிகளில் இருந்து திடீரென்று ஓய்வு பெற்றார். இந்த நிலையில் இருபது-20 உலகக்கிண்ணத்திற்கு பிறகு ஒருநாள் போட்டியில் இருந்தும் விடைபெறுவார் என்று தெரிகிறது.

### டில்ஷான்

ஜெயசூரியாவின் ஓய்வுக்கு பிறகு இலங்கை அணியில் அதிரடி தொடக்கத்தை தொடர்ந்து வருகிறார் டில்ஷான். அவருக்கு தற்போது 39 வயதாகிறது. இருப்பினும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார்.

ஒருநாள் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களை கடந்து சாதனை படைத்திருக்கும் டில்ஷான் அடுத்த வருடம் ஓய்வு பெறுவார் என்று தெரிகிறது.

### டீவில்லியர்ஸ்

தென்னாபிரிக்க அணியின் தலைவர்டீவில்லியர்ஸ், அணிக்காக சிறப்பாக பங்காற்றி வருகிறார்.



ஒருநாள், இருபது-20 மற்றும் டெஸ்ட் என மூன்று துறைகளிலும் பட்டையை கிளப்பி வருகிறார்.

மூன்று துறைகளிலும் விளையாடி வருவதால் பணிச்சுமையை குறைக்க நடவடிக்கை எடுப்பார்.

முதுகுவலியாலும் தொடர்ந்து அவதிப்பட்டு வரும் அவர் அடுத்த வருடம் கண்டிப்பாக ஏதாவது ஒரு துறையில் இருந்து ஓய்வு பெறலாம்.

### ஆஷிஷ் நெஹ்ரா

இந்திய கிரிக்கெட் அணியின் சீனியர் வேகப்பந்து வீச்சாளரான நெஹ்ராவுக்கு தற்போது 36 வயது ஆகிறது.

இந்திய அணியில்இடம்கிடைகாத நிலையில், உள்ளூர் போட் டி களிலும் அதிகமாக இடம்பெற வில் லை.

இந்த நிலையில் ஐபிஎல் போட்டியில் சிறப்பாக ஆடியதன் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இருபது-20 தொடரில் மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இதனால் அடுத்த ஆண்டு நடைபெறும் இருபது-20 உலகக்கிண்ணப் போட்டி இவருக்கு கடைசி போட்டியாக அமையலாம்.

### டேல் ஸ்டெய்ன்

தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்டெய்னும் சர்வதேச போட்டிகளில் இரு ந்து விடைபெறுவார் என்று தெரி கிறது.

டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் இவர் தொடர் காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். இதனால் இவரும் இருபது-20 உலகக் கிண்ணத்தோடு விடை பெறலாம்.

# காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடியோர்: ரி.எம். சௌந்தரராஜன்,
வரிகள்: கண்ணதாசன்
இசை: எம்.எஸ்.விஸ்வநாதன்
திரைப்படம்: வியட்நாம் வீடு



உன் கண்ணில் நீர் வழிந்தால்
என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி
என் கண்ணில் பாவை அன்றோ
கண்ணம்மா என்னுயிர் நின்னதன்றோ

உன்னை கரம் பிடித்தேன்
வாழ்க்கை ஒளிமயம் ஆனதடி

பொண்ணை மணந்ததனால்
சபையில் புகழும் வளர்ந்ததடி

உன் கண்ணில் நீர் வழிந்தால்
என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி

கால சுமைதாங்கி போலே
மார்பில் எனை தாங்கி

வீழும் கண்ணீர் துடைப்பாய்
அதில் என் விம்மல் தணியுமடி

ஆலம் விழுதுகள் போல்
உறவு ஆயிரம் வந்தும் என்ன

வேர் என நீ இருந்தாய்
அதில் நான் வீழ்ந்து விடாதிருந்தேன்

உன் கண்ணில் நீர் வழிந்தால்
என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி

முள்ளில் படுக்கையிட்டு
இமையை மூடவிடாதிருக்கும்

பிள்ளை குலமடியோ
என்னை பேதைமை செய்ததடி

பேருக்கு பிள்ளை உண்டு
பேசும் பேச்சுக்கு சொந்தமுண்டு

பேருக்கு பிள்ளை உண்டு
பேசும் பேச்சுக்கு சொந்தமுண்டு

என் தேவையை யார் அறிவார்
என் தேவையை யார் அறிவார் உன்னை போல்
தெய்வம் ஒன்றே அறியும்
உன் கண்ணில் நீர் வழிந்தால்
என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி

என் கண்ணில் பாவை அன்றோ
கண்ணம்மா என்னுயிர் நின்னதன்றோ
உன் கண்ணில் நீர் வழிந்தால் . . .

**இப்பாடலை**
**SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
தவேந்திரன் குடும்பம், உரும்பிராய், சிந்துஜா வேலணை, சந்திரராணி குடும்பம், விமலராணி, யோகராசா குடும்பம், விஸ்வலிங்கம், கீர்த்திகன், ஸ்ரீபற்மராசா,இந்திரன்,

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

# ஈழத்து சினிமா

## கூத்தாடி-குறும்பட விமர்சனம்

கூத்தாடி குறும்படம் பாரம்பரிய கலைஞர்களான அண்ணவியாரின் வாழ்வியலின் ஒருபக்கத்தை பேச விளைகின்றது. இந்தக் குறுந்திரைப்படத்தை தபின் எழுதி இயக்கியுள்ளார். தர்சனின் ஒளிப்பதிவிலும், ஸ்ரீ நிர்மலனின் இசையிலும், ஸ்ரீ துஷிகரனின் படத் தொகுப்பிலும் குறும்படம் உருவாக்கி வெளிவந்துள்ளது.

பாரம்பரியமாக கூத்துக்கலையைச் செய்துவரும் பரம்பரையில் வந்த இளைஞன் ஒருவனின் பார்வையில் குறும்படம் நகர்கின்றது. தந்தை கூத்துக்கலையில் பெயர்பெற்ற அண்ணாவியார். தந்தையின் தொழில் ரீதியான பெயர் அவனை திணறச்செய்கின்றது. செல்லும் இடங்களில் கூத்தாடியின் மகன் என்ற பெயர் தொடர்ந்தும் பின்னால் துரத்தி வருவதனை வெறுக்க ஆரம்பிக்கின்றான். ஒருகட்டத்தில் நாட்டைவிட்டு வெளியேறுகின்றான். புலம்பெயர் தேசத்தில் வேலைதேடிச் செல்லும் போது அவனுக்கு ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.

கூத்தாடி கலையின் எழுச்சி வீழ்ச்சியினை பேசாமல், நிகழ்காலத்தில் எதிர்நோக்கும் கூத்துக் கலையின் இடர்பாடுகளை பேசமால், அருகிவரும் கூத்துக்கலையின் மையப்பிரச்சினையை பேசாமல் வெறுமே கூத்துக் கலைஞர்களின் அடுத்த தலைமுறையினரின் கூத்தின் மீதான ஆர்வத்தை மட்டுமே குறும்படம் பேச விளைந்திருக்கின்றது. ஏன் கூத்துக் கலையினை நிகழ்த்துபவர்களை இன்றைய தலைமுறையினர் ரசிக்கவில்லை. நக்கல் செய்கின்றார்கள் என்பதற்கு குறும்பட்டத்தில் நுணுக்கமாக காட்சிப்படுத்த தவறியிருக்கின்றார்கள். தொலைக்காட்சி,திரைப்பட ஊடுருவல்கள் கூத்துக்கலை




யின் செல்வாக்கை குறைத்து அதன் புனிதத்தன்மையையும் செறிவையும் நீர்ந்துபோகவைத்துக் கொண்டிருப்பதினை குறும்படம் பேசவில்லை.

குறும்படத்தில் சித்திரிக்கும் இளைஞனின் கண்களில் எப்போதும் கூத்துக்கலையின் மேல் வெறுப்பு அணலாகக் கசிகின்றது. தந்தை காலையில் ஒத்திகை பார்க்கும்போது அல்லது பயிற்சிசெய்து பார்க்கும்போது படுக்கையில் உள்ள இளைஞனுக்கு கட்டுப்படுத்த முடியாத வெறுப்பு வருகின்றது. இந்த வெறுப்புக்கு காரணம் நிகழ்காலத்தில் அவன் எதிர்நோக்கும் துன்பவியல் சம்பவங்கள் காரணமாகச் சொல்லப்படுகின்றது. அந்தக் காரணத்துக்கு துன்பவியல் காரணத்தை நிகழ்த்துபவர்களின் மனநிலை ஏன் அப்படி உள்ளது என்பதற்கு குறும்படத்தில் விடையில்லை, நாங்களாக எமக்கு தெரிந்த காரணங்களை ஊகித்து படைப்பை நியாயம் செய்யும் வகையில் நிரப்பிப் பார்க்கவேண்டியுள்ளது. இந்த நியாயம் செய்தல் எமது நிலத்தின் பண்பாடும் பாரம்பரியமும் தெரியாதவர்களிடம் இருந்து உருவாகது. எனவே முழுமைத்தன்மையை எட்டிப்பிடிக்காத குறும்படமாகவே கூத்தாடி குறும்படம் இருக்கின்றது.

ஒளிப்பதிவு இன்னும் கவனிக்கப்பட்டிருக்கலாம். ஒளிச்செறிவுகளில் இன்னும்போதிய கவனம் எடுத்து மேம்படுத்தப்பட்டு இருக்கலாம். தனுராஜின் நடிப்பு பல இடங்களில் செயற்கைத்தனமாக இருக்கின்றது. தந்தையுடன் உரையாடும் காட்சிகளில் நுண்மையற்ற நடிப்பு வெளிப்படுவதனை கண்டுகொள்ள முடிகின்றது. புலம்பெயர் தேசத்தில் நிகழும் காட்சிகளை உள்ளரங்கு படப்பிடிப்பு மூலம் ஓரளவுக்கு நம்பகத்தன்மையாக உருவாக்கி இருக்கின்றார்கள். நேர்காணலில் அணிந்திருக்கும் உடைகள் பிரான்ஸ் தேசத்து புகலிட தமிழர்களை நினைவுபடுத்துகின்றது, கட்சிதமான உடையமைப்பு.

பின்னணி ஒலிப்பதிவு வாய் அசைவுகளுடன் பொருந்தாமல் பிசகியிருக்கின்றது. இவற்றில் இன்னும் தொழில்நுட்பம் சார்ந்த இறுக்கமான அவதானங்கள் தேவை. பாரம்பரிய கலைஞர்களின் வாழ்வியலை ஒதுக்கப்பட்ட குறுகிய பார்வையில் இக்குறும்படம் பேசியிருக்கின்றது. செறிவான கூத்துக் கலைஞர்களின் வாழ்வியல் பிரச்சினைகளை பேசத்தவறியிருக்கின்றது

**-அனோஜன் பாலகிருஷ்ணன்-**

# ஈழத்துக் கவிதைகள்

- எம். நவாஸ் சௌபி

## மழையின் நிழலில் வசித்தல்

மழையின் மெல்லிய குரலாக
ஜன்னலில் விழுகிறது தூவானம்
நீ சிதறி அறைச் சுவரில் தெறிக்கிறாய்
எனது நிலத்தில் நீயாகிய ஈரம்
பாதம் புதையும் மழையில்
உன் காலடியைத் தடம்பார்த்து
மிதியாமல் நானும் திரும்பாமல் நீயுமாய்
நாம் நடந்த தெருவின் வளைவில்
வாலாட்டிக்கொண்டிருந்த நாய்
நன்றியின் குறியீடாய்
நின்றிருக்க வேண்டும்.
பெருத்த மழை மெல்ல மெல்ல முடிந்து
அதன் கடைசித் துளியும்
செடியின் இடையில் தேங்கியிருந்து
விழுவதுபோல் தொலைவில் இன்னும் தொலைவில்
நீ சென்றுகொண்டிருக்கிறாய்
நன்றி உன்னைப் பின்தொடர்கிறது. . .
தலைக்கு மேலே
மழையில் நனைந்த காகம்
சிறகை விரித்து அடித்து
ஈரத்தை உதறிவிட்டுப் பறக்கிறது.
நான் நனைந்த ஈரத்துடன்
நீயாகிய நீராகி நடக்கிறேன்.

## அவள் சற்றுத் தள்ளி உறங்கிய இரவு

நள்ளிரவு உறக்கத்தை ஒரு எலி
கொறித்துக்கொண்டிருக்கிறது.
கடிகாரம் சுவாசிக்கும் ஓசை
மிகுந்த அச்சமாய்
அறையில் பரவும்
மெல்லிய வெளிச்சத்தை
விழுங்குகிறது
நான் நம்பிக்கை
இழக்கிறேன் இன்றிரவு
அவள் சற்றுத் தள்ளி உறங்குகிறாள்.
மூச்சையாகிக்
கிடக்கிறது படுக்கை
பெரும் வெளியாய்
இரவு நீண்டுகொண்டு செல்லும்
பாதை வழியே
விழியின் கால்கள் நகர உறக்கம்
அவளது காலடியில்
ஒரு பூவாய் உதிரும்.
அவள் சற்றுத் தள்ளி
உறங்கிய இரவு
இன்னும் விடியவே இல்லை.

சோலைக்கிளி

## ஆசிரியர்

மழையோடுதான் விடிகிறது
காலைப்பொழுது
நான் குளிக்குமுன்னமே
தான் குளித்த பூமரங்கள்
பள்ளிக்கு வந்திருக்கும் சிறுமிகள்
பெரிய வாத்தியார்
மாமரம் புற்கள்
சின்ன வகுப்புப் பிள்ளைகள்
என் வாசல் ஒரு பள்ளிக்கூடமாக
உதவி செய்த காலைமழை
இன்னும் வாழ வேண்டும்
நாளையும் வர வேண்டும்
என் வாசலில் மரங்களின் கல்வி ஓங்கி
கனிய வேண்டும்
பூமரத்தின் முகங்களெல்லாம்
புன்னகைகள்
அவைகளுக்கு பிடித்த பாடம் நடக்கிறது குளிர்
என் போர்வையை அவைகளுக்கு
நான் தரத் தேவையில்லை
பாடம் ஏறாது வெயில் வருகிறது
நிலத்தை உலர்த்துதல் பற்றி
இருட்டை விரட்டியடித்து
தலையை எப்படி
நிமிர்த்துதல் என்று
பிள்ளைகளுக்குச்
சொல்லிக்கொடுக்க
வெயில் வருகிறது
வெயில் விஞ்ஞான ஆசிரியர்.

சினிமா செய்தி

# பசங்க 2

## திரை விமர்சனம்



ஏ.டி.ஹெச்.டி. என்று சுருக்கமாகச் சொல்லப்படும் அட்டென்ஷன் டெபிஷிட் ஹைபர் ஆக்டிவிட்டி டிஸ்ஆர்டர் என்கிற குழந்தைகளின் குறைபாட்டை பின்னணியாகக் கொண்டு இப்போதைய கல்வி முறை, பகட்டான நகரவாழ்வுக்கு ஆசைப்பட்டு இயல்பு வாழ்க்கையைத் தொலைத்தவர்களின் நிலை, குழந்தைவளர்ப்பு முறை என பல விடயங்களை நெஞ்சில் தைக்கிற மாதிரி சொல்லியிருக்கிறார் இயக்குநர் பாண்டிராஜ்.

முனீஸ்காந்த் வித்யா, கார்த்திக் குமார் பிந்துமாதவி ஆகிய தம்பதியினருக்கு ஒரே சமயத்தில் குழந்தை பிறக்கிறது. அதற்கும் முன்னும் பின்னுமான சம்பவங்களின் உணர்ச்சிக் கோர்வைதான் படம். வயிற்றில் வளரும் குழந்தைக்கு ஆறுமாதம் ஆகும் போதே பள்ளிக்கூடத்தில் சேர்க்க விண்ணப்பம் வாங்குவது, நிறைமாதமான பிறகு, உங்கள் குழந்தை என்னவாக வரவேண்டும்? என்கிற மருத்துவரின் கேள்விக்கு உடனடி அவசர விவாதத்துக்குப் பின் டாக்டர் என்று பதில் சொல்கிறார்கள். உடனே அருகிலிருக்கும் சோதிடர் இந்தத் திகதியில் இத்தனை மணிக்கு அறுவைச் சிகிச்சை செய்து குழந்தை பிறப்பு வைத்தால் அது நடக்கும் என்று சொல்ல, அவர் சொன்ன நேரத்தில் பிரசவம் நடக்கிறது.

இப்படி வளரும் குழந்தைகள் மிகவும் சுட்டிகளாக இருக்கின்றன. வருடத்திற்கொரு பள்ளி மாறவேண்டியிருக்கிறது. வீடும் மாறவேண்டியிருக்கிறது. வீட்டிலும் அவர்களால் பல தொல்லைகள். இதனால் மனம் வெறுத்த அத்தம்பதியினர் குழந்தைகளை விடுதியில் சேர்க்கிறார்கள்.

அதன்பின் அவர்களுக்கு இதுதான் சிக்கல் என்பதை மருத்துவர் தமிழ்நாடனாக நடித்திருக்கும் சூர்யா கண்டுபிடித்துச் சொன்னபிறகு நடக்கும் விடயங்களே கதை. முனீஸ்காந்த் வித்யா தம்பதியின் மகனாக நடித்திருக்கும் நிஷேஷும், கார்த்திக் குமார் பிந்துமாதவி தம்பதியின் மகளாக நடித்திருக்கும் வைஷ்ணவி ஆகிய இருவரும் போட்டிபோட்டு நடித்து மனதைக் கவருகிறார்கள். விடுதியில் அவர்களை விட்டுவிட்டுப்போனதும் அவர்களுடைய தவிப்பு... உருக்கம்!

சென்னைப் பெருநகரத்து உயர்நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த அவர்கள், குழந்தை பிறப்பு முதல் வளர்க்கிற வரை எப்படியெல்லாம் நடந்துகொள்கிறார்கள் என்பதை அவர்களுக்கே தெரியாமல் பின்தொடர்ந்து சென்று எடுத்தது போலக் காட்சிகள் அமைத்திருக்கிறார்கள்.

இரண்டு தம்பதிகளை வைத்துக்கொண்டு உயர்நடுத்தரமக்களின் அன்றாட நடைமுறை, அவர்களின் ஆசை ஆகியனவற்றை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். முனீஸ்காந்துக்கு இருக்கும் பணக்காரவியாதி அவ்வப்போது வாய்விட்டுச் சிரிக்க வைக்கப் பயன்படுகிறது.

சூர்யா, அமலா பால் என்ற ஸ்டார் கேஸ்டிங்கை வீணாக்காமல் நல்ல மெசேஜ் சொல்ல பயன்படுத்தியிருக்கிறார்கள். முஷ்டியை முறுக்கும் ஆக்ஷன் ஹீரோவாக அசத்துவது சூர்யாவுக்கு கைவந்த கலை. ஆனால், இந்தப் படத்தில் குழந்தைகளைக் குதூகலப் படுத்தும் ஜாலி மருத்துவராகவும் ஸ்கோர் செய்திருக்கிறார். குழந்தைகளின் சுட்டித் தனத்தை ரசித்துக்கொண்டிருக்கும் நேரத்தில் கதைக்குள் அவர் வந்தாலும் அந்த ரசனை குறையாமல் பார்த்துக் கொள்கிறார்.

இயக்குநர்கள் சமுத்திரக்கனி, ஆர்.வி.உதயகுமார், ராமகிருஷ்ணன், இசையமைப்பாளர் சிற்பி, இமான் அண்ணாச்சி, நமோநாராயணா உட்பட பல கௌரவத் தோற்றங்கள். சமுத்திரக்கனி தன்னுடைய குழந்தையைப் பள்ளிக்குக் கூட்டிப்போகும் நேரத்தில், குழந்தையின் ஆசிரியர் தனியார் பள்ளியில் தன் குழந்தையைச் சேர்க்க விண்ணப்பம் வாங்க நெடிய வரிசையில் காத்திருக்கும் காட்சியும் அப்போது அரசு வேலைகளில் இருப்பவர்கள் தங்கள் குழந்தைகளை அரசுப்பள்ளிகளிலேயே சேர்க்க வேண்டும் என்று அரசாணை வரவேண்டும் என்று சொல்லும்போதும் அப்ளாஸ் அள்ளுகிறது.

குழந்தைகள் கெட்டவார்த்தை பேசுவதில்லை கேட்டவார்த்தையைத்தான் பேசுகிறார்கள், மதிப்பெண்களை விதைக்காதீர்கள் மதிப்பான எண்ணங்களை விதையுங்கள் உள்ளிட்ட பல வசனங்கள் சாட்டையடி!

அமலா பாலை வைத்து தனியார் பள்ளிகளின் எண்ணம் மற்றும் செயற்பாடுகளை நறுக் சுருக்காகச் சொல்லியிருக்கிறார்கள். கடைசியில் நடக்கும் அனைத்துப் பள்ளி மாணவர்கள் போட்டியில் இந்தக்குழந்தைகள் பங்கெடுக்க அவர்களே வெற்றிபெறுகிறார்கள் என்று காட்சி வைக்காமல் வித்தியாசமாக வைத்து பாராட்டைப் பெறுகிறார் பாண்டிராஜ்.

இசையமைப்பாளர் அரோவ்கெரோலி, ஒளிப்பதிவாளர் பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பங்களிப்பு படத்துக்குப் பலம்.

குழந்தைகள் சாலையில் ஆம்புலன்ஸ் போகும்போது அப்படியே நின்று அவர்களுக்காகக் கண்களை மூடிப் பிரார்த்தனை செய்யும் காட்சிகளில் சிலிர்க்கவைக்கிறார்கள்.

அப்படியான சிலிர்ப்பு அத்தியாங்கள் படம் நெடுக இருக்கின்றன. பசங்க-2... இது குழந்தைகள் படமென்று சொல்வதைக் காட்டிலும், இது பெற்றோருக்கான பாடம் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும்!



# இருண்ட யுகம் இனிவேண்டாம்

புதிய அரசியல் அமைப்பு விவகாரம் தற்போது பேசு பொருளாக மாறியுள்ளது. இநத அரசியல் அமைப்பு மாற்றம் தொடர்பாக சர்வதேச நாடுகளும் அதிகளவில் காசனை காட்டுவதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையில் அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன் போன்ற நாடுகளின் செல்வாக்கை செல்லாக் காசாக்கிய மகிந்த, சீனாவுக்கு முழுநாட்டையுமே தாரை வார்த்திருந்தார்.

எங்கு பார்த்தாலும் சீனாவின் நிதிப்பங்களிப்புடன் அபிவிருத்திப் பணிகள் என்ற போர்வையில் நீண்டகால ஒப்பந்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

கொழும்பு போர்ட் சிட்டி திட்டம், இலங்கையில் சீனாவால் முன்னெடுக்கப்பட்டு வரும் பாரிய திட்டங்களில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒன்று.

இத்திட்டம் இடை நடுவில் தடைப்பட்டுப்போகும் நிலை காணப்பட்ட அதேவேளை இலங்கை - சீனா இடையிலான உறவும் அறுந்து போகும் என்ற அச்சமும் வெளியிடப்பட்டு வந்தன.

மகிந்த அரசு அப்புறப்படுத்தப்பட்டு மைத்திரி தலைமையில் நல்லாட்சி அரசு பல எதிர்பார்ப்புக்களுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட குறுகிய காலப்பகுதியில் இந்நிலை தோற்றுவிக்கப்பட்டிருந்தது.

மகிந்த ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களை மைத்திரி அரசு இடைநடுவில் நிறுத்துவதால் சீனா முரண்படும் சூழ்நிலையை வளர்த்துக்கொள்ள விரும்பாததால் அந்த நடவடிக்கைகளை சற்று தளர்த்திக் கொள்ள அரசு முற்பட்டது.

இதன் அடிப்படையில் சீனாவுக்கான ஜனாதிபதி மைத்திரியின் விஜயம் அமைந்திருந்தது. இது இவ்வாறிருக்க, ஆட்சி மாற்றத்தின் பின்னர் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வைக்காண வேண்டும். இதிலிருந்து அரசு தப்பிக்கவோ பின்னடிக்கவோ முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதை புதிய அரசியல் அமைப்பு முறையை கொண்டு வருவதில் அரசு காட்டிவரும் அக்கறை வெளிப்படுத்தியுள்ளது.

நல்லாட்சி அரசு என்று பெயர் சூட்டிக்கொண்ட மைத்திரி - ரணில் கூட்டு அரசின் செயற்பாடுகள் பெயருக்கேற்றால் போல் இருக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை இந்த அரசு கடந்த ஒருவருடத்தில் ஓரளவுக்கேனும் முன்னெடுத்து வருவதை யாரும் மறுதலிக்க முடியாது.

மகிந்த அரசு மீது தமிழ் மக்கள் கொண்ட குரோதப் மனப்பாங்கு அவரின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் மைத்திரி ஆட்சிக்கு அடித்தளமிடவும் வழிவகுத்தது.

மக்களின் கோபம் எத்தகைய வலிமையுடையது என்பதை மகிந்த தற்போது நன்கு அனுபவிக்க தலைப்பட்டுள்ளார். அவருடன் கூட்டுச் சேர்ந்து அடக்கு முறைகளை தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிட்டவர்களும் நாளுக்கு நாள் விசாரணைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

தமிழினத்துக்கு எதிரான போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை சர்வதேசத்தின் தலையீட்டுடன் முன்னெடுக்க முடியாது என்று முரண்பட்டுக் கொண்டு இருக்கும் அரசு உள்ளக விசாரணைக்கு பச்சைக் கொடி காட்டியுள்ளது.

போர்க்குற்ற விசாரணைக்கு மகிந்த தரப்பை உள்ளடக்கினால் சிங்களவர்களின் விரோதத்தை சந்திக்க நேரிடும். இராணுவத்தினர் மீது விசாரணைகளை முன்னெடுத்தாலும் இந்நிலையை தவிர்க்க முடியாது என்று அரச தரப்பினர் நன்குணர்ந்துள்ளனர்.

ஆனால் போரில் போர்க்குற்றங்கள், 'மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றது உண்மைதான் என்பதை ஏற்பது போன்று அரச தரப்பினர் கருத்துரைக்கின்றனர்.

ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாக வெளியிடப்பட்ட ஆதாரபூர்வமான அறிக்கைகளை அரசால் தட்டிக்கழிக்க முடியவில்லை. அதை சர்வதேச நாடுகள் இராஜதந்திர ரீதியாக பிரயோகிக்கும் அழுத்தங்கள் ஊடாக உணர்ந்துள்ளது.



தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை மறந்து செயற்பட முடியாத அதேவேளை சிங்கள மக்களை விரோதித்துக்கொண்டு தமிழர் நலனில் அக்கறை செலுத்தவும் அரசுக்கு முடியவில்லை.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக்கண்டு சகல இன மக்களும் சுதந்திரமாகவும் சமாதானத்துடனும் சகல உரிமைகளுக்கும் உரித்துடையவர்களாகவும் வாழ வைக்க வேண்டிய பாரிய பொறுப்பு அரசுக்குள்ளது.

கடந்த காலங்களில் இவற்றில் அரசாங்கங்கள் அக்கறையின்றி இருந்தமையே அழிவு யுத்தம் இலங்கையை ஆட்டிப் படைக்க காரணமானது.

மீண்டும் யுத்த சூழல் ஒன்று இலங்கையில் ஏற்படுமாக இருந்தால் நல்லாட்சி அரசு நிலை குலைந்து போகும். ஏனெனில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இந்நாட்டில் இன்னொரு யுத்தத்தை விரும்பவில்லை.

உரிமைக்காக தமிழர்களை போராடத் துாண்டியவர்கள் ஆயுதப் போராட்டமாகவும் பயங்கரவாதிகளாகவும் நாட்டைப் பிரிக்கும் பிரிவினைவாதிகளாகவும் சித்தரித்து தமிழினத்தையே சின்னாபின்னமாக்கிவிட்டுள்ளனர்.

பல்லாயிரக்கணக்கான தமிழர்களை கொத்துக்கொத்தாக கொன்றொழித்து விட்டு உயிரிழந்தவர்கள் அனைவரும் புலிகளே என்றும் கணக்குகாட்டி முதற்கட்டமாக தப்பித்துக் கொண்டுள்ளனர்.

இதை சர்வதேசமும் ஏற்றுக் கொண்டாற்போல் அரசின் நடவடிக்கைகளுக்கு செவி சாய்க்கப் பழகிக்கொண்டுள்ளது.

போரால் பல சொல்லொணாத துன்ப துயரங்களுக்கு முகம் கொடுத்துள்ள தமிழினம் நல்லாட்சி அரசிலாவது மீட்சி கிடைக்குமா? என்று ஏங்கிக் கொண்டிருக்கும் தருவாயில் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கம் மேலும் அந்த எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது.

புதிய அரசியல் அமைப்பில் தமிழர் நலன் உள்வாங்கப்பட வேண்டும் என்று தமிழர் தரப்பில் கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் தமிழனை அழித்தது மட்டுமின்றி தமிழர் நலனுக்கு எதிரானவர்களாக தற்போதும் செயற்பட்டு வரும் உதய கம்மன்பில, வமல் வீரவன்ச போன்றவர்கள் புதிய அரசியல் அமைப்புக்கு எதிராக கொக்கரிக்க ஆரம்பித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மம்பில, புதிய அரசியல் அமைப்பு நாட்டைத் துண்டாடிவிடும் என்று அச்சம் வெளியிட்டுள்ளார். இந்த நாட்டில் தமிழர்களுக்கு எதிராக மகிந்த ஆட்சியில் கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகங்களையெல்லாம் கைகட்டி, வாய்பொத்தி ஆதரித்த அவரைப் போன்றவர்கள் நாடு ஏற்கனவே துண்டாடப்பட்டு விட்டது என்பதை இன்னும் உணராமலும் இந்த புதிய அரசியல் அமைப்புதான் நாட்டை துண்டாடிவிடும் என்று கருத்துரைப்பது வேடிக்கையானது.

உதய கம்மன்பில போன்றவர்களின் கருத்துக்களும் செயற்பாடுகளும் நாட்டில் இனங்களுக்கிடையிலான பிளவை அதிகரிப்பதாகவும் சமாதானம் நல்லிணக்கத்துக்கு தீங்கு விளைவிப்பதாகவும் அமைந்துள்ளன.

இலங்கையில் மீண்டுமொருமுறை இருண்டயுகம் ஏற்பட வேண்டும். மகிந்த போன்ற சிங்களவர்களின் நலனைப் பாதுகாப்பவராக தம்மை அடையாளப்படுத்தி ஏனைய இனத்தவர்களை அழிப்பதற்கும் அடிமைப்படுத்துவதற்கும் உரிய கொள்கைகளை அமுல்படுத்துபவர்கள் ஆட்சிக்கு வருவதற்கும் துாபமிடுகின்றார் கம்மன்பில.

மக்கள் நலனின் அக்கறையின்றி சுயநலத்துடன் செயற்படும் கம்மன்பில போன்ற அரசியல்வாதிகளின் எதிர்ப்புக்களை அறிந்து ஆராய்ந்து புதிய அரசியல் அமைப்பு ஊடாக தமிழரின் நலன்களைப் பேணிப்பாதுகாக்கக்கூடிய நடவடிக்கைகளை தமிழர் தரப்பு ஒற்றுமையுடனும் நேர்மையாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் அணுக வேண்டும்.

சுயநலத்தை முற்றாகத் துறந்து தமிழினத்தின் நலனை முன்னிலைப்படுத்தி இனப் பிரச்சினைக்கு நிர ந்தரத் தீர்வை இனியாவது காண வேண்டும். இருண்ட யுகம் இனி இலங்கையில் இல்லை என்ற நிலையை நிரந்தரமாக்க வேண்டும்.

எஸ்.ஆர்.கரன்

# facebook

# யார் பலசாலி?




நான்தான் பலசாலி' 'நான்தான் பலசாலி' என்று சொல்லி சிங்கம் எப்பொழுது பார்த்தாலும் காடு மேடெல்லாம் தற்பெருமை அடித்துக் கொண்டிருந்தது. இந்த செயல் மற்ற விலங்குகளுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. அப்படியிருந்தும் சிங்கத்தின் தற்பெருமையை ஒருவரும் அடக்கமுடியாமல் அடங்கி ஒடுங்கி இருந்தனர். அந்தக் காட்டில் ஒரு குளம் இருந்தது. அதில் நட்சத்திர ஆமை ஒன்று வாழ்ந்து வந்தது. அந்தக் குளத்தை ஒட்டி ஒரு நாவல் மரம் இருந்தது. அதில் வசித்திரன் என்ற அணில் வாழ்ந்து வந்தது. நட்சத்திர ஆமையும், விசித் திரனும் உயிர்த் தோழர் களாகப் பழகி வந்தனர். சிங்கம், அணிலைப் பார்த்து 'மூடனே நான் கீழே இருக்கிறேன். நீ மரி யாதை இல்லாமல் மேலே இருப்பதா? நீ என்னைவிட பெரியவனா? கீழே வந்து என்னை வணங்கி நில். இல்லை தோலை உரித்து கழுகுக்குப் போட்டு விடு வேன்.' என்று அதட்டி யது. அணில் பயந்து போய்ச் சிங்கம் சொன்னது போல் நடந்தது. சிங்கம் சென்றதும் குளத்தை விட்டு வெளியே வந்தது நட்சத்திர ஆமை. தன் நண்பன் அவமானத்தால் தலை குனிந்துநிற்பதைக் கண்ட ஆமை, 'வசித்திரா சிங்கம் சொன்னதற்கு ஏன் கவ லைப்பட்டுத் தலை குனிந்து நிற்கறே? உலகில் வலிமை உள்ளவர்கள் வலிமை அற்றவர்களை அடக்கி ஆள்வதுதானே வழக்கம்? யானையிடம் இப்படி அதனால் சொல்ல முடியுமா? என்று ஆறுதல் சொன்னது. நண்பா சிறிய வர் பெரியவர் என் றாலும் தன்மானம் பொதுதானே? தேவை இல்லாமல் இன்னொருவருக்கு அடங்கி 'சாலம்' போடுவது கேவலம் இல்லையா? அவரவர் படைப்புக்கும், வேற்றுமைக்கும் ஏற்றபடி அவரவர் பலசாலிகள் தானே? என்று கொதித் தது. 'நண்பா உன் ஆதங் கம் புரிகிறது. இதன் கொட் டத்தை அடக்கத்தான் வேண்டும். என்அம்மா இதன் கெடுபிடிக்கு அடங்க மறுத்ததற்காக அதை கொன்றுவிட்டது, எனக்கும் இதைப் பழிக்குப்பழி வாங்க தான் ஆசை. அதை எப்படி செய்யலாம்?'அப்போது அங்கே ஒரு கட்டெறும்பு வந்தது. 'நண்பர்களே! நீங்கள் பேசியதைக் கேட்டு நானும் கோபம் கொண்டேன். சிங்கத்தின் கொட்டத்தை நான் அடக்கு கிறேன். அதோ அந்த ஆலமரத்தடியில் தானே சிங்கம்உறங்கும்.

நாளை அங்கே வந்துவிடுங்கள். 'யார் பலசாலி' என்று நிரூபிக் கிறேன்' என்று ஆல மரத்தில் சென்று தங்கி யது. வழக்கம்போல சிங்கம் ஆலமரத்தடியில் இளைப் பாறியது. ஆமை கல்லுக்கடி யில் மறைந்துகொண்டது. அணில் புதருக்குள் ஒளிந்துகொண்டது. எறும்பு சிங்கத்தின் காதுக்குள் மெதுவாகச் சென்று நுழைந்து கொண்டு குடைந்தும் கடித்தும் இம்சைப்படுத்தியது. சிங்கம் வலி தாங்க முடியாமல், 'ஐயோ... ஐயோ... வலி உயிர்போகுதே. காப்பாத்துங்க காப்பாத்துங்க' என்று அலறியது. 'நீ பெரிய பலசாலிதானே, முடிந்தால் காப்பாற்றிக் கொள்ளவும்'என்று சிரித்தது எறும்பு. அணிலும், ஆமையும் தைரியமாக வெளியே வந்து சிரித்துக் கூத்தாடியன. ஒரு கட்டெறும்பிடம் தன்பலம் பலிக்காமல் போகவே, சிங்கம் தன் ஆணவத்தை கைவிட்டது. ஆமையும், அணிலும், சிங்கத்தை விட்டுவிடும்படி கூறவே, எறும்பு சிங்கத்தின் காதுக்குள் இருந்து வெளியே .வந்தது. அன்றில் இருந்து சிங்கம் தான் மட்டும் பலசாலி என்று சொல்வதை விட்டுவிட்டது.

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 592

Search for people, places and things  Nagendram  Home

மதீஸ் கணேஸ்




ஆதி அரன்

கோடி கோடியாய் சம்பாதித்து வாழ்வது மட்டும்தான் வாழ்க்கையல்ல

இந்த மாதிரி அன்புகாட்ட உயிரையாவது சம்பாதிப்பதுதான் வாழ்க்கை...



பவித்திரா பவி




கம்சா பிரதீபன்

நோய் நொடியின்றி நீண்ட காலம் வாழ பணம் பதவி தேவையில்லை நல்ல துணை இருந்தால் போதும்



கவிமாறன் சிவா




கஜிந்தன் பேரின்பநாதன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ்.மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 14



## சிந்தனைக்கு : மழலைகளின் மனதினிலே...

வளரும் குழந்தைகளின் மனதிலே பெரியவர்களும் பெற்றோர்களும் ஒரு சகலகலா வல்லவர்கள் என்ற மனப்பதிவே இருந்து கொண்டிருக்கும். தம்மை எந்தக் கஷ்டத்திலிருந்தும் பாதுகாப்பார்கள், தாம் விரும்புவதை செய்து தருவார்கள், சரியான பாதையிலே நடத்துவார்கள், நிலாவைக் கூடக் கையில் பிடிக்கும் வல்லமை உள்ளவர்கள், அவர்கள் செய்வதெல்லாம் நல்ல விடயங்களாகத்தான் இருக்கும் என்றெல்லாம் நம்பி கொள்வார்கள். இவ்வாறான ஒரு நிலையில் இந்தக் குழந்தைகளுக்கு முன்னால் பெரியவர்கள் சின்னத்தனமாக நடந்து கொள்ளும் பொழுதும் கோபப்பட்டு தம்மிடையே சண்டை செய்யும் பொழுதும், அழும் பொழுதும், தமது, இயலாமையை வெளிப்படுத்தும் பொழுதும், தீய நடவடிக்கைகளில் ஈடுபடும் பொழுதும் குழந்தைகளின் மன ஓட்டம் குழப்பமடையும்.

இவர்களால் தம்மை பாதுகாக்க முடியுமா என்ற பாதுகாப்பற்ற தன்மை தோன்றும். அந்த சிறிய மனங்களிலே தீய விடயங்கள் ஆழப்பதியும். இது அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கும் ஆளுமை விருத்திக்கும் பெரும் பாதகமாக அமையும். எனவே சிறுவர் முன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற விடயம் பற்றி சிந்திப்பது பயன் தரும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

**கேள்வி - பதில் :** நீரிழிவு நோய்க்கு மாத்திரைகளை பாவிக்காது இயற் கையான உணவுக்கட்டுப்பாடு, உடற் பயிற்சிகள் மற்றும் யோகாசன முறைகள் மூலம் கட்டுப்படுத்துவது சிறந்ததல்லவா? அதன் மூலம் மருந்துகளால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்துக் கொள்ளலாம்.

நீரிழிவு நோய்க்கு மாத்திரைகளால் ஏற்படும் தாக்கங்களிலும் பார்க்க மாத்திரைகள் பாவிக்காமல் விடுவதால் ஏற்படும் நோயின் தாக்கம் பல மடங்கு அதிகமாக இருக்கும். இந்த மாத்திரைகளை நீங்கள் குறிப்பிட்டது போல் உடற்பயிற்சி, உணவுக்கட்டுப்பாடு என்பவற்றுடன் சேர்ந்து பாவிப்பதே சிறந்தது. இதன்மூலம் குறைந்த அளவு மாத்திரைகளுடன் நோய் நிலையை பூரணமான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும்.

## மதுவிலிருந்து விடுபட்டவுடன் ஏற்படக் கூடிய முறைப்பாடுகள்

மதுவுக்கு அடிமையானவர்கள் மதுவின் நச்சுத்தன்மை நீங்கி தொடர்ந்தும் மதுவை உள்ளெடுக்காத ஒரு நிலையில் அவர்கள் பலவிதமான உடல் முறைப்பாடுகளையும் உளவியல் தாக்கங்களையும் வெளிக்காட்டலாம்.

உண்மையில் இவ்வாறான பல முறைப்பாடுகள் அவர்கள் மதுவினை பாவித்துக் கொண்டிருக்கும் போதே ஏற்பட்டிருக்கும். ஆயினும் மதுவானது ஒருவரை மயக்கி அவரது புலன்களைத் திரிபுபடுத்தி நோவையும் வலியையும் தெரியாமற் செய்வதனால் மதுவின் ஆதிக்கத்தில் இருக்கும் ஒருவர் அவ்வேளைகளில் தனது மனக்கவலைகள் பிரச்சினைகள் பற்றி உணராது சந்தோசமாக இருந்தது போன்ற உணர்வைப் பெற்றிருப்பார்.



ஆனால் மதுவிலிருந்து வெளிவரும் போது உடலில் ஏற்கெனவே ஏற்பட்டிருந்த பல பிரச்சினைகள் வெளித் தெரியத் தொடங்கும். அத்துடன் ஒருவருடைய மது பாவனையினால் அவருக்கு குடும்பம் வேலை செய்யும் இடம் மற்றும் சமூகம் போன்ற இடங்களில் ஏற்பட்டிருந்த பிரச்சினைகளையும் அவர் மெல்ல மெல்ல உணரத் தொடங்குவார். இந்தப் பிரச்சினைகளை அவர் உடல் நோய் அறிகுறிகளாகவோ மனக் கலக்கங்களாகவோ வெளிப்படுத்தலாம்.

உடலில் ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகளுக்குத் தகுந்த மருத்துவப் பராமரிப்பு அவசியம். அது போல் உள்ளத் தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு ஆதர வான உளவளத்துணையும் பிரச்சினை தீர்க்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்வதும் மனதைச் சாந்தமானதொரு நிலையில் வைத்துக் கொள்வதும் அவசியமானது.

பொதுவாக பலர் குடிப்பதன் மூலம் தமது பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள முயலுவார்கள். அவர்கள் பார்த்த முன்னு தாரணங்களும் சினிமாக்களும் இதனையே வலியுறுத்துகின்றன.

ஆனால் குடிப்பதனால் எமது பிரச்சினைகளிலிருந்து விடுபட முடியாது என்பதை நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

உண்மையில் குடியை விட்டு வாழும் போது தான் ஒருவர் நிதானமாக சிந்தித்து தேவைப்பட்டால் பொருத்தமான உதவி களைப் பெற்று தனது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

Dr.சா.சிவயோகன்
உளநல மருத்துவ நிபுணர்

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் 0782075424 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.